ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

348

சரணாகதி மாலை.

திருவல்லிக்கேணித்
தமிழ்ச்சங்க வெளியீடு, 55.

சங்கக் காரியாலயம் :

ஆநந்தபிருந்தாவநம்,
ஸ்ரீ மௌனசுவாமிகள் மடத்துத் தெரு,
அம்பத்தூர்.

27-9-1953.

Q22:417
N53
111783

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாயநம:



சரணாகதி மாலை.

திருவல்லிக்கேணித்

தமிழ்ச்சங்க வெளியீடு 55.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS

24 NOV 1953

இது

ஸர்வமங்கள விஜயவாண்டு கன்னித் திங்கள் பதினொன்றும்
நன்னாளன்று திருவல்லிக்கேணி ரதவீதியிலுள்ள
திருவஹோபிலமடத்திருநரசிங்கன்
திருவடிவாரத்தில் இடப்பெற்ற
காணிக்கை.

27-9-1953.

முதற்பதிப்பு—1953

Kabeer Printing Works, Madras (2320)

ஸ்ரீ:

உள்ளுறை.

பக்கம்

முகவுரை. ... 5.

[பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி ரெ. திருமலை அய்யங்கார், தமிழ் வித்துவான், காரியதரிசி, திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்.]

ந்யாஸதசகம்.

(ஸ்ரீவேதாந்த தேசிகர்.)

[பதவுரை பொழிப்புரை விசேட விளக்க வுரையுடன்.] ... 19.

ஸ்ரீ:

முகவுரை.

வாழி யருளாளர் வாழியணி யத்திகிரி
வாழி யெதிராசன் வாசகத்தோர்—வாழி
சரணு கதியென்னுஞ் சரர்வுடன் மற்றென்றை
அரணுகக் கொள்ளாதா ரன்பு.

(—தேசிகமாலை. மெய்விரத நன்னிலத்து மேன்மை. 1)

உலகில் உள்ள ஒவ்வொரு சேதநனும் முக்கியமாக அறிந்து கொள்ள வேண்டுவன மூன்று. அவையாவன, **தத்வம், உபாயம், புருஷார்த்தம்** என்பன. அவற்றுள் **தத்வ மாவது** - ப்ராமாணிகமான பதார்த்தம். அது **சித்து** என்றும், **அசித்து** என்றும், **ஈச்வரன்** என்றும் மூன்று பிரிவானது என்று வேதங்கள் சொல்லும். சித்து என்பது **ஆத்மா. அசித்து** என்பது ஞானம் இல்லாதது. அது பிரகிருதி, காலம், சுத்த ஸத்வம் என்று மூன்று பிரிவு பெற்றது. **ஈச்வரன்** என்பான் ஸர்வ ஜகத்காரண பூதனை **நாராயணன்**. இவற்றின் ஸ்வரூபத்தை உள்ளபடி அறிவதால், ப்ரக்ருதியே ஆத்மா என்றும், ஜீவன் ஸ்வதந்த்ரன் என்றும், ஜீவனும் ஈசுவரனும் ஒன்றே என்றும் உண்டாகும் கலக்கங்கள் நீங்கும்.

புருஷார்த்தமாவது - புருஷனுல் அர்த்திக்கப்படும் பலம். அர்த்தித்தல் - யாசித்தல், அபேக்ஷித்தலாம். அது **த்ரிவர்க்கம்** என்றும், **அபவர்க்கம்** என்றும் இரண்டு வகை. அறமும், பொருளும், இன்பமும் (தர்மார்த்த காமங்கள்) **த்ரிவர்க்கம்** எனப்படும். **அபவர்க்கமாவது** - வீடு, (மோக்ஷம்) எவ்விதத் துக்கமும் இல்லாத அளவு இறந்த ஆநந்தமே **மோக்ஷம்.** அதாவது, பிரகிருதி சம்பந்தம் அற்றதொரு தேச விசேஷத்திலே

அர்ச்சிராதி கதியால் சென்று, "அனைத்து உலகும் உடைய அரவிந்தலோசனனை" என்கிறபடியே ஸர்வலோகாதீச்வரனாய், "ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலா நிற்பக், கண்டசதிர் கண்டு ஒழிந்தேன் அடைந்தேன் உன் திருவடியே" என்கிற படியே லக்ஷ்மீ விசிஷ்டனாய் பரப்ரஹ்ம ரூபியான நாராயணனைக் கிட்டி, எக்காலத்திலும் ஸம்ஸாரகந்தம் அற்றவர்களான நித்ய சூரிகளோடு ஒக்க, ஸர்வதேச ஸர்வகால - ஸர்வாவஸ்தோசித ஸர்வவித கைங்கர்ய பர்யந்தமான பரிபூர்ண ப்ரஹ்மாநுபவம் செய்கை. இது மீட்சி (புநராவ்ருத்தி) இல்லாத பேரடிமையாம். த்ரிவர்க்கமானது நச்வரமானதும், அளவு உள்ளதும், துக்கம் கலந்ததுமாகையாலும், மோக்ஷம் அநந்த ஸ்திரபலமும், துக்கம் கலக்காத கேவலாநந்தம் ஆகையாலும், அவற்றின் ஸ்வரூபத்தை அறிந்து சேதநன் மோக்ஷத்தையே புருஷார்த்தமாகத் தெளிந்து கொள்வன்.

உபாயமாவது - தான் கோரிய பலத்தைப் பெறுவதற்காகத்தான் செய்யவேண்டிய கார்யம். பரமபுருஷார்த்தமான மோக்ஷத்தைப் பெற விரும்புகிறவனுக்கு **உபாஸநமும், ப்ரபதநமும்** உபாயம் என்று சாஸ்திரங்கள் கூறும். **உபாஸநமாவது** - இயமம், நியமம், ஆஸநம், ப்ராணாயாமம், ப்ரத்யாஹாரம், தாரணை, த்யாநம் என்னும் ஏழு அங்கங்களுடன் கூடிய **பக்தியோகம்.** இவ்வங்கம் ஏழுடன் இந்த அங்கியைச் சேர்த்து **அஷ்டாங்கயோகம்** என்பர். இது ஸத்வித்யை, தஹரவித்யை, வைச்வாநரவித்யை, பஞ்சாக்னிவித்யை முதலாகப் பல பிரிவானது. ஜீவ வதை செய்யாமை (அஹிம்ஸை), மெய்மை (ஸத்தியம்), கள்ளாமை (அஸ்தேயம்), பிறர்பொருள் விரும்பாமை, இவை **இயமம்** எனப்படும். தவம், தூய்மை, தத்துவ நூலோர்தல், மனமுவந்திருத்தல், தெய்வம் வழிபடல் இவை **நியமம்** என்ப. ஸ்வஸ்திகம், பாத்மம், வீரம், கோமுகம், மாயூரம், பத்ரம் முதலிய பிரிவுகள் உள்ள இருப்பு **ஆஸனமாம். ப்ராணாயாமமாவது** - முன்னம் வலதுகைக் கடைவிரல் ஆழி விரல்களால் இடது நாசித்துவாரத்தை மூடி வலது நாசி வழியால் பிங்களை யென்னும் நாடியால் முப்பத்திரண்டு மாத்திரை வாயுவை ரேசகம் செய்து, பெருவிரலால் வலது நாசியை மூடி இடை யென்னும் நாடியால் பதினாறு மாத்திரை வாயுவைப் பூரகம் செய்து, அறுபத்திநான்கு மாத்திரை கும்பகம் செய்து முன்பு

போல ரேசகம் செய்தலாம். ப்ரத்யாஹாரமாவது - பூதங்கள் ஐந்து, தந்மாத்திரைகள், ஐந்து, கர்மேந்திரியம் ஐந்து, ஞாநேந்திரியம் ஐந்து, மனம், அஹங்காரம், மஹத்தத்வம், பிரகிருதி என்னும் இவ்விருபத்திநாலு தத்வங்களையும் பரம புருஷனிடத்தில் உபஸம்ஹாரம் (லயிப்பித்தல்) செய்ததாக பாவிப்பதாகும். தாரணை என்பது இவ்விருபத்திநான்கு தத்வங்களையும் லயிப்பித்தலால் ப்ரகிருதி ஸம்பந்த லேசமும் அற்ற ஜீவாத்ம ஸ்வரூப ஜ்ஞாநத்தோடே கூட மனம் ஒன்றாலே அறியத்தக்கவனான பரம புருஷனது திருமேனியில் விஷயாந்தரங்களிற் செல்லாதபடி மனத்தைத் திருப்பி "அளப்பில் ஐம்புலன் அடக்கி அன்பு அவர்கண்ணே வைத்து" என்கிறபடியே நிலை நிறுத்தலேயாம். த்யாநமாவது - பரமாத்ம ஸ்வரூபத்தை தைலதாரைபோல் இடைவிடாது சிந்தித்திருத்தலேயாம். ஸமாதியாவது - ஜீவாத்மா த்யாநம் செய்வதாகவும், பரமாத்மா த்யாநிக்கப்படுவதாகவும், இவ்விரண்டும் தோன்றாமே பரமாத்மா ஒன்றையே விஷயீகரித்து இடை வெளிவிடாதே தைலதாரை போல் சிந்தித்திருத்தலாம்.

பகவத்கீதையில் அருளிச் செய்தவாறே கர்மயோகத்தால் ஜ்ஞான யோகசித்தி பெற்று அதனால் பக்தி யோகம் சித்திக்கப் பெற வேண்டுமாகையாலும், இதில் த்ரை வர்ணிகர்க்கு மாத்திரமே அதிகாரமாகையாலும், வர்ணாச்ரம தர்மங்கள் இதற்கு அங்கமாயிருக்கையாலும், பலம் கைகூடும் அளவும் அநுஷ்டிக்கவேண்டுமாகையாலும், இதற்கு அந்திமஸ்மிருதி அபேக்ஷிதமா யிருக்கையாலும், இதனால் பெறக்கடவதான மோக்ஷம் ப்ராரப்தாவஸாநத்திலே யாகையாலும், ப்ராரப்தங்கள் எல்லாம் எந்த ஜன்மத்தில் கழியுமோ அதை அறிய முடியாதாகையாலும், அதற்கு சக்தியும் ஜ்ஞானமும் அதிகமாக வேண்டுமாகையாலும், அதில் அதிகாரம் இல்லாதவர்கள் ந்யாஸவித்யையில் இழிந்து பலத்தைப் பெறுவார்கள்.

ந்யாஸவித்யையாவது - ஆநுகூல்ய ஸங்கல்பம், ப்ராதிகூல்ய வர்ஜநம், கார்ப்பண்யம், மஹாவிச்வாசம், கோப்த்ருத்வ வரணம் என்னும் இவ்வைந்து அங்கங்களோடே கூடினதாய், சரணாகதி என்றும், நிக்ஷேபம் என்றும், த்யாகம் என்றும், ப்ரபத்தி என்றும் சொல்லப் பெறுகிற ஓர் வித்யையாம். அஷ்டாங்கயோகம் என்றது போல் இவ்வங்கங்கள் ஐந்துடன்

கூடின அங்கியான பரந்யாஸத்தை ஷடங்கயோகம் என்று சொல்லுவார்கள். இது ஸர்வாதிகாரம். வர்ணுச்ரம தர்மம் இதற்கு அங்கம் அன்று. ஸக்ருத்கர்த்தவ்யம். அந்திம ஸ்மிருதி அபேக்ஷிதமன்று. இந்த ஸரீரம் விட்டபோதே பலம் ஸித்தம். உபாஸநத்தில் சக்தி யில்லாமையும், அதற்கேற்ற ஜ்ஞான மில்லாமையும், சாஸ்த்ராநுமதமான ஜாதி குணுதிக ளில்லாமையும், பலத்தைப் பெறக் கால விளம்பம் பொருமையும் என்னும் இந்நான்கும் தனித்தும் ஒன்றிரண்டு மூன்றுகளுடன் சேர்ந்தும் ப்ரபத்திக்கு அதிகாரம் ஆகும். அந்த அதிகாரமாவது 15 பிரிவாகிறது. அசக்தி மாத்திரம் 1. அஜ்ஞாந மாத்திரம் 2. சாஸ்த்ரா நநுமதி மாத்திரம் 3. விளம்பம் பொருமை மாத் திரம் 4. அசக்தியும் அஜ்ஞாநமும் சேர்ந்து 5. அசக்தியும் சாஸ்த்ரா நநுமதியும் சேர்ந்து 6. அசக்தியும் விளம்பம் பொருமையும் சேர்ந்து 7. அஜ்ஞாநமும் சாஸ்த்ராநநு மதியும் சேர்ந்து 8. அஜ்ஞாநமும் விளம்பம் பொருமையும் சேர்ந்து 9. சாஸ்த்ராநநு மதியும் விளம்பம் பொருமையும் சேர்ந்து 10. அசக்தியும் அஜ்ஞாநமும் சாஸ்த்ராநநு மதியும் சேர்ந்து 11. அசக்தியும் சாஸ்த்ராநநு மதியும், விளம்பம் பொருமையும் சேர்ந்து 12. அசக்தியும் அஜ்ஞானமும் விளம்பம் பொருமையும் சேர்ந்து 13. அஜ்ஞாநமும் சாஸ்த்ரா நநுமதியும் விளம்பம் பொருமையும் சேர்ந்து 14. அஜ்ஞாநமும் அசக்தியும் சாஸ்த்ரா நநுமதியும் விளம்பம் பொருமையும் இந் நான்கும் சேர்ந்து 15. இப்படி இந்நான்கும் சேர்ந்தால் ஒன்று; தனித்தனி நான்கு; இரண்டிரண்டு சேர்ந்தால் 6; மும்மூன்று சேர்ந்தால் நான்கு; ஆகப் பதிணேந்து ஆகிறது. இவைகளில் எந்த விதமான அதிகாரம் உடையவனுைலும் ந்யாஸவித்யையில் அதிகாரி தான்.

ஆழ்வார், ஸ்ரீமந்நாதமுனிகள், ஆளவந்தார், ஸ்ரீபாஷ்யகாரரர் முதலிய பூர்வாசார்யர்கள் சக்தி, ஜ்ஞாநம், சாஸ்த்ராநுமதி, இம் மூன்றும் உடையவர்களாயிருந்தும் விளம்பம் பொருமையாலே ப்ரபத்தியில் இழிய வேண்டி வந்தது. ஸ்ரீமந்நாத முனிகள் யோகம் செய்தருளினதாகச் சொல்வதுண்டு. அது மோக்ஷோபாயமான பக்தி யோகம் அன்று. பகவதநுபவ ரூப மாகையாலும், ஸ்ரீராமாயணுதி பாராயணம் போலே சித்த ஸந் தோஷஹேதுவானகாலக்ஷேபமாத்ரமாகையாலும், த்வய மர்த்தாநு

ஸந்தாநேந ஸஹஸதைவம் வக்தா என்கிறபடியே த்வய வசநம் போலே பலரூபம்.

ஆநுகூல்ய ஸங்கல்பமாவது - இனி நான் அநுகூலனாய் நடந்து கொள்ளக்கடவேன் என்று அபிஸந்தி பண்ணுதல். அது இருவகைப்படும். எம்பெருமான் விஷயத்தில் ஆநுகூல்ய ஸங்கல்பமும், ஸர்வபூதங்கள் விஷயத்தில் ஆநுகூல்யஸங்கல்பமும். இதற்குக் காரணம் இவன்தான் ஸர்வேச்வரனுக்கு ஸர்வப்ரகாரத்தாலும் சேஷபூதன் என்று தெரிந்திருக்கை. சேஷபூதன் சேஷிக்கு அநுகூலனாயிருக்கவேண்டியது போலே ஸர்வபூதங்களும் தன்னைப்போலே ஸர்வேச்வரனுக்கு சேஷபூதங்களென்றும் அவனுக்கு சரீரபூதங்களென்றும் இவன் அறிந்திருக்கையாலே சேஷியின் சரீரத்துக்கும் இவன் அநுகூலனாயிருக்கவேண்டியது கடமை. இதற்கு பலம்தான் ஈச்வராஜ்ஞையை கடந்தானாகாமை. இதற்கு விரோதி பூதத்ரோஹம். இவன் சேஷியின் ஆஜ்ஞையைக் கடந்தானாகில் "என்னை ஈச்வரன் தண்டிப்பனேயல்லது அங்கீகரியான்" என்று தெரிந்து கொள்வன்; அதனால் ப்ரபத்தியில் ப்ரவர்த்தியான்; ஆகையால் இவ்வழியாம் இது ப்ரபத்திக்கு அங்கம் ஆகிறது.

ப்ராதிகூல்யவர்ஜநமாவது - ப்ரதிகூலாசரணம்பண்ணக் கடவேனல்லேன் என்று அபிஸந்தி பண்ணுதல். அதுவும் இருவகைப்படும். ப்ரதிகூலாபிஸந்தி நீக்குகைமாத்திரமும், ப்ராதிகூல்ய வர்ஜநம் செய்யக்கடவேன் என்று ஸங்கல்பிக்கையும். இவ்விரண்டும் முன்பு போலத் தனித்தனி ஸர்வேச்வரன் விஷயத்திலும் ஸர்வபூத விஷயத்திலும் என்று இரண்டு வகை. ஆகையாலே, பகவதநபிமதவர்ஜநம், ஸர்வபூதா நபிமத வர்ஜநம், பகவதநபிமத வர்ஜந ஸங்கல்பம், ஸர்வபூதாநபிமதவர்ஜந ஸங்கல்பம் என்று இவ்வங்கம் நான்கு வகையாகிறது. இதற்குக் காரணம் முன்பு சொன்ன சேஷத்வஜ்ஞானமே, ப்ராதிகூல்ய வர்ஜந ஸங்கல்பம் அங்கமாகும்போது சேஷத்வஜ்ஞாநத்தோடு கூடிய மனத்தினால் அநுஷ்டாநத்தில் ஸங்கல்பிக்க வேண்டும். ப்ராதிகூல்யவர்ஜநாபிஸந்தி மாத்ரம் அங்கமாகும் போது மனத்தில் சேஷத்வஜ்ஞானமும் நிஷேத சாஸ்த்ர பர்யாலோசனையும் கூடுகையாலே ப்ரதிகூலாபி ஸந்தியை நீக்கி வைக்கும். இதற்கு விரோதியாவது அசாஸ்த்ரீய ஸேவநம். இதற்கு பலமும் இது அங்கமாம் வழியும் முன்பு சொன்னதேயாம்.

கார்ப்பண்யமாவது - ஸ்வா பேக்ஷித பலத்தைப் பெறுகைக்கு வேறோர் உபாயமில்லாமையும் வேறொரு ரக்ஷகன் இல்லாமையும். இது இங்கு சொன்ன ஆகிஞ்சந்யம் அநந்ய கதித்வம் இவைகளை அநுஸந்தித்தலும், ஆகிஞ்சந்யாதிகளை அநுஸந்திப்பதால் வரும் கர்வஹாநி (செருக்கு நீங்கல்)யும், ஸர்வேச்வரனுக்குத் தன் விஷயத்தில் க்ருபை அதிகமாகும்படி தழுதழுத்து அழுதல், பற்களைக் காட்டல்களோடு திருவடிகளில் விழுதல், கைகூப்பி நிற்றல் முதலிய க்ருபண வ்ருத்தியும் என்று மூன்று வகையாயினும், இம் மூன்றும் ஸமநியதமாகையாலே ஒன்றை அநுஷ்டித்தலாலே மற்ற இரண்டும் அநுஷ்டிதமாகுமாகையாலே இம் மூன்று வகையில் ஏதாவது ஒன்றை அநுஷ்டிப்பதே போதும். இதற்குக் காரணம் தான் அல்பசக்தியென்றும், ஈச்வரனுக்குப் பரதந்த்ரன் என்றும் தெளிகை. இதற்கு பலம் வேறுபாயங்களில் ப்ரவர்த்தியாமை. இதற்கு விரோதிதான் ஸ்வதந்த்ரன் என்று நினைத்தல். அப்படி இவன் நினைத்தானுகில் தான் ஸமர்த்தன் என்று ப்ரமித்து உபாயாந்தரங்களில் ப்ரவர்த்திக்கவும் கூடும். ஆகையாலே ஸர்வேச்வரன் ஒருவனே உபாயம் என்று அத்யவஸிக்கையாகிற ப்ரபதநம் கைகூடாது ஒழியும். ஆகையாலே இவ்வழியாயிது அங்கமாகிறது. இதன் பிரிவுகள் மூன்றில் என்கையில் உபாயமில்லை என்று அநுஸந்திப்பது என்னும் கார்ப்பண்யம் கீழ்ச் சொன்ன காரணமான அல்பசக்தித்வ பகவதேக பரதந்த்ரத்வஜ்ஞானத்தோடும் அநுபலப்தியோடும் சேர்ந்த ப்ரத்யக்ஷ ப்ரமாணத்தால் உண்டாகின்றது. கர்வஹாநியென்னும் கார்ப்பண்யமானது, ஆகிஞ்சந்யாநுஸந்தாநத்தாலே உண்டாகின்றது. க்ருபண வ்ருத்தியாகிற கார்ப்பண்யமானது, இவன் ஸம்ஸாரத்திற்கு மிகவும் பயந்தவனுகையாலும், அகிஞ்சநனுகையாலும், ரக்ஷிக்க வல்லனுய் பரமதயாளுவான ஸர்வேச்வரன் விஷயத்தில்தானே உண்டாகிறது.

மஹாவிச்வாஸமாவது - ஸர்வேச்வரன் நாம் செய்யும் வ்யாபாரத்தை எதிர்பாராமலே (நிரபேக்ஷனுய்) ரக்ஷிப்பவன் என்கிற அத்தியவஸாய (திடநிச்சய)மாம். ப்ரபதநாநுஷ்டாநத்திற்குப் பின்பு ப்ருஹஸ்பதி போன்ற மஹான்கள் யுக்திகளாற் கலக்கினுலும் கலங்காமலும் அணுவேனும் ஸம்சயம் உதியாமலும் இருக்கும்படித் கேதுவாகத்தக்கதாய் ப்ரபதனம் பண்ணும் போது உண்டாகும் விச்வாஸம் என்று நிக்ஷேபரக்ஷை என்னும் கிரந்

தத்தில் நிர்ணயித்துள்ளது. இதற்குக் காரணம் மறுக்க வொண்ணுத புருஷகாரயோகமும், ஒழிக்க வொழியாத சேஷ சேஷிபாவ ஸம்பந்தயோகமும், நிருபாதிகமான காருண்ய வாத்ஸல்யாதி குணயோகமும், வேருெரு ஸ்ஹகாரியை எதிர்பாராதிருத்தலும், தண்ணியரான (அகிஞ்சநரான)வர்களுடைய புருஷார்த்தமே தன் புருஷார்த்தமாய் நினைப்பதுமாகிற எம்பெருமானது ஸ்வபாவத்தை அநுஸந்தித்தல். இதற்கு உபயோகம் ஸர்வஜ்ஞனும் ஸர்வசக்தனுமான ஸர்வேச்வரன் அநந்தமான அபராதங்களையுடைய நமக்குக் கிட்ட எளியவனுவனே? அவரவர் கர்மங்களுக்கு ஏற்றபடி பலங் கொடுப்பவன் மோக்ஷ விரோதியான பல தீவினைகளையுடைய நமக்கு அளவில்லாத பலத்தைக் கொடுப்பனே? இதரர் செய்யும் உபகாரத்தை அபேக்ஷியாதவன் அல்ப வ்யாபாரத்துக்குப் பலம் கொடுப்பனே? தேவதாந்தரங்கள் போலே சீக்ர பலப்ரத னல்லனுனவன் நாம் கோரின காலத்திலே பலங் கொடுப்பனே? தன்னில் அதிகரும் ஸமருமில்லாத ஸர்வோத்தமன் அதிநீசரான நமக்குப் பலங் கொடுப்பனே? என்று பிறக்கும் சங்கைகள் ஐந்தும் நீங்குகை. இச்சங்கைகள் உண்டானல் ப்ரபதனம் கைகூடாது. இவ்வழியால் இது அங்கமாகிறது. இதற்கு விரோதி ஈச்வரன் உபேக்ஷிப்பவன், கர்மாநு குணமாகப் பலங் கொடுப்பவன் என்பவை போன்றவையும் கீழ்ச் சொன்ன சங்கைகள் உதிக்க ஹேதுக்களுமான ஈச்வரனது ஸ்வபாவங்களை அநுஸந்தித்தல். கீழ்ச் சொன்ன புருஷகார யோகம் முதலியவைகளை அநுஸந்திப்பதனுல் இச்சங்கைகள் ஐந்தும் நீங்கி ப்ரபதநம் கைகூடும். சங்கைகள் நீங்கும்படியாவது—ஈச்வரன் ஸர்வஜ்ஞனுகையாலே நாம் செய்த அபராதங்களை அறிந்தவனுயும், ஸர்வசக்தனுகையாலே நம்மை தண்டிக்க சக்தனுயு மிருந்தாலும் தனக்கு ப்ரியதமையான பிராட்டியாகிற மறுக்க வொண்ணுத புருஷகாரத்தாலே மனக்கலக்கம் நீங்குகையாலே அந்தப்புர பரிஜனங்கள் பெரிய குற்றம் செய்தாலும், தன் பத்நிக்காக அதை ராஜா மறந்துவிடுவது போலே நம் அபராதங்களையும் மறந்தவன் போல் க்ஷமித்து நிற்பவனுகையாலே நமக்குக்கிட்ட எளிதாவன் என்றும், நற்கருமங்களுக்கு நற்பயனும், தீக்கருமங்களுக்குத் தீயபயனும், பெரிய கர்மங்களுக்குப் பெரிய பலனும், சிறிய கர்மங்களுக்குச் சிறிய பலனும் என்று அவர் அவர் கர்மங்களுக்கு ஏற்றபடி பலன் கொடுப்பவனேயானுலும், ஒழிக்க வொண்ணுத சேஷ சேஷி

பாவாதி சம்பந்தம் உண்டாகையாலேயும், பலம் நமக்குத் தாயம் போல் கிடைக்கக் கடமைப்பட்டிருப்பதனுலேயும், இப் ப்ரபதனம் என்னும் வ்யாஜ மாத்திரத்தாலே ப்ரஸந்நனுய் அளவில்லாத பலத்தையும் தரும் என்றும், இதரர் செய்யும் உபகாரத்தில் நிரபேக்ஷனுனுலும் காருணிகனுன ராஜா அல்பவ்யாஜத்தாலே வசமாவது போல நிருபாதிகமான காருண்யம் வாத்ஸல்யம் முதலிய குணங்களே உடையவனுகையாலே இவன் செய்யும் சிலவான வ்யாபாரங்களேப் பரமோபகாரமாக ஆதரித்து க்ருதஜ்ஞனுய்ப் பலந்தரும் என்றும், தேவதாந்தரங்களேப் போலே விரைவில் பலங் கொடாதவனேயானுலும் தேவதாந்தரங்களேச் சிறிது அதிகாரிகளுக்குச் சில பலங்களே த்வரையில் கொடுக்கும்படி நியமித்து வைத்துத் தான் விளம்பித்துப் பலந்தருமவனேயானுலும், அகிஞ்சனன் செய்யும் சரணுகதி விஷயத்தில் "வேண்டாது சரணநெறி வேருேர் கூட்டு" என்கிறது போல ஸஹகாரியை எதிர்பாராத தன் ஸங்கல்பத்தாலே இவன் கோலின காலத்திலே பலங் கொடுக்கும் என்றும், "ஒத்தார் மிக்காரை யிலேயாய மாமாயா" என்கிறபடியே ஸமாதிக ரஹிதனேயாகிலும் தான் ஸ்வதந்த்ரனுகையாலும் நம் புருஷார்த்தத்தைத் தன் புருஷார்த்தமாக நினேப்பவனுகையாலும், ராஜாக்கள் தன் பிள்ளேகளுக்கும் கிளி முதலிய பக்ஷிகளுக்கும் துல்யமாகப் பாலூட்டுவது போலவும், "புற்பா முதலாப் புல்லெறும்பாதி யொன்றின்றியே, நற்பால் யோத்தியில் வாழுஞ் சராசரம் முற்றவும், நற்பாலுக்குய்த்தனன்" என்கிறபடியே கோஸல தேசத்தில் உள்ள புல் பூண்டு முதலாக எல்லாச் சேதனு சேதனங்களுக்கும் மோக்ஷம் கொடுத்தது போலவும், நமக்கும் அளவிலாப் பெரும் பலந்தரும் என்றும் இம் முறையே கண்டு கொள்வது. இப் புருஷகாராதிகள் ஐந்தும் ஸதாசார்யோப தேசத்தாலே அறியவேண்டும். இம் மஹாவிச்வாஸம் முதலில் சாஸ்த்ரம் ப்ரமாணம் என்னும் நிச்சயத்தால் பிறக்கும்; மேன்மேல் அந்த ஸம்ஸ்காரத்தாலும் கீழ்ச் சொன்ன சங்காபஞ்சக நிவ்ருத்தி ஹேதுகரமான நிச்சயத்தாலும் ப்ரபதனுநுஷ்டாந காலத்தில் அதுபோலவே மஹா விச்வாஸம் பிறக்கும். ஸர்வேச்வரன் இவனிடத்தில் ஒரு வ்யாஜத்தை வையாமல் ரக்ஷிக்குமானுல் வைஷம்யமும் நைர்க்ருண்யமும் வரும் என்பதற்காக ப்ரபத்தி என்று ஒரு வ்யாஜத்தை வைத்து ரக்ஷிக்கிருன் ஆகையாலே நாம் செய்யும் ப்ரபதநம் ஒரு வ்யாஜ மாத்ரம் என்று

தெளிய வேண்டும். சாஸ்த்ரம் பரமாணம் என்று தெளிந்த போதே ஸம்சயம் நீங்குகையாலே அவன் விச்வாஸத்தை உடையவன் ஆகிறுன். அவன் ப்ரபதநம் செய்ய அதிகாரி. ஆகையாலே விச்வாஸம் அங்கமானுல் போதுமே, விச்வாஸம் பெரிதாயிருக்க வேண்டும் என்பது என்னவெனில்? தான் மஹாபராதியாய் அபேக்ஷிக்கும் பலம் மஹத்தரமாய் அதற்காகச் செய்யும் உபாயம் லகுவாயிருப்பதனுலே அவ்விஷயமாய் வரும் சங்கைகளே அதற்குத் தக்கபடி நீக்கிக் கொள்ள வேண்டியது கடமையாயிருக்கிறதாகையாலே மஹாவிச்வாஸம் அங்கமாக வேண்டியதாயிற்று என்று ந்யாஸ விம்சதியில் அருளிச்செய்யப் பெற்றுள்ளது. இதற்கு விரோதியாகக் கீழ்ச்சொன்ன ஈச்வரஸ்வபாவஜ்ஞானம் அநுஷ்டான காலத்தில் உண்டாகுமானுல் இம் மஹாவிச்வாஸம் அங்கமாக வேண்டும். இல்லையானுல் முன் சொன்னபடி விச்வாஸமே அங்கமாகும். அப்போது மஹத்வம் உபயுக்தம் அன்று. ஆனுல் பிற்காலத்தில் சங்கைகள் பின் நாடாதபடி இவ் விச்வாஸம் திடமாய் நிலே நிற்கும் விஷயத்தில் உபயோகிக்கின்றது, என்பது ஸாராம்சம்.

கோப்த்ருத்வவரணமாவது – 'நீ எனக்கு ரக்ஷகனுக வேண்டும்' என்று பிரார்த்தித்தல். இதற்குக் காரணம் ஈச்வரன் ஸமர்த்தன், காருணிகன் என்று தெளிகை. இத் தெளிவு உண்டானுல் 'நீ ரக்ஷிக்கவேண்டும்' என்று ப்ரார்த்திக்கை தானே ஸித்திக்கும். இதற்கு விரோதி ஈச்வரன் தயாதிகுணம் அற்றவனுகையாலே உதாஸீநன் என்று நினேத்தல். இதற்குப் பலம் பலங்கொடுக்கவேண்டும் என்று ஈச்வரனுக்குத் திருவுள்ளம் உண்டாதல். ஈச்வரன் ஸர்வஜ்ஞனுய் ஸர்வ சக்தனுய் பரம காருணிகனுய் இருந்தாலும் இச் சேதநனன் தனக்கு ஸ்வரூப ப்ராப்தமான மோக்ஷத்தை இழந்து அநாதிகாலம் ஸம்ஸார ஸாகரத்தில் முழுகி அழுந்தித் துயர்உற்று இருந்தாலும் அவன் அர்த்தியாதே கொடுத்தால்தான் புருஷார்த்தம் கொடுத்தவனுக மாட்டான் ஆகையாலே நாம் ரக்ஷிக்கவேண்டும் என்று அபேக்ஷிக்கவேண்டியது கடமையாய் இருக்கிறது. ஆகையால் இந்த கோப்திருத்வ வரணத்துக்குப் பலங்கொடுக்கவேண்டும் என்று ஈச்வரன் திருவுள்ளமாகை பலம். இது இல்லையானுல் ஈச்வரனுக்குத் திருவுள்ளம் இரங்காதாகையாலே பலம் கொடான் என்று நினேத்து அதனுல் ப்ரபத்தியில் இழியா தொழிவன். இவ்வழியாய் இது

அங்கமாகிறது. இது ஸம்ஸார ஸாகரத்தில் அழுந்தித் துன்புற்று அகிஞ்சனனுய் ப்ரபதநம் பண்ணுமவனுக்கு ஈச்வரன் ஸமர்த்தன், காருணிகன், ரக்ஷகன் என்கிற தெளிவோடு கூடிய மனத்தினுலே அநுஷ்டாந காலத்தில்தானே உண்டாகும். இவ்வைந்தும் ப்ரபத்தியென்னும் ந்யாஸவித்யைக்கு அங்கம். இவ்வைந்து அங்கங்களுக்கும் விரோதியாகக் கீழ்ச்சொன்னவை ஐந்தும் நீங்கப்பெறுகை உபாங்கமாம்.

இவ்வைந்து அன்றியில் நிவ்ருத்தி தர்மங்கள் எல்லா வற்றிற்கும் பொதுவாய் **ஸாத்விகத்யாகம்** என்று ஒரு அங்கம் உண்டு. அதாவது, இக்கர்மத்தை யான் செய்யவில்லே; இதன் பலம் என்னுடையதல்ல; இதற்கு யான் ஒன்றையும் பலமாகக் கோரவில்லே; ஒரு பலத்துக்காக இதை யான் செய்யவில்லே என்ற அபிஸந்தியோடே "ஸர்வேச்வரனே ஸவரூபஸ்திதி ப்ரவ்ருத்தி களில் தன்னதீனனுயுந் தனக்கே சேஷனுயும் உள்ள என்னேக் கொண்டு தன்னுடைய ஸாமக்ரிகளாலே தன்னே ஆராதிப்பதற் காகவே தனக்குச் சேஷமான இக்கர்மத்தைத் தன் ப்ரீதிக்காகவே தானே செய்து வைக்கிருன்" என்று துவக்கும்போதும் "செய்து வைத்தான்" என்று முடிக்கும்போதும் அநுஸந்திக்கை. இது இங்கே அங்கங்களுக்கும் உண்டு, அங்கிக்கும் உண்டு. இதற்குக் காரணம் நாம் எம்பெருமானுக்குச் சேஷபூதர் என்றும், அவ னுக்குப் பராதீனர் என்றும் தெளிகை. இதற்கு விரோதி தனக் கொரு பலம் வேண்டும் என்று அபேக்ஷிக்கை. இவ்விரோதி நீங்குகை, இதற்கு உபாங்கமாம். இவ்வுபாங்கங்களால் அங்கங் களும் அங்கங்களால் அங்கியும் நிறைவேறும்.

அங்கியாவது **ஆத்மநிக்ஷேபம்.** அதாவது, ஸர்வ சேஷி யாய் ஸர்வரக்ஷகனுயிருக்கும் ஈச்வரனுக்கு நாமும் சேஷபூதராகை யாலே, நம்முடையவும், நம்மைச் சேர்ந்தவர்களுடையவும் ரக்ஷ ணத்திலும் ரக்ஷண பலத்திலும் நமக்கு ஸம்பந்தம் இல்லே என்று தெளிவுடன் அத்யந்த பாரதந்த்ரியத்தோடே கூடின சேஷத்வாநு ஸந்தானமும், ரக்ஷணபாரத்தை அவனிடத்தில் வைக்கையும்; இதில் பரந்யாஸம் முக்யமாகையாலே **பரஸமர்ப்பணம், பரந் யாஸம்** என்பர். 'நீயே ரக்ஷிக்கவேண்டும்' என்று ப்ரார்த்திக் கையாலே **ப்ரபத்தி, சரணுகதி** என்பர். கீழ்ச்சொன்ன அஷ்டாங்க யோகத்தை உபாயபக்தி என்றும், இங்குச்சொன்ன ப்ரபத்திஎன்னும் ஷடங்கயோகத்தைப் **பலபக்தி (ஸாத்யபக்தி)**

என்றும் சாஸ்த்ரங்கள் சொல்லும். பாப புண்யங்கள் ப்ராரப்தம் என்றும் அப்ராரப்தம் என்றும் இருவகைப்படும். இவன் செய்த கர்மங்கள் அனந்தமாயிருக்கையாலே அவற்றில் சிலவற்றைப் பிரித்து 'இவற்றை முன்னம் அநுபவிக்கட்டும், பின்னுல் மற்றதைச் சில சில பிரிவாய் அநுபவிக்கச் செய்யலாம்' என்று வைக்கையாலே பலங்கொடுக்கத் தொடங்கியவை ப்ராரப்தங்களாம். ஏனையவை அப்ராரப்தங்களாம். அப்யுபகத ப்ராரப்தம் என்றும், அநப்யுபகத ப்ராரப்தம் என்றும் ப்ராரப்தங்கள் இரண்டு வகை. ப்ராரப்தங்கள் சிலவற்றை அந்தந்த ஜந்மங்களில் அநுபவிப்பதாய் இசைந்து வருகையாலே அவை அப்யுபகத ப்ராரப்தங்கள். மற்றவை அநப்யுபகத ப்ராரப்தங்கள். அஷ்டாங்க யோகமானது அப்ராரப்த கர்மங்களை மாத்ரமே நீக்கும். ப்ரபத்தி அப்யுபகத ப்ராப்தம் நீங்கலான மற்ற எல்லாக் கருமங்களையும் நீக்கும். இப்ரபத்தியால் ப்ரஸந்நனுன ஸர்வேச்வரன் தான் உபாயாந்தர ஸ்தாநத்திலே நின்று மோக்ஷம் கொடுக்கும். அதாவது, இவன் ப்ராரப்தாவஸாநம் வரையில் பக்தியோகம் செய்தால் தான் கொடுக்கும் மோக்ஷத்தை இன்று ஒருகால் இவன் ப்ரபத்தி செய்வதால் தான் ஸந்தோஷித்து அந்த பக்தி யோகத்தின் ஸ்தானத்தில்தான் நின்று இவன் கேட்ட காலத்தில் மோக்ஷம் கொடுக்கிருன் என்கை. இப்ரபத்தி ஸகல பலத்துக்கும் ஸாதநம்.

இந்யாஸ வித்யைச்ருதிகளில் பலவாறு புகழ்ந்து விதித்திருக்கிறது; பகவத் சாஸ்திரங்களிலும், ஸ்மிருதிகளிலும், இதிஹாஸ புராணங்களிலும் இது ப்ரகாசிதம். ஆதிமுதல் அந்தம் இச் சரணுகதியையே முக்கியமாகச் சொல்லுகையாலே இதிஹாஸோத்தமமான ஸ்ரீ ராமாயணத்தை சரணுகதி ஸாரம் என்றும் தீர்க்க சரணுகதியென்றும் மேலோர் சொல்வது. ப்ரபந்த ஸந்தான கூடஸ்தரான நம்மாழ்வார் வானமாமலைத் திருவடிகளிலே ஸாங்கமாக ரக்ஷாபர ஸமர்ப்பணம் பண்ணுகிற 'நோற்ற நோன்பிலேன்' என்கிற திருவாய் மொழியிலே இவ்வங்காங்கிகள் அடைய அருளிச் செய்யப்பெற்றுள்ளன.

உலகம் வாழவேண்டும் என்ற உத்தம நோக்கத்துடன் சீரார் **தூப்புல் திருவேங்கடநாதன்** பிராகிருதம், ஸம்ஸ்கிருதம், தமிழ் முதலிய பாஷைகளில் பாலர் முதல் கற்றுக் கடைத்தேறும் வண்ணம் அநேக கிரந்தங்கள் செய்துள்ளனர். "ஸ்ரீரங்கத்தில் ஓர் புறச்சமயி வைஷ்ணவ மதத்தைத் தூஷித்து, அதை

ஸ்தாபித்துக்கொண்டபிறகு திருவத்யயனேத்ஸவத்தை நடத்தக் கடவதென்று உத்ஸவத்தை நிறுத்திவைக்க, அங்குள்ளார் அவனை ஜயிக்கமுடியாமல் பெருமாள் கோயிலினின்றும் இவரை வரவழைத் தார்கள். இவர் அங்கு எழுந்தருளி அவனை வென்று உத்ஸவத்தை நடப்பித்தார். இப்படி இவர் வேதாந்த ஸித்தாந்தத்தை ஸ்தாபித்த மையால் ஸ்ரீரங்கநாதன் வேதாந்தாசார்யர் என்கிற பட்டப் பெயரையும், ஸ்ரீரங்கநாச்சியார் இவர் பாண்டித்யத்தை மெச்சி ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர் என்கிற பட்டப் பெயரையும், அங் குள்ள பெரியோர்கள் கவிதார்க்கிகசிம்மம் என்கிற பட்டப் பெயரையும், இவருக்கு ப்ரஸாதித்தார்கள். இவரது ஸர்வ தந்த்ர ஸ்வதந்த்ர என்னும் பட்டப் பெயரைப் பொருமல் அநேகர் தம் தம் தந்த்ரங்களில் இவருடன் வாதம் செய்து ஸர்வ ப்ரகாரத்தாலும் பராஜிதரானுர்கள். இவருடைய ப்ரபாவத்தை வைபவ ப்ரகாசிகை முதலியவைகளில் கண்டுகொள்வது. இவரை வடக்குத் திருவீதிப் பிள்ளை குமாரரான பிள்ளை லோகாசார்யர் முகமாக அக்காலத் துள்ள சில பெரியோர்கள் ப்ரபத்தி சாஸ்த்ரார்த்தத்தை ஸங்கிரஹ மாக ச்லோக ரூபமாய்ச் செய்து தரும்படி கேட்க, இவர், ந்யாஸ விம்சதியைச் செய்தருளி அதன் அநுஷ்டாந ப்ரகாரத்தைத் தெரிவிக்கும்படி இக்கிரந்தத்தையும் (ந்யாஸ தசகம்) அருளிச் செய்தார். (ந்யாஸ தசகம், நூலாசிரியர் வரலாறு, பக்கங்கள் 32-33. விஜய ஹு புரட்டாசி மீ 1893.)

ந்யாஸம் என்பது ஓர் வித்யை. அது மோக்ஷோபாயங் களில் ஒன்று. அது விஷயமான தசகம்-பத்து. பத்து சுலோ கங்கள் அடங்கிய கிரந்தம். ஆகவே அதற்கு ந்யாஸ தசகம் என்று திருநாமமாயிற்று. அதில் த்வயத்தின் அர்த்தமும் ஸங்க் ரஹிக்கப்பெற்றிருக்கிறது. முதல் மூன்று சுலோகங்களில் பூர்வ கண்டத்தின் பொருளும், மேல் ஒரு சுலோகத்தில் உத்தர கண்டத்தின் அர்த்தமும், மேல் ஐந்து சுலோகங்களில் உத்தர க்ருத்யத்தின் ப்ரகாரமும் இறுதி ச்லோகத்தில் ஸாத்விக த்யாகமும் நிருபிக்கப்பெற்றுள்ளது.

தனக்குவமையில்லாத சீரும் சிறப்பும் எய்தி ஓங்கி விளங்கும் "ந்யாஸதசகம்" தமிழில் சுலோகம், பதவுரை, பொழிப்புரை, விசேட விளக்கவுரை இவற்றிைேடு "சரணுகதி மாலை" என்ற திருநாமத்துடன் இச்சங்கத்தின் ஐம்பத்தைந்தாவது வெளி யீடாகப் பிரசுரிக்கலாயிற்று.

இம்மாலைக்குப் பூரணபொருள் உதவி புரிந்த புண்ணியர் **ஸ்ரீமான் கே. பாஷ்யம் அய்யங்கார், அவர்கள் அட்வொகேட், சென்னை.** ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயாபிவிருத்தியில் விசேட நன்னோக்கு உடையவரும், நன்மனத்தரும், சிறந்த தேசிக பக்தரும் ஆகிய அவரும் அவரது உற்றார் உறவினரும் மேன் மேலும் திருவருள் பெற்று இன்புறுவாராக.

பொங்கும் மங்கலம் எங்கும் தங்குக!

ஸ்ரீரங்கவிலாசம்,
அம்பத்தூர்,
27-9-1953.

ப. ரெ. திருமலை அய்யங்கார்,
காரியதரிசி.

ஸ்ரீ:

ந்யாஸதசகம்.

ஸ்ரீமாந் வேங்கட நாதார்ய:
கவிதார்க்கிக கேஸரீ,
வேதாந்தாசார்ய வர்யோ மே
ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி.

[உத்தம ஞான ஸம்பத்தையுடையவரும், வேதாந்தங்களுக்கு சாஸ்த்ரோக்தமான பொருள் உரைப்பதில் பிரஸித்தி பெற்றவரும், திருவேங்கடநாதன் என்னும் திருநாமத்தை வஹிப்பவரும், கவனம் பண்ணுபவர், ஹேதுவாதம் செய்பவர் இவர்கள் எதிர் திறமையோராயினும் அவர்களுக்கெல்லாம் சிங்கம் போன்றவருமான நம் தூப்புல் வேதாந்த தேசிகன் அடியேன் மனத்திலே எப்பொழுதும் வீற்றிருக்கக் கடவர்.]

அஹம் மத்ரக்ஷணபரோ
மத்ரக்ஷண பலம் ததா,
ந மம ஸ்ரீபதேரேவேத்
யாத்மாநம் நிக்ஷிபேத் புத:. (1)

[அஹம் - அடியேனும், ஆத்மஸ்வரூபம்; **மத்ரக்ஷண பர:**—அடியேனை ரக்ஷிக்கும் பொறுப்பும், எனது ரக்ஷணத்தின் சுமையும்; **ததா** - அவ்வாறே, அப்படியே; **மத்ரக்ஷண பலம்** - அடியேனை ரக்ஷிப்பதால் உண்டாகும் பயனும், எனது ரக்ஷணத்தால் உண்டாகும் பலமும்; **ந மம** - அடியேனுடையவை அன்று, நான் எனக்கு உரியேன் அல்லேன்; **ஸ்ரீபதே: ஏவ** - ஸ்ரீய: பதியான நாராயணன் உடையவையே, ஸர்வசேஷியான ஸ்ரீமந் நாராயணனுக்கே சேஷம், அவனே இவைகட்கெல்லாம் கடவன்; **இதி** - என்று, இவ்வாறு; **புத:** - பண்டிதன்; **ஆத்மாநம்** - தன்னை; **நிக்ஷிபேத்** - ஸமர்ப்பிக்கக்கடவன்.

"அடியேன், அடியேனைக் காக்கும் பரம், அடியேனைக் காப்பதன் பலம், இவையனைத்தும் அடியேனுடையதல்ல, எல்லாம்

திருவுக்கும் திருவாகிய திருமாமகள் கேள்வனுடையனவே” என்று தன்னைப் பகவானிடம் ஒப்படைத்து விடவேண்டும்.

இச்சுலோகத்தால் அங்கியினுடைய பிரிவான ஸ்வரூபஸமர்ப்பணம், பலஸமர்ப்பணம் என்கிற இரண்டு தளத்துடன் பரஸமர்ப்பணம் பண்ணக்கடவது என்றும், இம்மூன்று ஸமர்ப்பணத்திலும் பரஸமர்ப்பணமே ப்ரதானம் என்றும் கூறப்பெறுகின்றது.

நான் எனக்கு உரியேன் அல்லேன். ஒன்றை நிருபாதிகமாக என்னது என்னவும் உரிமையில்லை. என்னையும் என்னது என்று பேர்பெற்றவற்றையும் உடைமையையும், நான் ஸ்வதந்த்ரனுய்க் காப்பாற்றிக்கொள்ளத் தகுதியுள்ளவனும் அல்லன். நான் ப்ரதாநபலியும் அல்லேன். என்னுடைய ஆத்மாத்மீயங்களும் ஸர்வஸ்வாமியான அகாரவாச்யனதே. இவற்றினுடைய ரக்ஷண பரமும் ஸர்வரக்ஷகனுன அவனதே. ரக்ஷணபலமும் ப்ரதாந பலியான அவனதே. அஹம் - அடியேனும் அடியேனைச் சேர்ந்தவைகளும், நான், ஆத்மஸ்வரூபம்.

“அடியேனும் அடியேனைச் சேர்ந்தவைகளும் எனக்குச் சேஷம் அல்ல. நான் எனக்கு உரியேன் அல்லேன். ஸர்வ சேஷியான ஸ்ரீமந்நாராயணனுக்கே எல்லாம் சேஷம்” என்று அநுசந்திக்கை “ஸ்வரூபஸமர்ப்பணம்,” இது இம்மையிலும் மறுமையிலும் உளதாம். “அடியேனையும் அடியேனுடையனவாகப் பேர்பெற்றவற்றையும் அடியேன் ஸ்வதந்திரனுய் ரக்ஷித்துக் கொள்ளச் சக்தியற்றவன், தகுதியில்லாதவன், இவற்றினுடைய ரக்ஷணபரமும் அந்த ஸ்ரீய: பதியினுடையதே” என்று அநுஸந்தித்தல் “பரஸமர்ப்பணம்”. “இந்தச் சரீர முடிவில் மற்றொரு திவ்ய சரீரத்தை அடைந்து அர்ச்சிராதி மார்க்கத்தினுல் பரமபதத்தைச் சேர்ந்து அங்கு ஸ்ரீவைகுண்டநாதனை அநுபவித்து அதன் போக்கு வீடாகக் கைங்கர்யம் அடைதல் பலம். இதுவும் ப்ரதாந பலியான ஸ்ரீமந்நாராயணன் உடையதே” என்று அநுஸந்தித்தல் “பல ஸமர்ப்பணம்”.

ஸ்ரீபதேரேவ - என்றதால், இந்த ஸமர்ப்பணத்தில் திருமகளாரோடு கூடிய நாராயணனே உத்தேச்யன் என்று சொல்லப் பெற்றதாயிற்று.

“இனி, “மலர்மகள் விரும்பும் நமரும் பெறலடிகள்” (1-3-1) என்று தொடங்கி “திருவுடையடிகள்” (1-3-8) என்றும்,

"மையகண்ணாள் மலர் மேலுறை வாளுறை மார்பினன்" (4-5-2) என்றும், "நமக்கும் பூவின்மிசை நங்கைக்கு மின்பன்" (4-5-8) என்றும், "கோலத்திருமாமகளோடுன்னைக் கூடாதே" (6-9-3) என்றும் சொல்லிக்கொண்டுபோந்து, "திருவாணை" (10-10-2) என்றும், "கோலமலர்ப் பாவைக்கன்பாகிய வென்னன்பே" (10-10-7) என்றும் தலைக்கட்டுகையாலே ஸ்ரீமானான நாராயணனே பரதத்துவம் என்றும் சொல்லிற்று. இத்தால், நம் ஆசார்யர்கள் ரஹஸ்யத்திற் பதத்வயத்தாலும் அருளிச் செய்துகொண்டு போரும் அர்த்தத்திற்கு அடி இவ்வாழ்வாராயிருக்குமென்றதா யிற்று; ஆச்ரயணவேளையிலே "மலர் மகள் விரும்பும் நமரும் பெற லடிகள்" (1-3-1) என்று தொடங்கி போகவேளையிலே "கோல மலர்ப்பாவைக் கன்பாகிய வென்னன்பே" (10-10-7) என்று சொல்லுகையாலே, ஆச்ரயண வேளையோடு போகவேளையோடு வாசியற ஒருமிதுநமே உத்தேச்யமென்னுமிடம் சொல்லிற் றாயிற்று; * * * [ஈடு. முதல் ஸ்ரீய: பதி.]

புத: - அநேக காலம் குருகுல வாஸம் பண்ணி மந்திர மந்திரார்த்தங்களை ஆசார்யன் மூலமாக நன்கு உணர்ந்து, தத்வ, உபாய புருஷார்த்தங்களைப் பற்றிய விவேகம் பெற்றவன்.

"முமுக்ஷுவான அதிகாரிக்கு இவ்வுபாயத்தில் அங்கி **ஸ்வரூபமாவது** - ஆபரணத்தை உடையவனுக்கு அவன் தானே ரக்ஷித்துக்கொண்டு பூணக்கொடுக்குமாபோலே யதாவஸ்திதமான **ஆத்மநிக்ஷேபம்.** அதாவது - ப்ரணவத்தில் ப்ரதமாக்ஷரத்தில் ப்ரக்ருதி ப்ரத்யயங்களாலே ஸர்வரக்ஷகனாய், ஸர்வசேஷியாய்த் தோற்றின ஸர்வேச்வரனைப்பற்ற ஆத்மாத்மீய ரக்ஷணவ்யாபாரத் திலும், ஆத்மாத்மீயரக்ஷணபலத்திலும் ஸ்வாதீநமாகவும் ஸ்வார்த்த மாகவும் தனக்கு அந்வயம் இல்லாதபடி பரந்யாஸ ப்ரதாநமான அத்யந்த பாரதந்த்ரிய விசிஷ்டசேஷத்வ அநுஸந்தாநவிசேஷம். 'ஸ்வாத்மாநம் மயி நிக்ஷிபேத்' என்று சோசிதமான இவ்வநு ஸந்தாந விசேஷத்தை அநுஷ்டிக்கும்படி :—சேஷியாய், ஸ்வதந்த்ரனான ஈச்வரன் தன் ப்ரயோஜனமாகவே தானே ரக்ஷிக்கும்படிக்கு ஈடாக அநந்யார்ஹ, அநந்யாதீந சேஷபூதனாய் அத்யந்த பரதந்த்ரனான நான் 'ஆத்மாபி சாயம் நமம' என்கிற படியே எனக்குரியேனல்லேன், ஒன்றை நிருபாதிகமாக என்னது என்னவும் உரியேன் அல்லேன், 'ஸ்வயம் ம்ருத்பிண்ட பூதஸ்ய

பரதந்த்ரஸ்ய தேஹிந:, ஸ்வரக்ஷணேப்ய சக்தஸ்ய கோஹேது: பரரக்ஷணே' என்கிறபடியே என்னையும் என்னது என்று பேர் பெற்றவற்றையும் நானே ஸ்வதந்த்ரனுயும், ப்ரதாநபலியாயும் ரக்ஷித்துக்கொள்ள யோக்யனுமல்லேன், 'ஆத்மா ராஜ்யம் தநஞ்சைவ களத்ரம் வாஹநாநிச, ஏதத் பகவதே ஸர்வ மிதி தத்ப்ரேக்ஷிதம் ஸதா' என்று விவேகிகள் அநுஸந்தித்த க்ரமத்திலே என்னுடைய ஸ்வாத்மாத்மீயங்களும் அவனதே, 'ஆத்மாத்மீய பரந்யாஸோ ஹ்யாத்ம நிக்ஷேப உச்யதே' என்கையால் இவற்றி னுடைய ரக்ஷணபரமும் 'நஹி பாலந ஸாமர்த்ய ம்ருதே ஸர்வேச் வரம் ஹரிம்' என்கிறபடியே ஸர்வரக்ஷகனுன அவனதே, 'தேந ஸம்ரக்ஷ்ய மாணஸ்ய பலே ஸ்வாம்ய வியுக்ததா, கேசவார்ப்பண பர்யந்தாஹ்யாத்ம நிக்ஷேபஉச்யதே' என்கிறபடியே ரக்ஷண பலமும் ப்ரதாநபலியான அவனதே என்று பாவிக்கை. முமுக்ஷு மாத்ர ஸாமாந்யம் ஸ்வரூபாதி ஸமர்ப்பணம், அகிஞ்சநே பரந்யாஸ ஸ்த்வதிகோங்கிதயா ஸ்தித:. அத்ர ரக்ஷா பரந்யாஸஸ் ஸமஸ்ஸர்வபலார்த்திநாம், ஸ்வரூப பல நிக்ஷேபஸ்த்வதிகோ மோக்ஷ காம்க்ஷிணும்.

பலார்த்தியாய் உபாயாநுஷ்டாநம் பண்ணுகிற ஜீவன் பலியாயிருக்க ஈச்வரன் இங்கு ப்ரதாநபலியானபடி எங்ஙனே என்னில் :—

அசித்தின் பரிமாணங்கள் போல சித்துக்குத்தான் கொடுத்த புருஷார்த்தங்களும் ஸர்வசேஷியான தனக்கு உகப்பாய் இருக்கையாலே ஈச்வரன் ப்ரதாநபலி ஆகிருன். அசேதநமான குழமணனை அழித்துப் பண்ணியும், ஆபரணம் பூட்டியும் அழகு கண்டு உகக்கிறதோடு சேதநமான கிளியைப் பஞ்சரத்தில் வைத்துப் பால் கொடுத்தும், வேண்டினபடி பறக்கவிட்டும் அதின் உகப்பு கண்டு உகக்கிறதோடு வாசியில்லையிறே நிரபேக்ஷரான ரஸிகர்க்கு. ஆனபின்பு இங்கு ஸ்வநிர்ப்பரத்வ பர்யந்த ரக்ஷகை கார்த்ய பாவநம், த்யக்த ரக்ஷாபல ஸ்வாம்யம் ரக்ஷ்யஸ்யாத்ம ஸமர்ப்பணம். ஸ்தோத்ரத்தில் 'வபுராதிஷு யோபி கோபிவா குணதோ ஸா நி யதா ததா வித:, ததயந்தவ பாதபத்மயோ ரஹ மத்யைவ மயா ஸமர்ப்பித:' என்கிறதுக்குத் தாத்பர்யம் என்என்னில் :—முத்ரையிட்டு இருக்கிற ராஜாவின் கிழிச்சீரை ஒரு ஹேதுவாலே தன் கையிலே இருந்தால் ராஜாகைக்

கொள்ளும் என்று உள்ளிருக்கிற மாணிக்கத்தின் ஸ்வரூப ஸ்வ பாவங்களை விசதமாக அறியாதே கிழிச்சீரையோடே மீளக் கொடுக்குமாபோலே தேஹாத்யதிரிக்தாத்மாவின் ஸ்வரூப ஸ்வபாவ ஸ்திதிகளை விசதமாக விவேகிக்க அறியாதாரும் உள்ள அறிவைக் கொண்டு ஆத்ம ஸமர்ப்பணம் பண்ணினால் அவ்வளவாலும் அநாதிகாலம் பண்ணின ஆத்மாபஹார சௌர்யத்தால் உண்டான பகவந் நிக்ரஹம் சமிக்கும் என்கிற சாஸ்த்ரார்த்தத்திலே திருவுள்ளம். இதுக்கு மேல் 'மம நாத யதஸ்தி' என்கிற ச்லோகத்தில் இஸ்ஸமர்ப்பணத்தைப் பற்ற அநுஸந்தேயம் பண்ணிற்றும் ஸ்வரூபாதிவிவேகம் அன்றிக்கே ஸமர்ப்பிக்கப் புக்காலும் தன்னுடைய த்ரவ்யத்தை ராஜாவுக்கு உபஹாரமாகக் கொடுப்பாரைப் போலே, என்னது என்கிற அபிமாநத்தோடே ஸமர்ப்பிக்கில் ஆத்மாபஹார சௌர்யம் அடியற்றதாகாது என்கைக்காக அத்தனை. அல்லது சாஸ்த்ர சோசிதமாய்த் தாம் அநுஷ்டித்த ஸமர்ப்பணத்தை அஜ்ஞக்ருத்யம் ஆக்கினபடி அன்று. ஆக இரண்டு ச்லோகத்தாலும் யதாவஸ்தித ஸ்வரூபாதி விவேகம் இல்லையே ஆகிலும் 'ந மம' என்று ஸ்வஸம்பந்தம் அறுக்கையே 'அஹமபி தவைவாஸ்மி ஹி பர:' என்னும்படி பர ஸமர்ப்பண ப்ரதாநமான சாஸ்த்ரார்த்தத்தில் ஸாரம் என்றது ஆயிற்று. இப்படி சேஷத்வ அநுஸந்தாந விசிஷ்டமான ஸ்வரக்ஷாபர ஸமர்ப்பணம் த்வயத்தில் உபாயபரமான பூர்வ கண்டத்தில் மஹாவிச்வாஸ பூர்வக கோப்த்ருத்வ வரணகர்பமான சரண சப்த உபலிஷ்ட க்ரியாபதத்திலே சேர்த்து அநுஸந்திக்க ப்ராப்தம். இப்படி இவை ஆறும் இம் மந்த்ரத்திலே விமர்ச தசையில் தனித்தனியே அநுஸந்தித்தாலும், வாக்யார்த்த ப்ரதிபத்தி தசையில் அல்லாத வாக்யார்த்தங்கள் போலே ஸாங்கமான ப்ரதாநம் ஏகபுத்யாரூடமாம். ஆகையால் யதாசாஸ்த்ரம் ஸாங்க ப்ரதாந அநுஷ்டாநம் ஸக்ருத்கர்த்தவ்யம் ஆயிற்று. அநேக வ்யாபார ஸாத்யமான தாநுஷ்கனுடைய லக்ஷ்ய வேதார்த்தமான பாணமோக்ஷம் க்ஷண க்ருதயம் ஆகிறாப்போலே இவ் ஆத்ம ரக்ஷாபர ஸமர்ப்பணம் இருக்கும்படி என்று ச்ருதி ஸித்தம். இப் பரஸமர்ப்பணமே ப்ரபத்தி மந்த்ரங்களில் ப்ரதாநமாக அநுஸந்தேயம் என்னும் இடத்தை 'அநநைவ து மந்த்ரேண ஸ்வாத்மாநம் மயி நிக்ஷிபேத், மயி நிக்ஷிப்த கர்த்தவ்ய: க்ருத க்ருத்யோ பவிஷ்யதி' என்று ஸாத்யகி தந்த்ரத்திலே பரஸ்வீகாரம் பண்ணு

கிற சரண்யன் தானே தெளிய அருளிச் செய்தான். இதில் ஸாங்காநுஷ்டாநமாய் அற்றது - கர்த்ருத்வ த்யாக, மமதா தியாக, பலத்யாக, பலோபாயத்வத்யாக பூர்வகமான ஆநுகூல்ய ஸங்கல் பாத்ய அர்த்தாநு ஸந்தாநத்தோடே குருபரம் பரா உபஸத்தி பூர்வகத்வயவசந முகத்தாலே ஸ்வரூப பலந்யாஸ கர்பமான ஆத்ம ரக்ஷாபர ஸமர்ப்பணம் பண்ணுகை. இக்கர்த்ருத்வ த்யாகத்துக்கு நிபந்தநம் தன் கர்த்ருத்வமும் அவன் அடியாக வந்தது என்று தனக்கு யாவதாத் மானபாவியான பகவதேக பரதந்த்ரத்தை அறிகை. மமதா த்யாகத்துக்கும் பலத்யாகத் துக்கும் நிபந்தநம் ஆத்மாத்மீயங்களுடைய ஸ்வ்ரூபாநுபந்தி பவதேக சேஷத்வ ஜ்ஞாநம். பலோபாயத்வ த்யாகத்துக்கு நிபந்தநம் சரண்ய ப்ரஸாதமான இவனுடைய அநுஷ்டாநம் ப்ரதாந பலத்துக்கு வ்யவ ஹிதகாரணம் ஆகையும், அசேதந மாகையாலே பல ப்ரதாந ஸங்கல்ப ஆச்ரயம் அல்லாமையும். ஈச்வரன் பலோபாயம் ஆகிறது ஸஹஜ ஸௌ ஹார்த்தத்தாலே கரணகளேபர ப்ரதாநந் தொடங்கி த்வயோச்சாரண பர்யந்தமாக ஸர்வத்துக்கும் ஆதி காரணம் ஆன தானே ப்ரஸாத பூர்வக ஸங்கல்ப விசேஷ விசிஷ்டனுய்க் கொண்ட வ்யவஹித காரணம் ஆகையாலும், உபாயாந்த சூந்யனுக்கு அவ்வோ உபாயஸ்தாநத் திலே நிவேசிக்கையாலும். இங்ஙன் இருக்கைக்கு அடி தர்மிக் ராஹகம்ஆன சாஸ்த்ரத்தாலே அவகதமான வஸ்துஸ்வபாவம் ஆகையால் இவ்வர்த்தம் யுக்திகளால் சலிப்பிக்க ஒண்ணுது. இஸ் ஸாங்காநுஷ்டாநத்துக்கு நடாதூர் அம்மாள் அருளிச் செய்யுஞ் சுருக்கு :—அநாதிகாலம் தேவரீருக்கு அநுஷ்டா சரணம் பண்ணுகையாலே ஸம்ஸரித்துப் போந்தேன், இன்று முதல் அநுகூலனுய் வர்த்திக்கக் கடவேன், ப்ரதிகூலாசரணம் பண்ணக் கடவேனல்லேன், தேவரீரைப் பெறுகைக்கு என் கையில் ஒரு கைம்முதல் இல்லே, தேவரீரையே உபாயமாக அறுதி யிட்டேன், தேவரீரே உபாயமாகவேணும், அநிஷ்டநிவ்ருத்தி யிலாதல் இஷ்டப்ராப்தி யிலாதல் எனக்கு இனி பரம் உண்டோ ? —என்று. இவ்விடத்தில் ஆநுகூல்ய ஸங்கல்பாதிகள் உபாய பரிகரமாய் ஸக்ருத்தாய் இருக்கும். மேல் இவன்கோலின அநுகூல வ்ருத்யாதிகளோடு போருகிற இடமும் உபாய பலமாய் யாவதாத்ம பாவியாய் இருக்கும். இவற்றில் ப்ராதிகூல்யவர்ஜந மும் அம்மாள் அருளிச் செய்தபடியே ஆநுகூல்ய ஸங்கல்பம்

போலே ஸங்கல்ப ரூபம் ஆனாலும் ஸக்ருத் கர்த்தவ்யம் என்னும் இடம் 'அபாயேப்யோ நிவ்ருத்தோஸ்மி' என்கிறபடியே அபி ஸந்தி விராமம் ஆதல் ப்ராதிகூல்ய ஸ்வரூப நிவ்ருத்தியாதல் ஆனாலும் அதில் ப்ரதமக்ஷணம் அங்கமாய் மேலுள்ளது பல மாகக் கடவது. இப்படி விச்வாஸத்திலும் பார்ப்பது.

ப்ரவ்ருத்தி ரநுகூலேஷு நிவ்ருத்திச்சாந்யத: பலம்,

ப்ராரப்த ஸுக்ருதாச் சஸ்யாத் ஸங்கல்பேச ப்ரபத்தித:.

ஆகையால் இருந்த நாளில் நிரபராத கைங்கர்யத்தையும், ப்ராரப்த சரீராநந்தரம் மோக்ஷத்தையுஞ் சேர பலமாகக் கோலி ப்ரபத்தி பண்ணுவார்கள் நிபுணர்.

அறவே பரமென் றடைக்கலம் வைத்தன ரன்றுநம்மைப்

பெறவே கருதிப் பெருந்தக உற்ற பிரானடிக்கீ

முறவே யிவனுயிர் காக்கின்ற வோருயி ருண்மையைநீ

மறவே லெனநம் மறைமுடி சூடிய மன்னவரே.

[வேதாந்தமாகிய ஸாம்ராஜ்யத்தில் முடிசூடி நிற்கின்ற அரசர்களாகிய நம் ஆசாரியர்கள் தன் ஸம்பந்தம் பொருந்திய சேதநனுடைய ஸ்வரூபத்தைக் காப்பவனும், உலகுக் கெல்லாம் ஒரே அந்தர்யாமியாய் இருப்பவனுமான எம்பெருமானுடைய ஸ்வபாவத்தை நீ மறவாதே என்று சிக்ஷித்து, அநாதியாக நம்மை அடைவதற்கே ஊற்றம் உடையவனாய் இருந்து, அள வற்ற கிருபையை வைத்தவனாகிய எம்பெருமானுடைய திருவடி யின் கீழ் சேதநனுடைய பொறுப்பு அற்றுப்போக வேண்டும் என்று நினைத்து ரக்ஷிக்கப்பட வேண்டிய வஸ்துவாக ஸமர்ப் பித்தனர்.] [ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம். ஸாங்க ப்ரபத நாதிகாரம்.] என்றதன் சுருக்கமே இம் முதல் சுலோகம்.

மேலும் இந்தச் சுலோகத்தின் பொருளை

"எனக்குரிய னெனதுபர மென்பே றென்னு

திவையனைத்து மிறையில்லா விறைக்க டைத்தோம்"

—(தேசிகமாலை. அமிருதரஞ்சனி. 8)

['நானே எனக்கு ஸ்வாமி. என்னை ரக்ஷிக்குங் கடமையும் என்னுடையதே. அதன் பலனும் என்னுடையதே.' என்று

நினையாமல், ஸ்வரூபம் பரம் பலன் எல்லாவற்றையும் தனக்கு ஒரு நாயகன் இல்லாத பகவானிடம் ஸமர்ப்பித்தோம் என்று இவர்தாமே அருளிச் செய்துள்ளதும் காண்க.]

ந்யஸ்யாம்யகிஞ்சந: ஸ்ரீமந்
அநுகூலோந்யவர்ஜித:,
விச்வாஸ ப்ரார்த்தநா பூர்வம்
ஆத்ம ரக்ஷா பரம் த்வயி. (2)

[ஸ்ரீமந் : ஸ்ரீமந் நாராயணனே !' திருமகளோடு வருந் திருமாலே !; அகிஞ்சந: தேவரீரைப் பெறுவதற்கு வேறு உபாயங்களை அறிவதற்கும் அநுஷ்டிப்பதற்கும் சக்தியற்றவனை அடியேன், உபாயாந்தரங்களை அறிகைக்கும் அநுஷ்டிக்கைக்கும் தகுதியற்றவனை அடியேன் ; அநுகூல: —அநுகூலனுக ஆகக் கடவேன் என்கிற ஸங்கல்பம் உடையவனுகவும் ; அந்ய வர்ஜித:—அநுகூலனு யிருப்பதற்கு வேருன ப்ராதிகூல்யத்தை விட்டவனுகவும் இருந்து ; விச்வாஸப்ரார்த்தநாபூர்வம் - நீ என்னை ரக்ஷிப்பாய் என்கிற துணிவும், நீ என்னை ரக்ஷிக்க வேண்டும் என்கிற பிரார்த்தனையையும் முன்னிட்டு ; ஆத்ம ரக்ஷாபரம் - அடியேனைக் காக்கும் பொறுப்பை ; த்வயி - தேவரீரிடத்தில் ; ந்யஸ்யாமி - ஸமர்ப்பிக்கின்றேன்.

முதல் சுலோகத்தில் கூறப்பெற்ற ரக்ஷாபர ஸமர்ப்பண ரூபமான அங்கியை ஆநுகூல்ய ஸங்கல்பம் முதலான ஐந்து அங்கங்களுடன் அநுஷ்டிக்க வேண்டும் என்று காட்டா நின்று கொண்டு ஸ்ரீய: பதியான பகவானை விளித்து தாம் அநுஷ்டித்த முறையிலே அருளிச் செய்கிருர் இதில்.

திருமகள் கேள்வனே ! தேவரீரை அடைவதற்கு உபாயங்களாகிய கர்மஞான பக்திகள் போன்ற எத்தகைய முதலும் இல்லாதவனும், தேவரீருக்கு என்றுமே அநுகூலனும், பிராதிகூல்யத்தை அடியோடு விட்டவனுமாகிய அடியேன் நன்னம்பிக்கையுடனும், அடியேனைக் காப்பாற்ற வேண்டும் என்று வேண்டிக் கொண்டும், அடியேனை ரக்ஷிக்கும் பரத்தைத் தேவரீரிடத்தில் வைத்து விடுகின்றேன்.

ப்ரபத்திக்கு ஐந்து அங்கங்கள் உண்டு. அவையாவன :— (1) **ஆநுகூல்ய ஸங்கல்பம்,** (2) **ப்ராதிகூல்ய வர்ஜநம்,**

(3) **மஹாவிச்வாஸம்,** (4) **கோப்த்ருத்வ வரணம்,** (5) **கார்ப்பண்யம்** என்பன.

(1) **ஆநுகூல்ய ஸங்கல்பம்** - எம்பெருமான் திருவுள்ளத்திற்கு உகந்தவற்றையே செய்வதாய் உறுதி கொள்ளல்.

(2) **ப்ராதிகூல்ய வர்ஜநம்** - எம்பெருமான் திருவுள்ளத்திற்கு விபரீதமானவற்றைச் செய்யாதிருக்க உறுதி கொள்ளல்; அல்லது அவற்றைப் புரிய எண்ணங் கொள்ளாமை; அல்லது அவற்றைச் செய்யாது விடுதல்.

(3) **மஹாவிச்வாஸம்** - எம்பெருமான் நம்மைக் காக்க வல்லன் என்று தேறித் தவறாது நம்மை இரக்ஷிப்பான் என்று திடமாக நம்புதல்.

(4) **கோப்த்ருத்வ வரணம்** - பக்தியோகம் முதலிய உபாயங்களை அநுஷ்டிக்கச் சக்தியற்ற தம் விஷயத்தில் அருள் புரிந்து அவ்வுபாயங்களின் ஸ்தாநத்தில் நின்று பலன் கொடுக்குமாறு அவனை வேண்டுகை.

(5) **கார்ப்பண்யம்** - பக்தியோகம் முதலிய உபாயங்களில் தமக்கு அதிகாரமின்மையும், எம் பெருமானைத் தவிர வேறு தெய்வத்தினிடமோ, மோக்ஷத்தைத் தவிர வேறு பலனிலோ பற்றில்லாமையையும் அநுஸந்தித்தல்; அல்லது இவ்வநுஸந்தாநத்தால், தமக்கிருந்த கர்வம் ஒழியப் பெறுதல்; அல்லது எம்பெருமானது கருணை தம்மீது வளர்ந்து ஓங்கும்படி தாழ்ந்து நின்று அஞ்ஜலி நமஸ்காரம் முதலியவற்றைச் செய்தல்.

இந்தச் சுலோகத்தில் '**அநுகூல:**' என்றதால் ஆநுகூல்ய ஸங்கல்பமும், '**அந்யவர்ஜித:**' என்றதால் ப்ராதிகூல்ய வர்ஜநமும், '**விச்வாஸ ப்ரார்த்தநாரூபம்**' என்றதால் மஹாவிச்வாஸம், கோப்த்ருத்வ வரணம் என்பனவும், '**அகிஞ்சந:**' என்றதால் கார்ப்பண்யமும், '**ஆத்ம ரக்ஷாபரம் ந்யஸ்யாமி**' என்றதால் ஸாங்க பர ஸமர்ப்பணமும் கூறப்பெற்றன.

"அநாதிகாலம் தேவரீருக்கு அநிஷ்டாசரணம் பண்ணுகையாலே ஸம்ஸரித்துப் போந்தேன். இன்று முதல் அநுகூலனாய் வர்த்திக்கக் கடவேன்; ப்ரதிகூலாசரணம் பண்ணக் கடவேனல்லேன்; தேவரீரைப் பெறுகைக்கு என் கையில் ஒரு கைம்முதல் இல்லை; தேவரீரையே உபாயமாக அறுதியிட்டேன்; தேவரீரே உபாயமாகவேண்டும்; அநிஷ்ட நிவ்ருத்தியிலாதல், இஷ்ட

ப்ராப்தியிலாதல் இனிபரம் - உண்டோ" என்பது இஸ் ஸாங்கா நுஷ்டாநத்துக்கு நடாதூர் அம்மாள் அருளிச் செய்யும் சுருக்கு.

நின்னருளாங் கதியன்றி மற்றென் றில்லே
நெடுங்காலம் பிழைசெய்த நிலேக ழிந்தே
னுன்னருளுக் கினிதான நிலேயு கந்தே
னுன்சரணே சரணென்னுந் துணிவு பூண்டேன்
மன்னிருளாய் நின்றநிலே யெனக்குத் தீர்த்து
வானவர்தம் வாழ்ச்சிதர வரித்தே னுன்னே
யின்னருளா லினியெனக்கோர் பரமேற் றும
லென்றிருமா லடைக்கலங்கொ ளென்னே நீயே.

—(தேசிகமாலே, அமிருதாசுவாதினி-31.)

[எனக்குத் தலேவனுன எம்பெருமானே! தேவரீருடைய கிருபையாகிய கதியைத் தவிர அடியேனுக்கு வேறு கதியில்லே. அநாதிகாலமாக தேவரீர் திருவடிகளில் அபராதம் செய்து வந்த நிலே இப்பொழுது நீங்கிவிட்டது. தேவரீர் கிருபையைப் பெறு வதற்கு ஸாதநமாக தேவரீர் திருவடிகளில் ப்ரபத்தியை அநுஷ் டித்தேன். என் அக்ஞாநத்தை ஒழித்து நித்யஸூரிகளின் வாழ்வை அடியேனுக்குத் தருமாறு தேவரீரை வேண்டிக் கொண்டேன். இனிமேல் அடியேனுக்கு ஒரு பொறுப்பும் வைக்காமல் அடியேனேக் காக்கவேண்டிய வஸ்துவாக ஏற்றுக் கொள்வாயாக. இதில் 'நின்னருளாங்......இல்லேன்' என்றதால் கார்ப்பண்யமும், 'நெடுங்காலம்......கழிந்தேன்' என்றதால் ப்ராதிகூல்ய வர்ஜநமும், 'உன்னருளுக்கு......உகந்தேன்' என்றதால் ஆநுகூல்ய ஸங்கல்பமும், 'உன்சரணே...... பூண்டேன்' என்றதால் மஹாவிச்வாஸமும், 'மன்னிருளாய்... வரித்தேனுன்னே' என்றதால் கோப்த்ருத்வ வரணமும், 'இன்னருளால்......என்னே நீயே' என்றதால் ஆத்ம ஸமர்ப்பண மும் கூறப்பெற்றுள்ளன. எனவே, ஐந்து அங்கங்களுடன் கூடிய ப்ரபத்தியை இப்பாசுரம் விளக்குதல் தேற்றம்.]

என்ற இவர் பாசுரம் இப்பொருளேயே விளக்குதல் காண்க.

உகக்குமவை யுகந்துகவா வனேத்துமொழிந் துறவுகுண
மிகத்துணிவு பெறவுணர்ந்து வியன்காவ லெனவரித்துச்

சகத்திலொரு புகலில்லாத் தவமறியேன் மதிட்கச்சி
நகர்க்கருணை நாதனை நல் லடைக்கலமா யடைந்தேனே.

—(தேசிகமாலை, அடைக்கலப்பத்து-5.)

[உலகில் வேறோர் உபாயத்தையும் செய்யமுடியாதவனும், மற்றவுபாயத்தைப் பற்றிய அறிவற்றவனுமான அடியேன், பேரருளாளன் உகந்தவற்றைச் செய்வதையே விரும்பி, அவன் உகவாத அனைத்தையும் செய்யாது நீங்கி, பலன் தருவதில் மிக்க உறுதியாகிய மஹா விசுவாஸத்தை அடைவதற்கு ஸாதநமாக பேரருளாளனுக்கும் ஜீவாத்மாவுக்கும் உள்ள சம்பந்தத்தையும் அவனுடைய குணங்களையும் அநுஸந்தித்து, அவனையே அதிசயிக்கத் தக்க ரக்ஷகனாகவேண்டும் என்று பிரார்த்தித்து, அழகிய மதிள்கள் சூழ்ந்த காஞ்சியின் கருணையே வடிவாகக்கொண்ட ஸ்வாமியான பேரருளாளனை சிறந்த கதியாகப் பற்றினேன். இதில் 'உகக்குமவையுகந்து' என்றதால் ஆநுகூல்ய ஸங்கல்பமும், 'உகவாவனைத்து மொழிந்து' என்றதால் ப்ராதிகூல்ய வர்ஜநமும், 'மிகத் துணிவுபெற வுணர்ந்து' என்றதால் மஹா விச்வாஸமும், 'காவலென வரித்து' என்றதால் கோப்த்ருத்வ வரணமும், 'புகலில்லாத் தவமறியேன்' என்றதால் கார்ப்பண்யமும், 'அடைக்கலமாயடைந்தேன்' என்றதால் அங்கியாகிய ஆத்ம ஸமர்ப்பணமும் கூறப்பெற்றுள்ளன. எனவே, பேரருளாளன் திருவடிகளில் ஐந்து அங்கங்களுடன் கூடிய ப்ரபத்தியை அநுஷ்டித்தேன் - என்றபடி.]

என்ற பாசுரமும் இவண் அநுஸந்தேயம்.

"இவ்வித்யைக்கு பரிகரமாவது 'ஆநுகூல்ய ஸங்கல்பமும், ப்ராதிகூல்ய வர்ஜநமும், கார்ப்பண்யமும், மஹா விச்வாஸமும், கோப்த்ருத்வ வரணமும். இவ்விடத்தில் 'ஆநுகூலஸ்ய ஸங்கல்ப: ப்ராதிகூலஸ்ய வர்ஜநம், ரக்ஷிஷ்யதீதி மஹாவிச்வாஸோ கோப்த்ருத்வ வரணம் ததா. ஆத்மநிக்ஷேப கார்ப்பண்யே ஷட்விதா சரணாகதி:' இத்யாதிகளிற் சொல்லுகிற ஷாட்வித்யமும் அஷ்டாங்க யோகம் என்னுமாப்போலே அங்காங்கி ஸமுச்சயத்தாலே ஆகக்கடவது என்னும் இடமும், இவற்றில் இன்னதொன்றுமே அங்கி, இதரங்கள் அங்கங்கள் என்னும் இடமும் 'நிக்ஷேப பாபர பர்யாயோ ந்யாஸ: பஞ்சாங்கஸம்யுத:, ஸந்யாஸஸ்த்யாக இத்யுக்தச் சரணாகதிரித்யபி'. என்கிற ச்லோகத்தாலே ந்யாய

நிரபேக்ஷமாக ஸித்தம். இவ்விடத்தில் ‘சாச்வதீ மம ஸம்ஸித்தி ரியம் ப்ரஹ்வீ பவாமி யத், புருஷம் பரமுத்திச்ய நமே ஸித்தி ரிதோ ந்யதா, இதியங்கமுதிதம் ச்ரேஷ்டம் பலேப்ஸா தத்விரோதிநீ’ என்று அஹிர்புத்ந்யோக்தமான பலத்யாக ரூபாங்காந்தரம் மோக்ஷார்த்தமான ஆத்ம நிக்ஷேபத்திலே நியதம். பலஸங்க கர்த்ருத்வாதி த்யாகம் கர்மயோகம் முதலாக நிவ்ருத்தி தர்மங்கள் எல்லாத்திலும் வருகையாலே இவ்வநுஸந்தாநம் முமுக்ஷுவுக்கு ஸாங்க ஸமர்ப்பண தசையிலே கர்த்தவ்யம். இங்கு பரிகரங் களானவற்றில் ஆநுகூல்ய ஸங்கல்பத்துக்கும் ப்ராதிகூல்ய வர்ஜநத்துக்கும் நிபந்தநம் ஸர்வசேஷியான ஸ்ரீய:பதியைப்பற்ற ப்ரவருத்தி நிவ்ருத்திகளாலே அபிமதாநு வர்த்தநம் பண்ண வேண்டும்படி இவனுக்குண்டான பாரார்த்யஜ்ஞாநம். இத்தாலே ‘ஆநுகூல்யேதராப்யாம்து விநிவ்ருத்திரபாயத:’ என்கிறபடியே அபாய பரிஹாரம் ஸித்தம். கார்ப்பண்யமாவது முன்பு சொன்ன ஆகிஞ்சந்யாதிகளுடைய அநுஸந்தாநமாதல், அதடியாக வந்த கர்வஹாநியாதல், க்ருபாஜநக க்ருபணவ்ருத்தியாதலாய் நின்று சரண்யனுடைய காருண்யோத்தம்பநார்த்தமுமாய், ‘கர்ப்பண்யே நாப்யுபாயாநாம் விநிவ்ருத்தி ரிஹேரிதா’ என்கிறபடியே பின்பு மநந்யோபாயதைக்கும் உபயுக்தமாய் இருக்கும். மஹாவிச்வாஸம் ‘ரக்ஷிஷ்யதீதி விஷ்வாஸா தபீஷ்டோபாய கல்பநம்’ என்கிறபடி அணியிடாத அநுஷ்டாநஸித்யர்த்தமுமாய் பின்பு நிர்பரதைக்கும் உறுப்பாய் இருக்கும். ஸ்வரூபாநுசித புருஷார்த்தங்கள் போலே ஸ்வரூப ப்ராப்தமான அபவர்கமும் புருஷார்த்தமாம்போது அர்த்திக்கக்கொடுக்க வேண்டுகையாலே இங்கு கோப்த்ருத்வ வரணமும் அபேக்ஷிதம். நன்றுயிருப்பதொன்றையும் புருஷன் அர்த்திக்கக் கொடாதபோது புருஷார்த்தங் கொடுத்தான் ஆகானிறே. ஆகையாலேயிறே ‘அப்ரார்த்திதோ நகோபாயேத்’ என்றும், ‘கோப்த்ருவ வரணம் நாம ஸ்வாபிப்ராய நிவேதநம்’ என்றுஞ் சொல்லுகிறது. இப்படி இவ்வைந்தும் இவ்வித்யா நுஷ்டாந காலத்தில் உபயுக்தங்கள் ஆகையால் இவை இவ்வாத்ம நிக்ஷேபத்துக்கு அவிநாபூத ஸ்வபாவங்கள். இவ்வர்த்தம் பிராட்டியை சரணமாகப் பற்றவாருங்கோள் என்று ஸாத்விக ப்ரக்ருதியான த்ரிஜடை ராக்ஷஸிகளுக்குச் சொல்லுகிற வாக்கியத் திலுங் காணலாம். ‘ததலம் க்ரூர வாக்யைர்வ:’ என்று ப்ராதி கூல்யவர்ஜநம் சொல்லப்பட்டது. ‘ஸாந்த்வமே வாபிதீயதாம்’

என்கையாலே மந: பூர்வமாக அல்லது வாக்ப்ரவ்ருத்தி யில்லாமை யாலே ஆநுகூல்ய ஸங்கல்பம் ஆக்ருஷ்டம் ஆயிற்று. 'ராவாத்தி பயம் கோரம் ராக்ஷஸாநா முபஸ்திதம்' என்று போக்கற்று நிற்கிற நிலையைச் சொல்லுகையாலே அதிகாரமான ஆகிஞ் சந்யமும் அதினுடைய அநுஸந்தாநமுகத்தாலே வந்த கர்வ ஹாந்யாதிரூபமாய் அங்கமான கார்ப்பண்யமுஞ் சொல்லிற் றுயிற்று. 'அலமேஷா பரித்ராதும் ராக்ஷஸ்யோமஹதோபயாத்' என்கையாலும், இத்தை விவரித்துக்கொண்டு 'அலமேஷா பரித்ராதும் ராகவாத்ராக்ஷஸீகணம்' என்று திருவடி அநுவதிக் கையாலும் பெருமாள் ஒருத்தனை நிக்ரஹிக்கப் பார்க்கிலும் அவர் சீற்றத்தை ஆற்றி இவள் ரக்ஷிக்கவல்லள் ஆகையாலே ரக்ஷிஸ்ய தீதி விச்வாசம் சொல்லப்பட்டது. 'அபியாசாம வைதேஹீ மேதத்தி மம ரோசதே', பர்த்ஸிதாமபி யாசத்வம் ராக்ஷஸ்ய: கிம்விவக்ஷயா' என்கையாலே கோப்த்ருத்வ வரணம் சொல்லிற் றுயிற்று. இவ்வைந்துக்கும் அங்கியான ஆத்மநிக்ஷேபம் 'ப்ரணி பாத ப்ரஸந்நாஹி மைதிலீ ஜககாத்மஜா' என்று ப்ரஸாதகாரண விசேஷத்தைச் சொல்லுகிற ப்ரணிபாத சப்தத்தாலே விவக்ஷிதம் ஆயிற்று. ஆகையால் 'ந்யாஸ: பஞ்சாங்க ஸம்யுத:' என்கிற சாஸ்த்ரம் இங்கே பூர்ணம். இப்படி உபதேசிக்க ராக்ஷஸிகள் விலக்காதமட்டே பற்றுசகப் பிராட்டி தன் வாத்ஸல்யாதிசயத்தாலே 'பவேயம் சரணம் ஹிவ:' என்று அருளிச்செய்தாள். இப்பாசுரம் ஸஹ்ருதயமாய் பலபர்யந்தமானபடியை 'மாதர் மைதிலி ராக்ஷ ஸீஸ்த்வயிததை வார்த்ராபராதாஸ்த்வயா ரக்ஷந்த்யாபவநாத்ம ஜால்லகுதரா ராமஸ்ய கோஷ்டீ க்ருதா' என்று அபியுக்தர் வெளியிட்டார்கள். இவ்விடத்தில் த்ரிஜடையுடைய ஆத்மாத்மீய பரஸமர்ப்பணத்திலே அவளுக்குப் பிறவித்துவக்காலே நம்மவர்கள் என்று கண்ணோட்டம் பிறக்கும் ராக்ஷஸிகளும் அந்தர்பூதைகள். அப்படியே ஸ்ரீவிபீஷணாழ்வானோடு கூடவந்த நாலு ராக்ஷஸரும் அவருடைய உபாயத்திலே அந்தர்பூதர். அங்குற்ற அபயப்ரதா நப்ரகரணத்திலும் இவ்வங்காங்கி வர்க்கம் அடைக்கலாம். எங்ஙனே என்னில் :—ப்ராதிகூல்யத்திலே வ்யவஸ்திதனை ராவணனுக்குங்கூட 'ப்ரதீயதாம் தாசரதாய மைதிலீ', ஸீதாஞ்ச ராமாய நிவேத்ய தேவீம்வஸேம ராஜந்நிஹ வீதசோகா:' என்று ஹிதஞ்சொல்லுகையாலே ஆநுகூல்ய ஸங்கல்பந் தோற்றிற்று. இந்த ஹிதவசநம் பித்தோபஹதனுக்குப் பால்கைக்குமாப்போலே

அவனுக்கு உத்வேக ஹேதுவாயிற்று. 'த்வாந்து திக்குல பாம்ஸநம்' என்று திக்காரம் பண்ணினபின்பு இனி இவனுக்கு உபதேசிக்கவும் ஆகாது, இவனேடு அநுபந்தித்த விபூதிகளும் ஆகாது, இவன் இருந்த இடத்திலும் இருக்கவும் ஆகாது என்று அறுதியிட்டு, 'த்யக்த்வா புத்ராம்ச்ச தாராம்ச்ச', 'பரித்யக்தா மயா லங்கா மித்ராணிச தநாநிச' என்கிற ஸ்வவாக்கியத்தின் படியே அங்கு துவக்கற்றுப் போருகையாலே ப்ராதிகூல்ய வர்ஜநாபிஸந்தி தோற்றிற்று. 'ராவணோ நாம துர்வ்ருத்த:' என்று தொடங்கி ஸர்வஜித்தான ராவணனேட்டை விரோதத் தாலே தாம் போகக்கற்று நிற்கிற நிலேயைச் சொல்லுகையாலும், பின்பும் 'அநுஜோ ராவணஸ்யாஹம் தேந சாஸ்ம்யவமா நித:, பவந்தம் ஸர்வபூதாநாம் சரணம் சரணங்கத:' என்கையாலும் கார்ப்பண்யம் சொல்லப்பட்டது. அஞ்சாதே வந்துகிட்டி 'ஸர்வலோக சரண்யாய ராகவாய மஹாத்மநே' என்று சொல்லும்படி பண்ணின மஹாவிச்வாஸம் 'விபூஷணே மஹாப்ராஜ்ஞ:' என்று காரணமுகத்தாலே சொல்லப்பட்டது. ப்ராஜ்ஞதையை விசேஷிக்கிற மஹச்சப்தத்தாலே விச்வாஸாதி சந்தானே விவக்ஷிதமாகவுமாம். 'ராகவம் சரணம் கத:' என் கையாலே உபாய வரணாந்தர் நீதமான கோப்த்ருத்வவரணம் சொல்லிற்ருயிற்று. உபாயவரண சப்தத்தாலே வ்யஞ்சிதமாகிற அளவு அன்றிக்கே 'நிவேதயதமாம் க்ஷிப்ரம் வீபீஷணமுபஸ்திதம்' என்கையாலே கடகபுரஸ்ஸரமான ஆத்மநிக்ஷேபம் சொல்லிற்று. இப்ரகரணத்திலே நிவேதந சப்தம் விஜ்ஞாபநமாத்ரபரமாஞல் நிஷ்ப்ரயோஜநம். இப்படி மற்றும் உள்ள ப்ரபத்தி ப்ரகரணங் களிலும் லௌகிகத்ரவ்ய நிக்ஷேபங்களிலும் ஸங்க்ஷேப விஸ்தர ப்ரக்ரியையாலே இவ்வர்த்தங்கள் காணலாம். தான் ரக்ஷிக்க மாட்டாததொரு வஸ்துவை ரக்ஷிக்கவல்லன் ஒருவன் பக்கலிலே ஸமர்ப்பிக்கும்போதுதான் அவன் திறத்தில் அநுகூலாபிஸந்தியை உடையஞய், ப்ரதிகூலாபிஸந்தியைத் தவிர்ந்து, இவன் ரக்ஷிக்க வல்லன், அபேக்ஷித்தால் ரக்ஷிப்பதுஞ் செய்யும் என்று தேறி, தான் ரக்ஷித்துக்கொள்ளமாட்டாமையை அறிவித்து, நீ ரக்ஷிக்க வேணும் என்று, ரக்ஷ்ய வஸ்துவை அவன் பக்கலிலே ஸமர்ப் பித்து, தான் நிர்பரஞய் பயங்கெட்டு மாரிலே கைவைத்துக் கொண்டு உறங்கக்காணு நின்றேமிறே.'' [ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரம். பரிகரவிபாகாதிகாரம்.]

ஸ்ரீமந் - ஸ்ரீ மஹாலக்ஷ்மியோடு கூடிய நாராயணனே! லக்ஷ்மியோடு கூடின எம்பெருமானே ப்ரபத்திக்கு உத்தேச்யன் என்பது இதனுல் அறிவிக்கப்பெற்றது. முதலில் புருஷகார ப்ரபத்திபண்ணி, அம்முகத்தாலே வசீக்ருதனுன எம்பெருமா னிடத்தில் ப்ரபத்தி செய்யவேண்டும் என்பதும் ஸூசிக்கப் பெறுகின்றது.

இவ்வாசார்யச்ரேஷ்டர் தெய்வநாயகனைச் சரணம் அடையத் திருவுள்ளங்கொண்டு முதலில் செங்கமலவல்லித்தாயாரிடம் செய் யும் புருஷகார ப்ரபத்தியை முதற் பாசுரத்தால் வெளியிடுகிருர் "**மும்மணிக் கோவை**"யில்.

அருடரு மடியவர்பான் மெய்யை வைத்துத்
தெருடர நின்ற தெய்வ நாயகநின்
னருளெனுஞ் சீரோ ரரிவை யானதென
விருள்செக வெமக்கோ ரின்னெளி விளக்காய்
மணிவரை யன்ன நின்றிரு வுருவி
லணியம ராகத் தலங்கலா யிலங்கி
நின்படிக் கெல்லாந் தன்படி யேற்க
வன்புட னின்னே டவதரித் தருளி
வேண்டுரை கேட்டு மீண்டவை கேட்பித்
தீண்டிய வினைகண் மாண்டிட முயன்று
தன்னடி சேர்ந்த தமருனை யணுக
நின்னுடன் சேர்ந்து நிற்குநின் றிருவே.

[தேவரீரால் அருள்புரியப்பெற்ற அடியவர்கள்மீது மெய்யாக ஒழுகுந் தன்மையை இட்டு 'அடியவர்க்கு மெய்யன்' எனப்பெயர் பெற்று அடியோங்களுக்கு ஜ்ஞாநக்கண்ணை அருள்கின்ற தெய்வ நாயகனே! எமக்கு அஜ்ஞாநமாகிய இருள் ஒழியும்படி ஒப்பற்ற இனிய பிரகாசத்தையுடைய தீபம் போன்றவளாய், இந்த்ரநீல பர்வதம் போன்ற தேவரீர் அழகிய திருமேனியில் திரு வாபரணங்கள் அமர்ந்து நிற்கின்ற திருமார்பில் மாலையாகப் பிரகாசித்துக்கொண்டு, தேவரீர் ப்ரகாரங்களுக்கு எல்லாம் தன் பிரகாரங்கள் ஒத்திருக்குமாறு தேவரீரைப் பிரியமாட்டாத

அன்புடன் தேவரீரோடும் தானும் அவதரித்தருளி, ஆச்ரிதர்கள் பிரார்த்திக்கும் உரைகளைத்தான் முந்துறக் கேட்டு, மறுபடியும் அவ்வுரைகளைத் தேவரீர் கேட்குமாறு செய்து, திரண்டகர்மங்கள் ஒழிந்து போகச் செய்ய முயன்று, தன் திருவடிகளை அடைந்த பாகவதர்கள் தேவரீரை அடையும்படி தேவரீர் கருணையெனும் குணமே ஒப்பற்ற பெண்வடிவு கொண்டது என்னலாம்படி தேவரீருக்கும் பெருமையைத் தருகின்ற பெரிய பிராட்டி தேவரீரோடு க்ஷணமும் பிரியாது சேர்ந்து நிற்கின்ருள்.] என்ற தேசிகமாலைப் பாசுரமே அது.

எம்பெருமானுடைய குணங்களுக்கு அளவே இல்லை. ஒரு பொருளுக்கு உளதாகக் கூறும் குணமானது தன்னைப் பெற்றிருக்கும் பொருளுக்கு மற்ருெரு பொருளைக்காட்டிலும் ஒரு பேதத்தைக் காட்டுவதால் அக்குணம் விசேஷணம் என்னப்பெறும். இத்தகைய விசேஷணம் "ஸ்வரூபநிரூபக விசேஷணம்" என்றும், "நிரூபித ஸ்வரூப விசேஷணம்" என்றும் இருவகைப் படும். ஒரு வஸ்துவின் ஸ்வரூபத்தை எந்தக் குணத்தை உடையதாகக் கூறியே விளக்கினுல் அன்றி அவ்வஸ்துவின் ஸ்வரூபத்தை அறிய முடியாதோ, அந்தக் குணம் ஸ்வரூபநிரூபக விசேஷணம் எனப்படும். ஒரு வஸ்துவின் ஸ்வரூபத்தை விளக்கியபின் அதன் பெருமை புலப்படுவதற்கு எந்தக் குணங்கள் வெளியிடப் பெறுகின்றனவோ, அவை நிரூபித ஸ்வரூப விசேஷணம் எனப்படும்.

எம்பெருமானுடைய ஸ்வரூபத்தை ஸத்யத்வம், ஜ்ஞாநத்வம், அநந்தத்வம், ஆநந்தத்வம், அமலத்வம் என்னும் ஐந்து குணங்களை யிட்டே விளக்கவேண்டும். ஆதலின் இவ்வைந்தும் ஸ்வரூப நிரூபகம் ஆகும். இந்தக் குணங்கள் "அமலனவியாத சுடரளவில்லா வாரமுதம்" (தேசிகமாலை அருத்த பஞ்சகம். 1) என்ற வடியிற் கூறப்பெற்றுள்ளன.

(1) ஸத்யத்வம் - எஞ்ஞான்றும் மாறுபடாத தன்மை. இது 'அவியாத' எனும் சொல்லாற் கூறப்பெற்றது.

(2) ஜ்ஞாநத்வம் - எப்பொழுதும் குறைவுபடாத ஜ்ஞாந ஸ்வரூபனுந் தன்மை. இது 'சுடர்' என்ற சொல்லால் உணர்த்தப் பெற்றது.

(3) அநந்தத்வம் - 'இங்குத்தான் இருக்கின்றான்' என்று தேசத்தாலும், 'இப்பொழுதுதான் இருக்கின்றான்' என்று காலத்தாலும், 'இந்த வஸ்துவின் ஸ்வரூபமாக இருக்கின்றான்' என்று வஸ்துவினாலும் அளவிடமுடியாதபடி எவ்விடத்திலும், எக்காலத்திலும், எந்த வஸ்து ஸ்வரூபனாகவும் நிற்கும் தன்மை. இது 'அளவில்லா' என்றதால் கூறப்பெற்றது.

(4) ஆநந்தத்வம் - தோஷங்கள் இல்லாத தன்மை. இது 'அமலன்' என்றதால் குறிக்கப்பெற்றது.

இவ்வைந்து குணங்களால் எம்பெருமானது ஸ்வரூபத்தை ஒருவாறு அறிந்தபின் ஸௌசீல்யம், காருண்யம், வாத்ஸல்யம் முதலிய அளவற்ற திருக்கல்யாண குணங்கள் அவன் பெருமையைக் காட்டுகின்றன. இவை நிரூபித ஸ்வரூப விசேஷணமாகும்.

"இப்படி ஸபத் நீகனைக்கொண்டு ஸர்வரக்ஷண தீக்ஷிதனைய் "சாந்தாநந்த" (சதுச்லோகீ 4) "ஸ்வவைச்வரூப்யேண" (ஸ்தோத்ரரத்நம் 38) இத்யாதிகளிற்படியே ஸ்வரூபத்தாலும் குணத்தாலும், ப்ரணயத்தாலும் ஸுச்லிஷ்டனான சரண்யனுக்கு "தன்னடியார் திறத்தகத்து" (பெரியாழ்வார் திருமொழி 4-9-2) இத்யாதிகளில் அபிப்ரேதங்களாய் புருஷகாரமும் தன்னேற்ற மென்னலாம் படியான சரண்யத்வ உபயுக்தங்களான ஆகாராந்தரங்களைச் சொல்லுகிறது இங்குற்ற நாராயண சப்தம். அவையாவன :—சரீராத்மபாவநியாமகங்களான சேஷசேஷித்வாதி ஸம்பந்தங்களும், ஆச்ரயணீயதைக்கும் பலப்ரதானத்துக்கும் உபயுக்தமான குணவர்க்கமும், ஸஹகாரி நிரபேக்ஷமாக ஸர்வத்தையும் நினைத்தபோதே தலைக்கட்டவல்ல ஸங்கல்பரூபவ்யாபாரமும், "ஸ்வமுத்திச்ய ஸ்ரீமாந்" (ஸ்ரீரங்கராஜஸ்தவம் 2-87) என்கிறபடியே ஆச்ரிதஸம்ரக்ஷணம் தானும் தன்பேறாக ரக்ஷிக்கிற ப்ரயோஜந விசேஷமும். இங்கு குணவர்க்கம் என்கிறது :—காருண்ய ஸௌலப்ய ஸௌசீல்ய வாத்ஸல்ய க்ருதஜ்ஞதாதிகளும், ஸர்வஜ்ஞத்வஸர்வ சக்தித்வ ஸத்ய ஸங்கல்பத்வ பரிபூர்ணத்வ பரமோதாரத்வாதிகளும்; காருண்யம் - ஒரு வ்யாஜத்தை முன்னிட்டு நம்முடைய துக்கங்களைக் கழிக்கைக்கு தானே நினைத்திருக்கையாலே, "எம்மாபாவியர்க்கும் விதிவாய்க்கின்று வாய்க்கும்" (திருவாய்மொழி 5-1-7) என்று நம்புகைக்கு

உறுப்பாம்; ஸௌலப்யம் - "சேணுயர்வானத்திருக்கும் தேவ பிரான்" (திருவாய்மொழி 5-3-9) என்று அகலாதபடி "ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம் நாராயணனே நமக்கே பறை தருவான்" (திருப்பாவை. 1) என்று ஆபால கோபாலம் அணியனுய் அபேக்ஷிதம் தந்தருளும் என் கைக்கு உறுப்பாம்; ஸௌசீல்யம் - "அம்மானுழிப் பிரானவனெவ்விடத்தான்யானுர்" (திருவாய்மொழி 5-1-7) என்று அகலாமைக்கு உறுப்பாம்; வாத்ஸல்யம் - "நீசனேன் நிறைவொன்றுமிலேன்" (திருவாய் மொழி 3-3-4) என்று ஸ்வதோஷத்தைக் கண்டு அவன் அநாதரிக்கிறுன் என்று வெருவாமைக்கு உறுப்பாம்; க்ருதஜ்ஞத்வம் - "மாதவனென்றதே கொண்டு" (திருவாய்மொழி 2-7-4) "திருமாலிருஞ்சோலை மலை யென்றேன்" (திருவாய்மொழி 10-8-1) என்கிறபடியே தன் பக்கலிலே அதிலகுவாயிருப்பதொரு வ்யாஜத்தைக் கண்டாலும் இனி நம்மைக் கைவிடான் என்கிற தேற்றத்திற்கு உறுப்பாம்; மார்தவார்ஜித வாதிகளுக்கும் இப்படியே உபயோகம் கண்டுகொள்வது. ஸர்வஜ்ஞத்வம் - "எல்லாமறிவீர்" (திரு மொழி 4-9-6) என்கிறபடியே ஆச்ரிதருடைய இஷ்ட்ப்ராப்தி அநிஷ்டநிவ்ருத்தி உபாயங்களையும் விரோதிகளையும் அறிகைக்கு உறுப்பாம். ஸர்வசக்தித்வம் - "கூட்டரிய திருவடிகட்கூட்டினை" (திருவாய்மொழி 4-9-9) என்கிறபடியே ஆச்ரிதர் மநோரதங்களைக் கடிப்பிக்கைக்கு உறுப்பாம்; ஸத்யஸங்கல்பத்வம் - "சன்மசன் மாந்திரங்காத்து" (திருவாய்மொழி 3-7-7) இத்யாதிகளிற்படியே 'மோக்ஷயிஷ்யாமி' (ஸ்ரீபகவத்கீதை 18-66) என்றது முடிவு செய்கைக்கு உறுப்பாம்; பரிபூர்ணத்வம் - "செல்வநாரணனென்று" (திருவாய்மொழி 1-10-8) இத்யாதிகளிற்படியே பாவ தாரதம்யம் பார்க்கும் அளவே ஆனுலும் நாம் செய்யும் கிஞ்சித்காரத்தில் கௌரவலாகவங்களைப் பாராமைக்கு உறுப்பாம்; பரமோதாரத்வம் - அல்பமான ஆத்மாத்மீயங்களை சோரா நீதநூபுரந்யாயத்தாலே ஸமர்ப்பித்தவர்களுக்குத்தான் "எனக்கே தன்னைத் தந்த கற்பகம்" (திருவாய்மொழி 2-7-11) என்கிறபடியே, அநந்தமான ஆத்மாத்மீயங்களை வழங்குகைக்கு உறுப்பாம். ஸ்தைர்ய தைர்யாதிகளுக்கும் இப்படி உபயோகம் கண்டுகொள்வது." [ஸாரஸாரம். த்வயாதிகாரம்.]

இப்பிரபத்திவித்யைக்கு உபயுக்தங்களாய் அநுஸந்தேயங்களான - ஸர்வஜ்ஞத்வம், ஸர்வசக்திதத்வம், ஸர்வஸ்வாமித்வம்

முதலான குணங்கள் எல்லாம் "த்வயி" என்கிற பதத்தில் அநுஸந்தேயம். இவை முன்னர் விளக்கப் பெற்றிருத்தல் காண்க.

பகவானுடைய குணங்கள் எல்லாம் பரோபகாரார்த்தமாகவே (பிறருக்கு உதவுவதற்காகவே) யிருக்கிறபடியால் அவனைக் கல்யாண குணவான் என்று சாஸ்த்ரங்கள் முறையிடுகின்றன. ஸர்வஜ்ஞத்வம் முதலான குணங்களை இவ்வளவு என்று எண்ண முடியாது. ஸர்வஜ்ஞத்மாவது - எப்பொழுதும் எல்லா வஸ்துக்களையும் உள்ளது உள்ளபடியே பார்ப்பது. ஸர்வசக்தித்வமாவது - நினைத்ததை நினைத்தபடியே முடிக்க சக்தி யுண்டாயிருக்கை. இந்த சக்தி பல விதம். ஸத்யகாமத்மாவது - போக்யமான வஸ்துக்கள் நினைத்தபோது ஸித்தமாயிருக்கை. ஸத்யஸங்கல்பத்வமாவது - தான் ஸங்கல்பித்ததற்கு (நினைத்ததற்கு) ஒருவராலும் தடையில்லாமல் ஸங்கல்பித்தபடியே நிறைவேற்றுகை. ஸர்வேச்வரன் விபீஷணாழ்வானை ரக்ஷிக்க ஸங்கல்பித்தபோது ஸுக்கிரீவன் அங்கதன் முதலான தம்முடைய அந்தரங்கமான மந்திரிகள் தடுத்தபோதிலும் அந்த ரக்ஷண ஸங்கல்பம் தடையில்லாமல் நிறைவேறிற்று. பாணாஸுரனை சிக்ஷிக்க (தண்டிக்க) ஸங்கல்பித்தபோது, சிவன், ஸுப்ரஹ்மண்யன் முதலானவர்கள் குறுக்கே விழுந்தபோதிலும் அவனைத் தண்டித்தே விட்டான். பரமோதாரத்வமாவது - ஆச்ரிதர்களுக்கு அவர்கள் அபேக்ஷித்ததற்கு அதிகமாகவே கொடுத்தும் 'நாமென்ன கொடுத்தோம்' என்றிருக்கை. க்ருதஜ்ஞதையாவது - தன் விஷயத்தில் அல்பம் செய்தாலும் அதை எப்போதும் அதிகமாக நினைத்திருக்கை. ஆச்ரிதவத்ஸலத்வமாவது - ஆச்ரிதர்களிடத்தில் எவ்வளவு குற்றம் இருந்தாலும் அதைப் பாராததுபோல் இருக்கை. ஸௌசீல்யமாவது - தான் எல்லோரையும்விட ஸர்வப்ரகாரத்தாலும் உத்தமனாயிருந்தும், ஜாதி, குணம், நடத்தை இவை எல்லாவற்றிலும் மிகவும் தாழ்ந்தவர்களுடன், ஸஹோதரர்களோடுபோல் பிரியமாகப் பழகுந்தன்மை. ஸௌலப்யமாவது - ஆச்ரிதர்கள் நினைத்தமாத்திரத்தில் அவர்கள் இருக்கும் இடத்திற்குத்தானே வந்துகிட்டுகை. ஆச்ரிதபாரதந்த்ர்யமாவது - தான் ஸர்வேச்வரனாயிருந்தும் ஆச்ரிதர் இட்ட வழக்காக அவர்கள் இடும் ஏவல் தொழில்களைத் தன்மேன்மைக்குத் தகாததாயிருந்தும் மிக அன்புடன் இவ்வளவு கிடைத்ததே என்று செய்வது. இவை

முதலான எண்ணிறந்த மஹா குணங்கள் ஸர்வேச்வரனுக்கு ஸ்வபாவ ஸித்தங்கள் என்று ச்வேதாச்வதரோபநிஷத்தில் சொல்லப் பெற்றிருக்கிறது. இவனுக்கு அஜ்ஞானம் ஒருகாலும் கிடையாது.

[இப்பிரபத்தி வித்யைக்கு உபயுக்தங்களாய் அநுஸந்தேயங்களான, இங்கு விளக்கப்பெற்றுள்ள ஸர்வஜ்ஞத்வம் முதலான அகில குணங்களும் "த்வயி" என்கிற பதத்தில் அநுஸந்தேயம்.]

ஸ்வாமிந் ஸ்வசேஷம் ஸ்வவசம்
ஸ்வபரத்வேந நிர்ப்பரம்,
ஸ்வதத்த ஸ்வதியா ஸ்வார்த்தம்
ஸ்வஸ்மிந் நிஸ்யஸிமாம் ஸ்வயம். (3)

[**ஸ்வாமிந்** - ஸ்வத்வத்தை உடையவரே !, ஸர்வசேஷியான ஸ்ரீமந் நாராயணனே !; **ஸ்வசேஷம்** - தேவரீருடைய ஸொத்தாகவும், தேவரீருக்குச் சேஷபூதனுயும்; **ஸ்வவசம்** - தேவரீருக்கு அதீநனுயும் இருக்கிற, தேவரீருக்கு உட்பட்டவனும் ஆன; **மாம்** - அடியேனை; **ஸ்வதத்த ஸ்வதியா** - தேவரீரால் கொடுக்கப் பெற்றதான தேவரீரைக் குறித்ததான புத்தியினுல், தேவரீரால் அளிக்கப்பெற்ற தேவரீருடைய புத்தியால், இச்சரீரப்ரதாநம் முதல் ஸதாசார்ய ஸம்ச்ரயணம் பண்ணிவைத்து தீவயோச் சாரணம் வரையில் உள்ள ஜ்ஞாநத்திஞல்; **ஸ்வார்த்தம்** - தேவரீருக்காகவே, தேவரீருடையலாபத்துக்காகவே; **நிர்ப்பரம்** - அடியேனுக்குச் சுமையில்லாதபடி, அடியேனுக்கு ஒரு பொறுப்பும் இல்லாதபடி; **ஸ்வபரத்வேந** - செய்யவேண்டிய கார்யங்கள் தேவரீருடைய பரமாக, தேவரீருடைய பொறுப்பாகவே; **ஸ்வஸ்மிந்** - தேவரீரிடத்தில்; **ஸ்வயம்** - தேவரீரே; **ந்யஸ்யஸி**- வைத்துக் கொள்ளுகின்றீர்.

அடியேனை ஸொத்தாகவுடைய பெருமாள், தனக்கு அடிமையானவனும், தன்வசமாயிருப்பவனும், தன்னிடம் பரத்தை வைத்து விட்டபடியாலே எல்லாவித பரமும் நீங்கினவனுமான அடியேனுக்குத் தன்னைப்பற்றிய ஞானத்தைத்தானே கொடுத்து, தான் அளித்த தன்னறிவாலே தனக்காகவே தன்னிடத்தில்தானே அடியேனை வைத்துக் கொள்ளுகிருர்.

முன் சுலோகத்திற் சொன்ன ஸாங்கமான பரஸமர்ப்பணமும் நிவ்ருத்திதர்மத்துக்கு உரியதான ஸாத்விகத்யாகம் என்கிற அங்கத்துடன் அநுஷ்டிப்பது என்று அருளிச் செய்கிறுர் இதில்.

ஸர்வநியந்தாவாயாகிய திருநாராயணனே! தேவரீருக்கு ஒரு மேன்மையைத் தருவதற்காகவே ஏற்பட்டவனும், தேவரீர் இட்ட வழக்காய் இருந்து அதீநனும் அடியேன் இருக்கின்றேன். இவ்வாறுள்ள அடியேனை தேவரீர் கொடுத்த தேவரீருக்குச் சேஷமான புத்தியாலே வேறொருவரின் ப்ரார்த்தனையின்றி தேவரீர் பிரயோஜநத்துக்காகவே அடியேனுக்கு ஒரு பரம் இல்லாமல் இருக்கும்படி தேவரீர் திருவடிகளில் வைத்துக் கொள்ளுகிறீர்.

தன்னதிகாராநுரூபமாக தவிர வேண்டுமவைதவிர்த்து, செய்ய வேண்டுமவை செய்யுமிடத்தில் அடியேன் ஸ்வதந்த்ரனாய்ச் செய்கிறேன் அல்லேன். அடியேனுக்கு இக்கர்மம் சேஷபூதம் என்றும், அடியேனுக்கு இன்னபலத்துக்கு இதுவே ஸாதனம் என்றும் பிறக்கும் நினைவை மாற்றி ஸர்வேச்வரன் செய்விக்க அவனுக்குச் சேஷமான கைங்கரியத்தை அவன் உகப்பே பிரயோஜனமாக அநுஸந்தித்து அநுஷ்டிக்கைஸாத்விகத்யாகம். இவ்வாறு அநுஷ்டிப்பது.

நிவ்ருத்தி தர்மங்களை அநுஷ்டிக்கும் ஜீவன் கர்த்ருத்வத்தையும், மமதையையும், பயனில் ஸம்பந்தத்தையும் விட்டுவிட வேண்டும். இதுவே ஸாத்விகத்யாகம். கர்த்ருவத்தை விடுகையாவது - இந்தக் காரியத்தை யான் செய்யவில்லை, எம்பெருமான் தான் என்னைக்கொண்டு செய்கிறுன் என்று எண்ணுவது. மமதையை விடுகையாவது - எனக்குப் பிரயோஜநத்தைக் கொடுப்பதால் இந்தக் கர்மம் என்னுடையது என்கிற நினைவை விடுவது. பயனில் ஸம்பந்தத்தை விடுகையாவது - இந்தக் கர்மத்தினுல் வரும் பயனை வேண்டாமல் தன் ஸம்பந்தத்தை ஒழித்தல்.

ஸ்வவசம் - என்பதால் தனக்கு ஸ்வதந்த்ரத்தன்மையின்மை சொல்லிற்று.

நிர்ப்பரம் - என்பதால் ரக்ஷணப் பொறுப்பில் தனக்குச் சம்பந்தம் இல்லாமை அறிவிக்கப் பெற்றது.

ஸ்வதத்த - என்கையால் அளிக்கப்பெற்ற புத்தி நான் ஸம்

பாதித்தது அன்று ; அவன்தந்து அருளியதே என்று அஹங்கார நிவ்ருத்தி கூறப்பெற்றது.

ஸ்வதியா - என்பதால் எம்பெருமான் அநுக்ரஹித்த ஜ்ஞாநம் என்னுடையதன்று, அவனுடையதே என்று மமதாத் யாகம் பேசப்பெற்றது.

ஸ்வார்த்தம் - என்பதால் பலத்யாகம் உரைக்கப் பெற்றது.

ஸ்வயம் ஸ்வஸ்மின் ந்யஸ்யஸி - என்பதால் கர்த்ருத்வத் யாகம் கூறியபடி.

“ கீழில் திருவாய் மொழியிலே “ நலமந்தமில்லதோர் நாடு புகுவீர் ” என்று இவர் தாமும் அருளிச்செய்து, ஸர்வேச்வரனும் இவர்க்கும் இவர் பரிகரத்துக்கும் மோக்ஷங் கொடுப்பாளுகப் பாரிக்க, அத்தைக் கண்டு ; தேவரீர் எனக்கு மோக்ஷம் தந்தருளப் பார்த்ததாகில் இங்ஙனே தரப் பார்ப்பது ; அதாகிறது “ உனக்கு மோக்ஷங்கொள் ” என்று எனக்காகத் தருகை யன்றிக்கே, ‘ நமக்காகக்கொள் ’ என்று தேவர்க்கே யாம் படியாகத் தரவேணு மென்று தாம் நினைத்திருந்த படியை அவன் திரு முன்பே ப்ரார்த்திக்கிருர். * * * எம்பார் இத்திருவாய்மொழி யருளிச் செய்யப்புக்கால், இருந்தவர்களை “ யார் ” என்று கேட்டுக் கதவு களையும் அடைப்பித்து, குஹ்யமாகவாம் அருளிச் செய்வது.” [ஈடு. ஒன்பதாந் திருவாய் மொழி - எம்மாவீடு - ப்ரவேசம்.]

எனக்கே யாட்செய் எக்காலத்துமென்று என்
மனக்கே வந்து இடைவீடின்றி மன்னித்
தனக்கே யாக எனைக்கொள்ளு மீதே
எனக்கே கண்ணனை யான் கொள்சிறப்பே.

—(திருவாய்மொழி 2-9-4)

[ஈடு. நாலாம் பாட்டு. இத்திருவாய் மொழியிலே இவர் நிஷ்கர்ஷித்த ப்ராப்யமாவது - ஸ்ரக்சந்தனுதிகளோபாதி தனக்கே யாக எனைக்கொள்ளு மீதே என்றிறே ; இவ்விடத்திலே எம்பார் அருளிச் செய்யும்படி - “ ஸர்வேச்வரன் திரிவிதசேதநரையும் ஸ்வரூபாநு ரூபமாக அடிமைகொள்ளா நின்ருன் ; நாமும் இப்படிப் பெறுவோமேயென்று.” முக்தரும், நித்யரும், தாங்க

ளும் ஆநந்தித்து அவனையும் ஆநந்திப்பிப்பர்கள்; பத்தர் தாங்கள் ஆநந்தியாதே அவனை ஆநந்திப்பிப்பர்கள்; இன்புறும் இவ் விளையாட்டுடையானிறே.'' மயர்வற மதிநலமருளப் பெற்றவர், 'தனக்கேயாக எனைக் கொள்ளுமீதே' என்று ப்ரார்த்திப்பானேன்? 'திருவுள்ளமானபடி செய்கிருன் என்றிராதே' என்று பிள்ளை திருநறையூரரைய எம்பாரைக் கேட்க,'' அது கேளீர்; முன்பு பிரிந்தன்று, பின்பு பிரிவுக்கு ப்ரஸங்கமுண்டாயன்று, இரண்டுமின்றியிருக்கச் செய்தே, 'அகலகில்லேன் அகலகில்லேன்' என்னப் பண்ணுகிறது விஷயஸ்வபாவமிறே; அப்படியே ப்ராப்யருசி ப்ரார்த்திக்கப் பண்ணுகிறது'' என்று அருளிச் செய்தார். எம்மாவீட்டிலெம்மாவீடாய், வைஷ்ணவஸர்வஸ்வமுமாய், உபநிஷத்குஹ்யமுமாய், ஸர்வேச்வரன் பக்கலிலே அபேக்ஷித்துப் பெறுமதாய், இவ்வாத்மாவுக்கு வகுத்ததுமான பாரதந்த்ர்யத்தை அவன் பக்கலிலே அபேக்ஷிக்கிருர். முதலிலேயே "ஆட்செய்" என்னவேணும்; ஆட்செய்யென்று - ஸ்வாதந்த்ர்யத்தை வ்யாவர்த்திக்கிறது. அதில் "எனக்காட்செய்" என்னவேணும்; எனக்காட்செய்என்று - அப்ராப்த விஷயங்களை வ்யாவர்த்திக்கிறது. எனக்கேயாட்செய் என்று - தனக்குமெனக்கும் பொதுவான நிலையைத் தவிர்த்து, "எனக்கேயாட்செய்" என்னவேணும். இதுதான் "ஒழிவில் காலமெல்லா முடனுய் மன்னி நிற்கவேணும்; "க்ரியதாமிதி மாம்வத" என்கிறபடியே, "இன்னத்தைச் செய்" என்று ஏவிக்கொள்ளவேணும்; இப்படி ஒரு வார்த்தை அருளிச் செய்து நெடுங்கை நீட்டாக இருக்கவொண்ணுது, என்னுடைய ஹ்ருதயத்திலே வந்து புகுரவேணும்; புகுந்தாலும் போக்குவரத்துண்டாக வொண்ணுது, ஸ்த்தாவர ப்ரதிஷ்டையாக எழுந்தருளியிருக்கவேணும். இருந்து கொள்ளும் கார்யமென்? என்ருல்,

[தனக்கேயாக வெனைக் கொள்ளுமீதே] - ஸ்ரக்சந்தநாதிகளோ பாதியாகக் கொள்ளவேணும். அது சூடுமவனுக்கும் பூசுமவனுக்கு முறுப்பாய் மிகுதி கழித்துப்போகடு மித்தனையிறே. ஒரு மிதுநமாய்ப் பரிமாரு நின்ருல் பிறக்கும் இனிமையும் இரண்டு தலைக்கும் ஒத்திருக்குமிறே, அங்ஙன் என்னுடைய ப்ரீதிக்கு நான் அந்வயித்தவனுக வொண்ணுது, "நின்" என்றும், "அம்மா" என்றும் - முன்னிலையாக ஸம்போதித்துக் கொண்டு போரா நிற்கச் செய்தே, இங்குப் படர்க்கையாகச்

சொல்லுவானேன் ? என்னில் ; "ப்ராப்ய நிஷ்கர்ஷம் பண்ணுகிற ஸமயத்திலே திருமுகத்தைப் பார்க்கில் வ்யவஸாயங்குலையும்" என்று, கவிழ்ந்திருந்து கையோலை செய்து கொடுக்கிறுர்.

[எனக்கே கண்ணனை] - "தனக்கேயாக" என்ற பின்புத்தை, எனக்கேயிறே. புருஷார்த்தமாகைக்காகச் சொல்லுகிறுர். ஒரு சேத நனிறே அபேக்ஷிப்பான். நீர் அபேக்ஷிக்கிற இது செய்வோமாகப் பார்த்தால் எல்லார்க்கும் செய்யவேணுங்காணுமென்ன, [யான்கொள்] - ஸ்வரூபஜ்ஞாநத்தை நீ பிறப்பிக்க, அத்தாலே ஸ்வரூபஜ்ஞாநமுடைய நான் ஒருவனும் பெறும்படி பண்ண வேணும். உமக்கும் எப்போதும் நம்மாற் செய்யப்போகாதென்ன, [சிறப்பே] - பலகால் வேண்டா, ஒருகால் அமையும் ; அதுதன்னிலும், திருவாசலைத் திருகாப்புக்கொண்டு ஒருவர் அறியாதபடி சிறப்பாகச் செய்யவும் அமையும். சிறப்பாகிறது - ஏற்றம். அதாவது புருஷார்த்தம். ஸ்வரூபாநுரூபமான புருஷார்த்தத்தைக் கொண்டருளவேணுமென்றபடி. சிறப்பாவது - முக்தியும் ஸம்பத்தும், நன்றியும். இவற்றில், நான் உன்பக்கல் கொள்ளும் மோக்ஷம் உனக்கேயாக எனைக்கொள்ளுமதுவே. உன்பக்கல் நான் கொள்ளும் ஸம்பத்தென்னவுமாம். நன்றியென்னவுமாம். என்பன இவண் அநுஸந்தேயம்.

["தமக்கேயா யெமைக் கொள்வார் வந்தார் தாமே" என்பது இம் மஹாதேசிகன் அருளிச் செய்த திருச்சின்னமாலை (4) ப்பாசுர ஈற்றடி.]

ஸ்ரீமந் அபீஷ்டவரத
த்வாம் அஸ்மி சரணம் கத:,
ஏதத் தேஹாவஸாநே மாம்
த்வத்பாதம் ப்ராப்ய ஸ்வயம். (4)

[ஸ்ரீமந் - திருமாமகளுடன் கூடிய ஸ்ரீமந்நாராயணனே !, இறையும் அகலகில்லாத பெரியபிராட்டியார் உறை மார்ப !; **அபீஷ்டவரத** !-ஆச்ரிதர்களுக்கு இஷ்டமான பலன்களை அளித்துக் காக்கின்றதனுல் வரதன் என்று அஸாதாரணமான திருநாமத்தையுடைய பேரருளாளரே !; **த்வம்** - தேவரீரை ; **சரணம்**- உபாயமாக ! **கத: அஸ்மி** - (அடியேன்) அடைந்தவனுக இருக்

கின்றேன், ஆகின்றேன் ; ஏதத் தேஹா வஸாநே - இந்தச் சரீரத்தின் இறுதிக் காலத்திலே ; த்வத் பாதம் - தேவரீருடைய திருவடிகளை, வைகுந்தநாதனுன தேவரீர் திருவடிகளை ; ஸ்வயம் - தேவரீரே ; ப்ராப்ய - (வேருேர் உதவியின்றி) அடைவிக்க வேண்டும்.

பெருந்தேவிநாதனே ! கருதவரந்தருந் தெய்வப் பெருமாளே ! தேவரீரை அடைக்கலமாக அடைந்திருக்கிறேன். இச்சரீரம் விழும் பொழுது அடியேனுக்குத் தேவரீர் திருவடிகளைத் தேவரீரே சேர்ப்பிக்க வேண்டும்.

வேண்டுவார் வேண்டுவன நல்கி அளிக்கும் திருநாரணனே ! அடியேன் தேவரீரையே சரணமாகப் பற்றினேன். தேவரீர் வேருெரு உதவியை எதிர்பாராமல் இந்தச் சரீரத்தின் முடிவிலே தேவரீர் திருவடிகளை அடைவிக்கவேண்டும்.

ஸ்ரீய: பதியான நாராயணனே உபாயமாகவும் உபேயமாக வும் இருக்கின்ருன் என்பது இதனுல் அறிவிக்கப் பெற்றதாயிற்று.

ஏதத்தேஹாவஸாநே - என்பதால் ஆர்த்தனுய் இப் பொழுதே மோக்ஷம் தந்து அருளவேண்டும் என்று கோரிப் பிர பத்தி பண்ணினுலும் உடனே சரீரத்தின் முடிவைச் செய்து மோக்ஷத்தைக் கொடுப்பன் என்று ஏற்படும். பிரபத்தி இரு வகைப்படும். அவையாவன :—(1) த்ருப்ப்ரபத்தி (2) ஆர்த்த ப்ரபத்தி. இச்சரீரம் உள்ள வரையில் கர்ம பலன்களை அனு பவித்து, இறுதியில் மோக்ஷத்தைப்பெற விரும்பிச் செய்யும் சரணு கதி த்ருப்த ப்ரபத்தி. இச்சரீரம் உள்ளவரையிலும் கூடப் பொறுக்காது இந்தக்ஷணமே மோக்ஷம் பெறவேண்டும் என்று விரும்பிச் செய்யும் சரணுகதி ஆர்த்தப்ரபத்தி.

புகலுலகி லில்லாது பொன்னருள்கண் டுற்றவர்க்கு
மகலகிலா வன்பர்க்கு மன்றேதன் னருள்கொடுத்துப்
பகலதனுற் பழுங்கங்குல் விடிவிக்கும் பங்கயத்தா
ளகலகிலே னென்றுறையு மத்திகிரி யருண்முகிலே.

(—தேசிகமாலை, அருத்தபஞ்சகம் 8.)

[திருமாமகள் க்ஷணகாலமும் பிரியமாட்டேன் என்று நித்ய வாஸம் செய்யப் பெற்றவனும், திருவத்திமாமலையில் நின்று

கருணையாகிய நீரைப் பொழியும் மேகம் போன்றவனுமான பேரருளாளன், உலகத்தில் வேறு உபாயம் அநுட்டிக்க முடியாமல், பெரிய பிராட்டியின் திருவருளைப் புருஷகாரப் பிரபத்தியால் பெற்று, தன்னைச் சரணம் அடைந்தவருக்கும், தனது அநுபவத்தை விட்டு ஒரு கணப்பொழுதும் பிரிந்து இருக்கமுடியாத காதல் உள்ள பாகவதர்கட்கும் அவர்கள் பிரார்த்தித்த காலத்திலே தன் பரமகிருபையை வைத்து மோக்ஷாநுபவம் ஆகிய பகலால் அநாதியான ஸம்ஸாரம் ஆகிய காளராத்திரியை நீக்கிபொழுது விடியச் செய்வான்.] என்று இவ்வேதாந்தவாரியனே விளம்புதல் காண்க.

நம்மாழ்வார்

சரணமாகும் தனதாளடைந்தார்க்கெல்லாம்
மரணமானல் வைகுந்தம் கொடுக்கும் பிரான்.

—(திருவாய்மொழி. 9-10-5)

["ஈடு - அஞ்சாம்பாட்டு. இப்படி பக்தியோகத்தால் ஆச்ரயிக்க க்ஷமரன்றிக்கே தன் திருவடிகளையே உபாயமாகப் பற்றினர் திறத்து அவன் செய்தருளும்படியை அருளிச் செய்கிருர்.]

(சரணமாகும் தனதாளடைந்தார்க் கெல்லாம்)—ஜந்ம்வ்ருத்தஜ்ஞாநங்களால் குறைய நின்ருரேயாகிலும், தன் திருவடிகளையே உபாயமாகப் பற்றினுர்க்கெல்லாம் ரக்ஷகனும். கீழ் மூன்று பாட்டாலும் சொன்ன பக்தியோகம் அதிக்ருதாதிகாரம், இதில் சொல்லுகிற ப்ரபத்தி ஸர்வாதிகாரம் என்கிறது; "ஸமோஹம் ஸர்வபூதேஷு" என்னக்கடவதிறே. பகவத் விஷயந்தான் ஸ்பர்ச வேதியா யிருக்குமிறே; கைசிகத்தில் பகவத் ஸம்பந்தம் உடையான் ஒரு சண்டாளனேட்டை ஸம்பாஷணம் ப்ராஹ்மணனுடைய ஆசாரவைகல்யத்துக்குப் பரிஹாரமாய்த்து; அவ்விடத்திலெல்லாம் சொல்லுகிற அர்த்தம் இதுவே யாய்த்து.

(மரணமானல் வைகுந்தம் கொடுக்கும் பிரான்)—இவன் தன் பக்கலிலே பரந்யாஸம் பண்ணின அன்று தொடங்கி இவனை யொழியத் தனக்குச் செல்லாமை யுண்டாயிருக்கச் செய்தேயும், இவனுடைய ருசியை அநுவர்த்தித்து, சரீரவிச்லேஷத்தளவும் அவஸரப்ரதீக்ஷனுய் நின்று, பின்னையதுண்டானல் பரமபதத்

தைக் கொடுக்கும் உபகாரகன். தன் திருவடிகளைப் பற்றினவன்றே தானிருக்கிற விடத்திலே இவனைக் கொடுபோய்ச் சேரவைத்துக் கொள்ளவேண்டியிருக்கச் செய்தேயும், நடுவு இவனிருக்கும் நாலு நாளும் அவனுக்கு ஒரு பகல் ஆயிரம் ஊழியாயிருக்கையாலே, 'மரணமானல்' என்கிறது. "மரணமானல்" என்கிறது - தனக்கு அசக்தியில்லை, இவனுக்குக் கர்த்தவ்யமில்லை, இவன் ருசியைக் கடாக்ஷித்து நிற்கிற வித்தனே. இப்பாட்டில் "மரண மானல்" என்றத்தைக் கொண்டிறே கீழ்ச்சொன்ன நிரூபரண மெல்லாம்.] என்றிறே அருளிச் செய்தார்.

தன்னினைவில் விலக்கின்றித் தன்னை நண்ணர்
நினைவனைத்துந் தான்விளைத்தும் விலக்குநாத
னெந்நினைவை யிப்பவத்தி லின்று மாற்றி
யிணையடிக்கீ ழடைக்கலமென் றெம்மை வைத்து
முன்னினைவால் யாமுயன்ற வினையால் வந்த
முனிவயர்ந்து முத்திதர முன்னே தோன்றி
நன்னினைவா னுமிசையுங் கால மின்றே
நாளையோஓ வென்றுநகை செய்கின் றனே.

—(தேசிகமாலை, அதிகாரச்சுருக்கு. 49)

[ஸர்வேச்வரன் ஸங்கல்பித்த விஷயத்தை எவரும் தடை செய்ய இயலாது. அவன், தன்னை அடையாத நாஸ்திகர்களுக்குச் சகலவித ஆசைகளையும் உண்டாக்கி அவர்கள் அந்தப் போகங்களை அடைய முடியாது தானே தடை செய்கின்றான். இத்தகைய எம்பெருமான் நம்மீது அருள்புரிந்து நமக்கு ஸம்ஸாரத்தில் உள்ள நசையைத் தீர்த்தான்; தன் திருவடிகளின் கீழே நம்மைக்காக்க வேண்டிய வஸ்துவாகக் கொண்டான்; முன்பு அகங்கார மமகாரங்களால் நமக்கு ஏற்பட்ட கர்மங்களால் தனக்கு உண்டான கோபம் தீர்ந்தான்; நமக்கு மோக்ஷத்தை அளிக்க முற்பட்டுப் பல அவதாரங்களையும் செய்து நம்மோடு கலந்து பரிமாறினன். இப்படி யிருந்தும் இந்த அருமையை அறியாத நாம் ஸம்ஸாரத்தைவிட மனங்கொள்ளாது 'இன்றைக்கு நாளைக்கு' என்று காலம் தாழ்த்துவதைக் கண்டு அவன் பரிஹஸிக்கின்றான். என்னே நம் அறியாமை! 'நான் மோக்ஷம்

கொடுப்பதற்கு விரைந்தாலும் சேதநன் ஸம்ஸாரத்தைவிட மனங் கொள்ளாது 'இன்று ஆகட்டும், நாளை ஆகட்டும்' என்று காலம் தாழ்க்கின்றுன், என்னே இவன் அறியாமை!' என்று பகவான் பரிஹஸிக்கின்றுன் என்க.] என்றும் ;

ஒன்றே புகலென் றுணர்ந்தவர் காட்டத் திருவருளா
லன்றே யடைக்கலங் கொண்டநம் மத்தி கிரித்திருமா
லின்றே யிசையி னிணையடி சேர்ப்ப ரினிப்பிறவோ
நன்றே வருவதெல் லாநமக் குப்பர மொன்றிலதே.

—(தேசிகமாலை, அமிருதரஞ்சனி. 18)

[ஐம்பொருளையும் சரீராத்மபாவம் முதலிய ஸம்பந்தத்தையும் அறிந்த ஆசார்யர்கள் 'ஸ்ரீமந்நாராயணன் ஒருவனே உபாயம்' என்று உபதேசிக்க, அல்லது, எம்பெருமானே உபாயம் என்று அறிந்த ஆசார்யர்கள் அவன் திருவடிகளில் நம்மை ஸமர்ப்பிக்க, பிரதி உபகாரத்தை எதிர்பாராத, சிறந்த அவனுடைய கிருபை யினுல், அப்பொழுதே ரக்ஷிக்கப்பட வேண்டிய வஸ்துவாக ஏற்றுக் கொண்ட நம்முடைய அத்திகிரிநாதனுன பேரருளாளர், இப் பொழுதே முத்தியைப் பெற நாம் ஸம்மதித்தால் தம்முடைய இரண்டு திருவடிகளில் சேர்த்துக்கொள்வார். இனி மறுபடியும் இக்கர்ம பூமியில் பிறக்க மாட்டோம். இனி இச்சரீரம் அழியும் அளவும் வரும் இன்பங்களும் துன்பங்களும் ஆகிய எல்லாம் நமக்கு அநுகூலங்களே. இனி நாம் உஜ்ஜீவிப்பதற்காகச் செய்ய வேண்டிய பொறுப்பு ஒன்றும் இல்லை.] என்றும் இந்ந்யாஸதசக வாசிரியர் தாமே கூறியருளியுள்ளார்.

இப்பாசுரத்துக்கு நம் ஸ்வாமியே வியாக்கியானம் இட்டுள் ளார். அதிற்சில பங்க்திகள் தருவாம் இங்கு.

"நம்மத்திகிரித் திருமால்" என்றது - 'வேகவத்யுத்தரே தீரே புண்யகோட்யாம் ஹரிஸ்ஸ்வயம், வரதஸ் ஸர்வபூதாநா மத்யாபி பரித்ருச்யதே', 'நிகரில் புகழாயுலகு மூன்றுடையா யென்னை யாள்வானே' இத்யாதிகளிற்படியே ஆச்ரித ஸம்ரக்ஷ ணைப யுக்த ஸௌசீல்யஸ் ஸ்வாமித்வ விசிஷ்டனுய், நண்ணி னவர்களுக்கு விண்ணுலகந்தர விரைந்து ரக்ஷாபேக்ஷாப் ரதீக்ஷனுய் மண்ணுலகில் வந்து பலப்ரதா நோந்முகனுய் நிற்கிற பெருமாள் என்றபடி.

'இன்றே யிசையிலிணையடிசேர்ப்பர்' என்றது - 'க்வாஹ மத்யந்துர்புத்தி:க்வ சாத்ம ஹிதவீக்ஷணம், யத்தி தம் மம தேவேச ததாஜ்ஞாபய மாதவ. த்வாம் ப்ரபந்நோஸ்மி தாஸ ஸ்தே நாந்யா க்வாபி கதிர் மம, அத்யைவ கிங்கரீ க்ருத்ய நிதேஹி த்வத்பதாம் புஜே.' இத்யாதிகள்படியே பரமபுருஷார்த்தைக நமஸ்காரமளவில் அப்போதே கொடுவுலகு காட்டாதே கொழுஞ் சோதி யுயரத்துக் கூட்டரிய திருவடி கூட்டி அருள்வர் என்றபடி."

—(ஸ்ரீமத்ர்ஹஸ்யரத் நாவளீ ஹ்ருதயம்.)

இச்சுலோகத்தில் த்வய மந்திரத்தின் கிரமத்தை அநுஸரித்துச் சரணுகதி செய்ததின் பின் பலனைப் பிரார்த்திக்கிருர்.

ஆர்த்தனுய் இப்போதே மோக்ஷம் தரவேணும் என்று பிரார்த் திக்க வேண்டியிருக்க "ஸம்ஸார ஏஷ பகவந் நபவர்க" என்றும், "வைகுண்ட வாஸேபி நமே பிலாஷ:" என்றும் சொல்லுகிறபடியே அர்ச்சாவதார ஸேவாகால க்ஷேப ருச்யாதி களாலே கால விளம்பத்தைப் பொறுத்தேன். இதன் முடிவில் தந்தருள வேணும் என்கின்ருர்.

நிரந்தரம் நிர்விசத ஸ்த்வதீய
மஸ்ப்ருஷ்ட சிந்தாபத மாபிரூப்யம்,
ஸத்யம் சபே வாரண சைலநாத
வைகுண்ட வாஸேபி நமேபிலாஷ:.

நின்னதாய் நாக நாத நேடுசிந்தையினை மீறி
மன்னுநின் னழகு வாய்ந்த வடிவினை மகிழ நோக்கி
யென்றுமே யனுப விக்கு மெனக்குவை குண்ட வாஸந்
தன்னிலு மாசை யில்லை சத்திய வாணை யீதே. (49)

[ஏ ! ஹஸ்தீச ! சிந்தைக்கும் எட்டாத நின் திருமேனியின் அழகை என்றும் கண்களாற் கண்டு களிக்கும் அடியேனுக்கு வைகுண்ட வாசத்திலும் ஆசையில்லை என்று சத்தியமாக சபதம் பண்ணுகிறேன்.] என்பதையும் இங்கு நினைக.

த்வச் சேஷத்வே ஸ்த்திர்தியம்
த்வத்ப்ராப்த்யேக ப்ரயோஜநம்,

நிஷித்த காம்ய ரஹிதம்
குரு மாம் நித்ய கிங்கரம். (5)

[(பகவானே !) மாம் - அடைக்கலமான அடியேனை ; த்வத் சேஷத்வே - தேவரீருக்குச் சேஷ பூதமாயிருப்பதிலே ; ஸ்த்தி ரதியம் - உறுதியான புத்தியை உடையவனுக ; குரு - செய்தருள வேண்டும் ; த்வத் ப்ராப்தி ஏக ப்ரயோஜநம் - தேவரீரை அடைதலே முக்கிய பலம் என்ற எண்ணம் உடையவனுகவும் ; குரு - செய்தருள வேண்டும் ; நிஷித்த காம்ய ரஹிதம் - சாஸ்திரங்களில் விலக்கப்பட்டவைகளான காம்ய கர்மங்களில் ஸம்பந்தம் அற்றவனுகவும், சாஸ்திரங்களில் நிஷித்தங்களான அற்ப பலத் தாசையினுலே சூந்யனுகவும் ; குரு - செய்தருளுக ; நித்ய கிங்கரம் - எப்போதும் தாஸவ்ருத்தி செய்பவனுகவும், இவ் வாறு நிலை நின்ற அடிமைக்காரனுகவும் ; குரு - செய்தருள வேண்டும்.

மேல் ஐந்து சுலோகங்களாலே உத்தரக்ருத்யத்தைப் பிரார்த்திக்கிருர். அவற்றில் முதல் மூன்று சுலோகங்களால் இங்கு இருக்கும் நாட்களில் ஒரு குற்றமும் இன்றிப் பண்ணும் உத்தர கிருத்தியம் பிரார்த்திக்கப் பெறுகிறது. இவ்வைந்தாவது சுலோ கத்தில் சேஷத்வாநுஸந்தாந பூர்வமாக நித்ய கிங்கரத் தன்மை யைப் பிரார்த்திக்கிருர்.

தேவரீருக்கே அடியேன் என்பதிலே திடமான ஞானத்தை உடையவனும், தேவரீரை அடைவது ஒன்றே பயனுகக் கொண்ட வனும், விலக்கப்பட்ட கர்மங்களையும், காமிய கர்மங்களையும் விட்டவனும் ஆன அடியேனை நித்ய கிங்கரனுகச் செய்து கொள்ள வேண்டும்.

தேவரீரிடத்தில் சரணுகதி பண்ணி பரம் அற்றிருக்கிற அடி யேனுக்குச் சேஷித்வம் ஒருக்காலும் தோற்ருமல் தேவரீருக்கே சேஷம் என்ற நல்ல புத்தியை நிலையாய் இருக்கும்படி செய்தருள வேண்டும். தேவரீரை அடைவதைத் தவிர இதர பயனில் ஆசை யற்றவனுகவும் பண்ணவேண்டும். சாஸ்திரங்களில் தள்ளுண்ட கர்மங்களையும், பசுபுத்திராதி அற்ப பலன்களையும் விடும்படிக்கான புத்தியையும் தந்தருள வேண்டும். இப்படி எப்போதும் தேவரீரது கைங்கரியத்தில் ஈடுபட்டவனுகவும் பண்ணி யருளவேண்டும்.

த்வயத்தில் உத்தரகண்டத்தில் நான்காம் வேற்றுமையில் இஷ்டத்தையும், நமஸ்ஸில் அநிஷ்ட நிவ்ருத்தியையும் பிரார்த்திக்கிற முறையில் இங்கும் முதலில் இஷ்டப் பிரார்த்தனையையும், பிறகு அநிஷ்ட நிவ்ருத்தி பிரார்த்தனையையும் செய்து மேல் உத்தராவதி, மேல்எல்லை, இல்லாத நித்திய கைங்கர்ய ரூபமான பல பிரார்த்தனையையும் செய்ததாயிற்று.

நிஷித்த காம்யரஹிதம் - பகவத் பக்தி, ஜ்ஞானம் இவற்றின் வளர்ச்சி, கைங்கரியத்துக்கு உபயோகமானவை, ஸ்ரீ வைஷ்ணவர்களின் ஸம்ருத்தி - இவற்றைப் பகவானிடத்தில் பரமை காந்தியாகிய ப்ரபந்நன் யாசிக்கலாம் என்று பிரமாணம் இருப்பதால் இவை அநிஷித்த காம்யங்களாகும். இவைகட்குப் புறம்பான பசு புத்திராதிகளை வேண்டுதல் நிஷித்தமாம். இது அடியேனுக்கு இல்லாமல் இருக்கும்படி கிருபை பண்ணவேண்டும். அன்றிக்கே நிஷித்தங்களும், காம்யங்களும் இல்லாதபடி செய்தருளவேண்டும். அதாவது - சாஸ்திரங்களில் செய்யக்கூடாதன என்று விலக்கப்பெற்ற கார்யங்களைச் செய்வது முதலிய அபராதங்களைச் செய்யாதிருக்கும்படி கிருபை பண்ணவேண்டும். செய்யாவிட்டால் தோஷத்தைக் கொடுக்காதனவும், ஐஹிகம், ஆமுஷ்மிகம் என்று இருவகையான பயனையளிப்பனவுமான காம்ய கர்மங்களைச் செய்யாதவனாகவும் செய்தருளவேண்டும்.

தேவீ பூஷண ஹேத்யாதி
ஜுஷ்டஸ்ய பகவம் ஸ்தவ:,
நித்யம் நிரபராதேஷு
கைங்கர்யேஷு நியுங்க்ஷ்வ மாம். (6)

[பகவந் ! - ஞானம், சக்தி, பலம், ஐச்வர்யம், வீர்யம், தேஜஸ்ஸு என்கிற ஆறு குணங்கள் நிறைந்த எம்பெருமானே ! ; தேவீ - ஸ்ரீபூமி நீளைகள், பிராட்டிமார்கள் ; பூஷண - திருவணிகலன்கள், திருவாபரணங்கள் ; ஹேதி - திவ்யாயுதங்கள் ; ஆதி - திருவணுக்கன் முதலானவைகளால் ; ஜுஷ்டஸ்ய - அடையப்பெற்ற ; தவ - தேவரீருடைய ; நிரபராதேஷு - குற்றமற்ற ; கைங்கர்யேஷு - குற்றேவல்களில், அடிமைகளில் ; மாம் - அடியேனை ; நித்யம் - ஒழிவில் காலம் எல்லாம், எல்லாக் காலத்

திலும் ; நியுங்க்ஷ்வ - நியமித்தருளவேண்டும், விநியோகித்துக் கொள்ளுக.

அகில விபூதிகளுடன் கூடிய தேவரீர் விஷயத்தில் அபராதம் இல்லாத கைங்கரியத்தை அடியேன் செய்யும்படி நியமித்தருள வேண்டும் என்று பிரார்த்திக்கிருர் இதில்.

ஸ்ரீபூமி நிளேகளாகிற பிராட்டிமார்களாலும், திவ்யாபரணங் களாலும், திவ்யாயுதங்களாலும் அடையப்பெற்று அதனுலே ஆநந்தம் அடையும் தேவரீரது, அபராத லேசமும் புகவொட்டாத கைங்கர்யங்களில் நித்யமாக அடியேனே இறுத்திக்கொள்ள வேண்டும்.

ஷாட்குண்யபரிபூர்ணனே ! அகில ஜகத்தையும் ஆபரண மாகவும், ஆயுதமாகவும் கொண்டு ஸர்வ ஜகத் சரீரகனுய் தேவி மார்களுடனும் ஸகல கல்யாண குணங்களுடனும் கூடிய தேவரீர் விஷயத்தில் இங்குச் சரீரம் உள்ளதனேயும், பின்னர் யாவதாத்ம பாவியாகவும் எவ்விதக் குற்றமும் இல்லாத கைங்கர்யங்களேச் செய்யும்படி அடியேனே நியமித்தருளவேண்டும்.

பகவந் - "மைத்ரேய! பகவச்சப்தஸ் ஸர்வகாரண காரணே!, ஸம்பார்த்தேதி ததா பர்த்தா பகாரோர்த்த்வயாந்வித:. நேதா கமயிதா ஸ்ரஷ்டா ககாரார்த்தஸ் ததாமுநே. ஐச்வர்யஸ்ய ஸமக் ரஸ்ய வீர்யஸ்ய யசஸச்ஸ்ரிய:, ஜ்ஞாநவைராக்ய யோச்சைவ, ஷண்ணும் பக இதீரணு. வஸந்தி தத்ர பூதாநி பூதாத்மந் யகிலாத்மநி, ஸச பூதேஷ்வசேஷேஷு வகாரார்த்தஸ் ததோவ்யய: ஜ்ஞாந சக்தி பலேச்வர்ய வீர்ய தேஜாம்ஸ்ய சேஷத:, பகவச்சப்த வாச்யாநி விநா ஹேயைர் குணுதிபி:. ஏவமேஷ மஹாசப்தோ மைத்ரேய ! பகவாநிதி, பரமப்ரஹ்ம பூதஸ்ய வாஸுதேவஸ்ய நாந்யக:. தத்ர பூஜ்ய பதார்த்தோக்தி பரிபாஷா ஸமந்வித:, சப்தோயம் நோபசாரேண த்வந்யத்ர ஹ்யுபசாரத:." (விஷ்ணு புராணம் 6-5-72.)

[மைத்ரேயரே ! 'பகவான்' என்னும் சப்தம் ஸர்வகாரணங் களுக்கும் காரணபூதனுன ஸர்வேச்வரன் விஷயத்தில் சொல்லப் பெறுகிறது. '(ப்ரக்ருதியை) கார்யதசை அடையச் செய்பவன்,' 'ஸ்வாமி' என்னும் இரண்டு அர்த்தங்களுடன் கூடியது பகாரம்; முனிவரே ! அவ்வாறே 'ரக்ஷிப்பவன், ஸம்ஹரிப்பவன், ஸ்ருஷ் டிப்பவன்' என்பது ககாரத்தின் அர்த்தம். ஸம்பூர்ணமான

O22:41/ N53

ஐச்வர்யம், வீர்யம், யசஸ், செல்வம், ஜ்ஞாநம், வைராக்யம் என்னும் இந்த ஆறு குணங்களுக்கும் 'பக' என்னும் பதம் வாசகமாயிருக்கிறது. பூதங்களை சரீரமாகக்கொண்டவனும், எல்லாவற்றுக்கும் ஆத்மாவாயிருப்பவனுமான அவனிடத்தில் பூதங்கள் வஸிக்கின்றன. அவனும் அகில பூதங்களிலும் வஸிக்கிருன். ஆகையால் அழிவற்றவனை பகவான் வகராத்துக்கு அர்த்தமாகிருன். கீழானவையான முக்குணங்கள் முதலியவற்றுடன் சேராத 'ஜ்ஞாநம், சக்தி, பலம், ஐச்வர்யம், வீர்யம், தேஜஸ் என்னும் எல்லா குணங்களும் 'பகவாந்' என்னும் சப்தத்தினுல் சொல்லப்படுகின்றன. மைத்ரேயரே! இம்மாதிரியாக பகவான் என்னும் இந்த மஹாசப்தம் பரப்ரஹ்மமான வாஸுதேவனுக்கே உரித்தானது. வேறொருவரையும் குறிக்காது. 'பூஜிக்கத்தக்க பொருளைக் குறிப்பது' என்னும் பரிபாஷையுடன் கூடிய இந்த சப்தம் அவன் விஷயத்தில் ஔபசாரிகமாகச் சொல்லப்பெறுவதில்லை. மற்ற விஷயங்களில் ஔபசாரிகமாக அமுக்யமாகச் சொல்லப்பெறுகிறது.]

111783

"பிணக்கற அறுவகைச் சமயமும் நெறியுள்ளியுரைத்த, கணக்கறு நலத்தனன் அந்தமிலாதி யம்பகவன்" (திருவாய்மொழி 1-3-5) [(அந்தமிலாதி) - ஆப்ததமன். எல்லார்க்கும் உத்பத்தி விநாசங்களாலே யிறேஜ்ஞாந ஸங்கோசம் பிறப்பது; இவனுக்கு அவையில்லாமையாலே அகர்மவச்யன் என்கிறது. (அம்பகவன்) - ஜ்ஞாநாதிகளால் அல்பம் உத்கர்ஷம் உடையவன் பக்கலிலே பகவச்சப்தம் வர்த்தியாநின்றதிறே; "அந்யத்ரஹ்யுபசாரத:" பகவச்சப்தம் முக்யமாக வசிப்பது இவன் பக்கலிலே, அல்லாதார் பக்கல் ஔபசாரிகம். (அம்பகவன் வணக்குடைத்தவ நெறிவழி நின்று) - "நமஸ்யந்தச்சமாம் பக்த்யா" என்று பக்தி சரீரத்திலே நின்று அருளிச் செய்தானிறே. அங்கநா பரிஷ்வங்கம்போலே போகரூபமாயிறே இதுதான் இருப்பது.— ஈடு."]

"இப்படி ஸ்வாதீந ஸர்வ ஸத்தாதிகளை உடையவனாய் இருக்கிற ஈச்வரனுடைய ஸ்வரூபம் ஸத்யத்வாதிகளாகிற ஸ்வரூப நிரூபக தர்மங்களாலே ஸத்யமாய் ஜ்ஞாநமாய் அநந்தமாய் ஆநந்தமாய் அமலமாய் இருக்கும். இவ்வர்த்தத்தை 'நந்தாவிளக்கே யளத்தற்கரியாய்' (பெரிய திருமொழி. 3-8-1) என்றும் 'உணர்

முழு நலம்' (திருவாய்மொழி. 1-1-2) என்றும், 'சூழ்ந்ததனிற் பெரிய சுடர் ஞானவின்பம்' (திருவாய்மொழி. 10-10-10) என்றும், 'அமலன்' (அமலனுதிப்பிரான். 1) என்றும் இத்யாதிகளாலே ஆழ்வார்கள் அநுஸந்தித்தார்கள். மற்றுள்ள குணங்களும் திவ்ய மங்கள விக்ரஹாதிகளும் எல்லாம் ஈச்வரனுக்கு நிரூபித ஸ்வரூப விசேஷணங்களாயிருக்கும். இக்குணங்களில் ஜ்ஞாநபல ஐச்வர்ய வீர்யசக்தி தேஜஸ்ஸுக்கள் என்று ஆறு குணங்கள் பரத்வோப யுக்தங்களாயிருக்கும். ஸௌசீல்ய வாத்ஸல்யாதிகள் ஸௌலப்யோப யுக்தங்களாயிருக்கும். இக்குணங்கள் எல்லாம் ஸர்வகாலத்திலும் ஸ்வரூபாச்ரிதங்களாயிருக்கும். பரவ்யூஹாதி விபாகங்களில் குணநியமம் சொல்லுகிறதெல்லாம் அவ்வோரூபங்களை அநுஸந்திப்பார்க்கு ஸர்வேச்வரன் ஆவிஷ்கரிக்கும் குணவிசேஷங்கள் சொல்லுகைக்காக அத்தனை, ஔபநிஷத வித்யா விசேஷங்கள்தோறும் அநுஸந்தேய குண விசேஷங்கள் நியதமானாற்போல பகவச் சாஸ்த்ரோக்தமான ரூப விசேஷாநு ஸந்தாநத்துக்கும் குண விசேஷங்கள் நியதங்கள். அவ்விடத்தில் பரரூபத்தில் ஜ்ஞாநாதிகுணங்கள் ஆறும் வேத்யங்கள்." [ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம். தத்வத்ரயசிந்தநாதிகாரம்.]

"வ்யூஹங்கள் நாலென்றும் மூன்றென்றும் சாஸ்த்ரங்கள் சொல்லும். நாலு வ்யூஹம் உண்டாயிருக்க வ்யூஹவாஸுதேவ ரூபத்துக்கு பரரூபத்திற்காட்டில் அநுஸந்தேய குணபேதம் இல்லாமையாலே த்ரிவ்யூஹம் என்கிறது. இப்பக்ஷத்தை 'குணைஷ்ஷட்பிஸ்த்வேதை: ப்ரதமதரமூர்த்தி ஸ்தவ பபௌ, ததஸ் திஸ்ரஸ் தேஷாம் த்ரியுக யுகளைர்ஹி த்ரிபிரபு:' (வரதராஜஸ்தவம் - 16) என்கிற ச்லோகத்திலே ஸங்க்ரஹித்தார்கள், இப்பரவ்யூஹங்களில் குணக்ரியாவிபாகங்கள் 'ஷாட்குண்யாத் வாஸுதேவ: பர இதி ஸபவாந் முக்தபோக்யோ பலாட்யாத் போதாத் ஸங்கர்ஷணஸ்த்வம் ஹரஸி விதநுஷே சாஸ்த்ர மைச்வர்யவீர்யாத் ப்ரத்யும்நஸ் ஸர்க்கதர்மௌ நயஸிச பகவந்! சக்தி தேஜோநிருத்த: பிப்ராண: பாஸி தத்வம் கமயஸி ச ததா வ்யூஹ்ய ரங்காதிராஜ.' (ஸ்ரீரங்க ராஜஸ்தவம். உத்தர சதகம். 39) என்கிற ச்லோகத்திலே ஸங்க்ரஹிக்கப்பட்டன. ஜாக்ரதாதிபத பேதங்களில் உள்ள விசேஷங்கள் எல்லாம் 'ஜாக்ரத் ஸ்வப்நாத்யல ஸதுரீய ப்ராயத் யாத்ரு க்ரமவதுபாஸ்ய:, ஸ்வாமிந்! தத்தத் ஸஹ பரிபர்ஹ: சாதுர் வ்யூஹம் வஹஸி சதுர்த்தா.' (ஸ்ரீரங்க

ராஜஸ்தவம் 2-40) என்று ஸங்க்ருஹீதங்களாயிற்று. [ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம், தத்வத்ரயசிந்த நாதிகாரம்.]

ஈண்டு ஆளப்பெற்ற மேற்கோள்களின் பொருள் வருமாறு:— மூவிரண்டு குணங்களை உடைய வரதராஜனே! தேவரீருடைய அகில மூர்த்திகட்கும் முதன்மையான பரவாஸுதேவமூர்த்தி கீழ்ச்சொன்ன இந்த ஆறு குணங்களால் விளங்கிற்று. அதற்கு மேல் மும்மூர்த்திகள் அந்த குணங்களுடைய மூவிரண்டுகளாலே பிரகாசித்தன. இப்படிப்பட்ட வ்யவஸ்தை யாதொன்று உண்டு அந்த வ்யவஸ்தை குணங்களை வெளியிடுதல் பற்றியாம். தேவரீரோவெனில் அகில மூர்த்திகளிலுமே எண்ணிறந்த சிறந்த கல்யாண குணங்களையுடையீரா யிராநின்றீர். (வரதராஜஸ்தவம். 16)

பகவானுகிய திருவரங்க நகரதிபனே! பூஜ்யரான தேவரீர் வாஸுதேவாதி வ்யூஹரூபேண அவதரித்து ஞானம் முதலிய ஆறு குணங்களோடுகூடி பரவாஸு தேவர் என வழங்கப் பெற்றவராகி முக்தர்கட்கு அநுபாவ்யராக ஆகின்றீர்; பலத்தோடு கூடின ஞானத்தோடுகூடி ஞானமும் பலமுமாகிற இரண்டு குணங்களை உடையவராய்க் கொண்டு ஸங்கர்ஷண மூர்த்தியாகி ஸம்ஹாரத் தொழிலை நடத்துகின்றீர்; சாஸ்த்ரத்தை அளிக்கின்றீர்; ஐச்வர்ய வீர்யங்களோடு கூடி ப்ரத்யும்ந மூர்த்தியாகி ஸ்ருஷ்டியையும் பண்ணி தர்மத்தையும் ப்ரவர்த்திப்பிக்கிறீர். சக்தி தேஜஸ்ஸுக்களாகிற இரண்டு குணங்களை உடையவராகி அநிருத்த மூர்த்தியாய் ரக்ஷணத் தொழிலை நடத்துகின்றீர், தத்வஜ்ஞாந ப்ரதாநமும் பண்ணுகின்றீர். (ஸ்ரீரங்கராஜஸ்தவம். 2-39.)

திருவரங்கநாதரே! விழித்துக் கொண்டிருப்பாரும், உறங்கிக் கொண்டிருப்பாரும், ஸுஷுப்தியில் இருப்பாரும், மூர்ச்சா தசையில் இருப்பாருமான த்யாநம் செய்பவர்களின் ரீதிகளையுடைய அதிகாரிகளாலே உபாஸிக்கத் தகுந்தவராய் தகுதியான பரிச்சதங்களை உடையவராய் நான்கு வகையாக வ்யூஹசதுஷ்டயத்தை வஹிக்கின்றீர். (ஸ்ரீரங்கராஜஸ்தவம். 2-40)

ஜ்ஞாநசக்தி பலைச்வர்ய வீர்ய தேஜஸ்ஸுக்கள் என்கிற சிறந்த ஆறு குணங்களும் பரவாஸுதேவமூர்த்தியிலே புஷ்கலங்கள் என்றும், எம்பெருமானுக்கு மற்றும் உள்ள அநந்த கல்யாண

குணங்களுள் இந்த ஆறு குணங்களே சிறந்தவை என்றும், இக்குணங்கள் அடியாகத்தான் இவற்றின் சாகோப சாகைகளாக இதர குணங்கள் பெருகுகின்றன வென்றும், “ப்ரக்ருஷ்டம் விஜ்ஞாநம் பலமதுல மைச்வர்ய மகிலம் விமர்யாதம் வீர்யம் வரத பரமா சக்திரபிச, பரம் தேஜச்சேதி ப்ரவரகுண ஷட்கம் ப்ரதமஜம் குணுநாம் நிஸ்ஸீம்நாம் கணநவிகுணுநாம் ப்ரஸவபூ:” என்ற சுலோகத்தில் (வரதராஜஸ்தவம். 15) கூரத் தாழ்வான் பணித்துள்ளான்.

(i) ஜ்ஞாநமாவது - எப்போதும் ஸ்வத: ஏக காலத்தில் பஞ்சேந்த்ரியங்களிஞலும் அறியக் கூடியவற்றை யெல்லாம் ஸாக்ஷாத்கரிக்கை. (ii) சக்தியாவது - ஸ்வ ஸங்கல்ப மாத்திரத்தால் அஸங்க்யேயமான புவநங்கட்கும் உபாதாந காரணமாகை. (iii) பலமாவது - ஸமஸ்தசித் அசித் ஸமூஹங் களேயும் சிறிதும் இளைப்பின்றித் தாங்கும் வல்லமை. (iv) ஐச் வர்யமாவது - ஸ்வாதந்த்ர்யத்தோடு எங்குந் தடையின்றிச் செல்லும் ஸங்கல்பத்தையுடைமை. (v) வீர்யமாவது - தான் உபாதாந காரணமாகிச் சேதநா சேதநங்களே உண்டாக்கியும் தனக்கு ஒரு விகாரமின்றிக்கேயிருக்கை.

(vii) தேஜஸ்ஸாவது - வேருெருதவியின்றி அடைந்தாரது தாபங்களேப் போக்கியும் எதிரிகட்குத் தாபத்தைத் தந்தும் போருந்தன்மை.

(i) அஜடம் ஸ்வாத்ம ஸம்போதி
நித்யம் ஸர்வாவகாஹநம்,
ஜ்ஞாநம் நாமகுணம் ப்ராஹு:
ப்ரதமம் குணசிந்தகா:

[குணத்தைச் சிந்திக்குமவர்கள் முதலில் ஜ்ஞாநம் என்று பிரஸித்தமான குணம் அஜடமாயும், தன்னைத்தானே அறிகிற தாயும், நித்யமாயும் எல்லா விஷயங்களேயும் பிரகாசிப்பதாயும் இருக்கும் என்று சொல்லுகிருர்கள். ஜ்ஞாநமாவது - எப் பொழுதும் எல்லாவற்றையும் தெளிவாக விளக்கக் கூடியதாயும், தனக்குத்தானே பிரகாசமாயும் உள்ள குண விசேஷம்.]

(ii) ஜகத் ப்ரக்ருதிபாவோ
யஸ்ஸசக்தி ப்ரகீர்த்தித:

[ஜகத்திற்குக் காரணமா யிருப்பது யாதொன்று உண்டோ அது சக்தி என்று சொல்லப்படும். சக்தியாவது - ஜகத் காரணமா யிருக்கின்ற குண விசேஷமாதல், அகடித கடனு ஸாமர்த்திய மாதல் - சேராதவற்றைச் சேர்ப்பது.]

(iii) பலம் தாரண ஸாமர்த்தியம்.

[பலமாவது - எல்லா வஸ்துக்களையும் தாங்கும் ஸாமர்த்தியம்.]

(iv) கர்த்ருத்வம் நாமயித்தஸ்ய
ஸ்வாதந்தர்ய பரிப்ரும்ஹிதம்,
ஐச்வர்யம் நாமதத்ப்ரோக்தம்
குணதத்வார்த்த சிந்தகை:

[அந்த பரமாத்மாவுக்கு ஸ்வாதந்தர்யத்தோடு கூடின யாதொரு கர்த்தாவா யிருக்குந் தன்மை பிரஸித்தமா யிருக்கிறதோ அது, குணங்களின் உண்மை யறிந்தவர்களாலே ஐசுவர்யம் என்ற பிரஸித்தமான குணமாகச் சொல்லப் பெற்றது. ஐச்வர்யமாவது - எல்லாவற்றிற்கும் கர்த்தாவா யிருத்தலின் லக்ஷணமான ஸ்வாதந்தர்யம் அல்லது எல்லா வஸ்துக்களையும் நியமிக்கும் ஸாமர்த்தியம்.]

(v) தஸ்யோபாதாந பாவேபி
விகாரவிரஹோஹிய:,
வீர்யம் நாமகுணஸ்ஸோயம்
அச்யுதத்வாபராஹ்வய

[ஸர்வேசுவரனுக்கு ஜகத்துக்கு பாதான காரணமா யிருக்கும் நிலைமையிலேயும் விகாரமின்மை யிருக்கின்றது. இங்ஙனம் இருக்கின்ற அந்த அவிகாரத்வமானது வீர்யம் என்ற ப்ரஸித்தமான குணம் என்று சொல்லப்படும். அதுவே அச்யுதம் என்ற வேறு பெயராலும் அழைக்கப் பெறும். வீர்யமாவது - ஜகத்திற்கு பாதான காரணமாயிருந்தும் ஸ்வரூப விகார மில்லாதிருக்கும் அவிகாரதை - விகாரமில்லா திருத்தல்.]

(vi) தேஜஸ்ஸாவது - ஸஹாயத்தை யபேக்ஷியாதிருத்தல்.

"செழுங்குணங்க ளிருமூன்று முடையார்" என்பது இவ்வாசிரியர் அருளிச்செய்த திருச்சின்னமாலை. (5) ப்பாசுரவடி.

“ பகவந்நாராயணுபிமதாநுரூப ஸ்வரூபரூப குணவிபவைச்வர்ய, சீலாத்யநவதிகாதிசயாஸங்க்யேயகல்யாணகுணகணும் பத்மவநாலயாம் பகவதீம், ஸ்ரீயம் தேவீம் நித்யாநபாயிநீம் நிரவத்யாம் தேவதேவதிவ்யமஹிஷீம், அகில ஜகந்மாதரம் அஸ்மந்மாதரம் அசரண்யசரண்யாம் அநந்யசரண: சரணமஹம் ப்ரபத்யே.”

[பகவானுன நாராயணனுக்கு இஷ்டமாகவும், தகுந்ததாகவும் உள்ள ஸ்வரூபம், ரூபம், குணம், விபூதி, ஐச்வர்யம், சீலம் முதலான எல்லேயற்ற மேன்மையையுடையவையும், கணக்கற்றவையுமான கல்யாண குணகணங்கள், இவற்றை உடையவளும், பத்மவனத்தை இருப்பிடமாக உடையவளும், பூஜிக்கத்தக்கவளும், எப்போதும் எம்பெருமானேவிட்டு அகலகில்லாதவளும், தோஷமற்றவளும், தேவதேவனுன எம்பெருமானுடைய திவ்ய மஹிஷியும், எல்லாவுலகிற்கும் தாயாயிருப்பவளும், விசேஷமாக அடியேனுக்கு அன்னேயாயிருப்பவளும், கதியற்றவர்களுக்குக் கதியாயிருப்பவளுமான ஸ்ரீ தேவியை, வேறெரு கதியற்ற அடியேன் சரணம் அடைகிறேன்.] என்பது சரணுகதி கத்யம் (1).

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம பாஷ்யத்தில் உள்ள சில பங்க்திகள் பின் வருமாறு :—

“ 62. த்ரிககுப்தாமா—மூன்று கூறுகளாகப் பிரிக்கப்பட்ட ஞானம், சக்தி, பலம், ஐச்வர்யம், வீர்யம், தேஜஸ் என்னும் ஆறு குணங்களுக்கும் இடமாயிருப்பவர். இந்த ஆறு குணங்களிலும் இரண்டிரண்டு ஒவ்வொரு கூருக வகுக்கப்பட்டுள்ளன. இது பற்றியே, ‘ த்ரியுகர் - மூன்று இரட்டையுள்ளவர் ’ என்று திருநாமம். அல்லது ‘ த்ரிககுத் + தாமர் ’ என்று இரண்டு நாமமுமாம்; த்ரிககுத் - மூன்று கொண்டைகளோடு கூடிய வராஹாவதாரத்தைச் செய்தவர் ; தாமா - ஒளி உருவமானவர்.”

“ 123. மஹாதபா :—சிறந்த ஜ்ஞானமுள்ளவர். ஆறு குணங்களில், ஞானம் பலம் என்னும் இரண்டு குணங்கள் ஸங்கர்ஷணன் கூறுகளாக வகுக்கப்பட்டுள்ளன. அவற்றில், ஞானமாவது - ஜனனமரணங்களாகிய ஸம்ஸாரமார்க்கத்தில் அநாதிகாலமாக நடந்துகொண்டு வருந்தும் ஜீவராசிகளுக்கு ச்ரமபரிஹாரம் செய்வதற்காக அந்த அந்தக்கார்ய காரணங்களே

அறிந்து கார்ய வர்க்கங்களைத் தம்தம் காரணங்களில் அடக்குவதற்குரிய ஸர்வஜ்ஞத்வம்.

124. ஸர்வக:—ஸம்ஹரிக்கப்பட்டனவற்றையெல்லாம் தாம் அடைந்து வஹிப்பவர்; இதனால் பலம் என்னும் இரண்டாம் குணம் குறிப்பிக்கப்பட்டது. பலமாவது - அப்படி ஸம்ஹரிக்கப்பட்டவற்றை யெல்லாம் தம்மிடத்தில் வைத்துத் தாங்குவதற்குரிய வன்மை. இது மேற்சொல்லிய ஜ்ஞானத்திற்கு முக்யமான அங்கம்.

125. ஸர்வவித்—ஸம்ஹரிக்கப் பட்டவற்றை யெல்லாம் திரும்பவும் படைத்துக் கார்யங்களான ப்ரபஞ்சங்கள் அனைத்தையும் அடைகிறவர். இங்கு ப்ரத்யும்நன் என்னும் வ்யூஹம் குறிப்பிக்கப்படுகிறது. ஐச்வர்யம் வீர்யம் என்னும் இரண்டு குணங்கள் ப்ரத்யும்ந வ்யூஹத்தின் கூறுகளாக வகுக்கப்படுகின்றன. அவற்றுள், ஐச்வர்யமென்பது - விசித்ரமான உலகங்களை உண்டு பண்ணும் திறமை வெளிப்படுவது. அதனை இந்த நாமம் தெரிவிக்கிறது.

126. பானு:—எல்லாவற்றையும் படைத்தும் தாம் விகாரமில்லாமல் விளங்குபவர். இது வீர்யம். வீர்யமாவது - ஒரு விகாரமும் தன்னிடத்தில் சேராமலிருக்கும் ஸாமர்த்தியம்.

127. விஷ்வக்ஸேந:—எங்குமுள்ள ஜனங்கள் தம்மை ரக்ஷகராகக் கொண்டு ஜீவிக்கும்படி செய்பவர். இது ரக்ஷிப்பதைத் தொழிலாகவுடைய அநிருத்த வ்யூஹம். சக்தி, தேஜஸ் என்னும் இரண்டு குணங்கள் அநிருத்த வ்யூஹத்திற்குச் சிறந்தவைகளாக வகுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள், சக்தியாவது - எதையும் காப்பாற்றும் ஸாமர்த்யம். அதனை இந்த நாமம் குறிப்பிக்கிறது.

128. ஜனார்த்தன:–தமது ரக்ஷணத்திற்கு விரோதம் செய்யும் சத்ருஜனங்களை உதவிதேடாமல் அழிப்பவர். இங்கு இரண்டாவது குணமாகிய தேஜஸ் குறிப்பிக்கப்படுகிறது. தேஜஸ் என்பது - தனக்கு ஓர் உதவியைத் தேடாது கார்யத்தை முடிக்கும் திறமை.

பகவானுக்கு ஆறு குணங்களும் எல்லா மூர்த்திகளிலும் மறையாமல் ப்ரகாசிப்பதாக ப்ரமாணங்களினால் சொல்லப்பட்டிருந்தாலும் அந்த அந்தக் கார்யங்களுக்குத் தக்கபடி

மூர்த்திகள் தோறும் பிரகாசிக்கும் குணங்களை இங்கு வகுத்துரைத்தது.

"பரஸ்வரூபம் அகில ஹேயப்ரத்யநீகத்வத்தாலும் கல்யாணைகதாநத்வத்தாலும் ஸ்வேதரஸமஸ்த வஸ்துவிலக்ஷணமாய், விபுத்வாத்தேசத: பரிச்சேதரஹிதமாய் நித்யத்வாத் காலத: பரிச்சேதரஹிதமாய் ஸர்வமும் தனக்கு ப்ரகாரமாகத்தான் ப்ரகாரியாய்த் தனக்கு ஒரு ப்ரகார்யாந்தர மில்லாமையாலே வஸ்துபரிச்சேத ரஹிதமுமாய் **ஜ்ஞாநாநந்தமயமாய் ஜ்ஞாநபலைச்வர்ய சீலாத்யநந்தகல்யாணகுணகணமஹோததியாய் ஸ்ரீய:** பதியாய் ஸ்வேதரஸமஸ்தத்தையும் வ்யாபிக்குமிடத்தில் அப்ராக்ருதமாய் சுத்த ஸத்வமயமாய் ஸ்வாஸாதாரணமாய் புஷ்பஹாஸ ஸௌகுமாரமாய் புண்யகந்த வாஸிதாநந்ததிகந்தராளமாய் ஸர்வாபாச்ரயமாயிருந்துள்ள திவ்யவிக்ரஹம்போலே வ்யாபித்து தரித்து நியமித்து, இப்படி ஸர்வப்ரகாரத்தாலும் ரக்ஷகமாய்க்கொண்டு சேஷியாயிருக்கும்." [**ஈடு. முதல் ஸ்ரீய: பதி.**]

பகவச்சப்தத்தின் உண்மைப்பொருள் உணர்ந்த தென் சொற்கடந்து வட சொற்கலைக்கெல்லை தேர்ந்த **ஸ்ரீவல்லபர்** (தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனுர்) தாம் இயற்றிய தமிழ் வேதமாகிய திருக்குறள் பாயிரம். முதல் அதிகாரம். கடவுள் வாழ்த்து, முதற்குறளை

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

என அமைத்துப் பாடியுள்ளார். பரிமேலழகரும் "இப்பாட்டான் முதற் கடவுளதுண்மை கூறப்பட்டது". என்று நுண்ணிய உரை வகுத்துள்ளதும் நன்கு நோக்கற்பாலது. யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலரவர்கள் பதிப்பில் இக்குறளின் கீழ் "ஐசுவரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம் என்னு மாறுக்கும் பகமென்னும் பெயருண்மையால், பகவனென்பதற்கு இவ்வறு குணங்களையுமுடையோனென்பது பொருள்" எனக் குறிப்பு எழுதியுள்ளார்கள். "ஆதிபகவன் என்னு மிருபெயரொட்டுப் பண்புத்தொகை வடநூன் முடிபு" என உரையிட்டனர் பரிமேலழகியார். "அமலனுதிபிரான்" (திருப்பாணுழ்வார் அருளிச்செய்த பத்துப்பாட்டு) வியாக்கியானமான "முநிவாஹந

போகம்'' ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த இருபத்தெட்டாவது ரஹஸ்யம். இதில் ''(ஆதி)-'ஏஷ கர்த்தாந க்ரியதே' இத்யாதிகளிற்படியே ஸர்வஜகதேக காரணபூதன், இத்தால் 'காரணமே சரண்யம்' என்கிறபடியே முமுக்ஷுவுக்கு சரணமாகப் பற்றப்படுபவன் என்று பலிதம்: இக்காரணத்வமும் மோக்ஷப்ரதத்வமும் சத்ரசாமரங்கள் போலே ஸர்வலோக சரண்யனுக்கு விசேஷசிஹ்நங்கள்.'' என்றுள்ளன காண்க. முழுதுணர் நீர்மையினோராகிய ஸ்ரீவல்லபர் பகவச்சப்தத்தால் பெறக்கூடிய நாராயணன் எனுந் திருநாமத்தை ''வாலறிவன்'' (2. ஸர்வஜ்ஞன்), ''பொறிவாயில் ஐந்தவித்தான். (6. ஹ்ருஷீகேசன்), ''தனக்குவமையில்லாதான்'' (7. அதுல:), ''எண்குணத்தான்'' (9) என்ற அகாரவாச்யனின் பெயர்களை எடுத்தோதி ''அடியளந்தான்'' (பொருட்பால். 610) என்று உலகளந்த திரிவிக்ரமன் பெயரைக்காட்டி இறுதிப்பாலில் ''தாமரைக்கண்ணான்'' (புணர்ச்சி மகிழ்தல். 1103) என்று செங்கண்மாலை ஸ்பஷ்டமாகப் பேசித்தலைக் கட்டியுள்ளது நன்கு நோக்கி இன்புறற்குரியது. ''**முதற் கடவுள்**'' யார் என்பது ஆழ்வார்களுள் ஆதியாகிய பொய்கையார் ''உலகளந்த மூர்த்தி யுருவே **முதல்**'' (முதல் திருவந்தாதி. 14) என்றும், ''முதலாவார் மூவரே அம்மூவருள்ளும், **முதலாவான்** மூரிநீர்வண்ணன் - **முதலாய, நல்லான்**'' (முதல் திருவந்தாதி. 15) என்றும் கண்டோக்தமாகக் காட்டி யிருப்பதால் தெற்றென அறியலாம். திருவள்ளுவருக்கு வழிபடு கடவுளும் குறளுக்கு ஏற்புடைக் கடவுளும் திருமால் என்பது பேரறிஞர் கண்ட பேருண்மை.

தேவீ - பிராட்டிமார்கள்.

''இப்படி அதிமநோஹரமான அநந்தபோக பர்யங்கத்திலே ரஜதகிரியின்மேலே மரதககிரி இருந்தாற்போலே 'ஏழுலகும் தனிக்கோல் செல்ல வீற்றிருந்து' 'விண்ணோர்தலைவ'னாய் குமார யுவாவாய் 'சோதி வெள்ளத்தினுள்ளே எழுவதோருரு' என்னும் படி ஆதித்ய சதஸஹஸ்ர ஸமுதாயம் போலே அநவதிக தேஜஸ்ஸையுடையனாய், 'விச்வமாப்யாயந் காந்த்யா பூர்ணேந்து யுத துல்யயா' என்னும் படி அநவதிக லாவண்யத்தையுடையனாய்; ஸர்வசேஷியான தன்னுடைய க்ருபையும் க்ஷமையும் வண்மையும் வடிவுகொண்டாற்போலே இருக்கிற நாச்சிமார்களில்

ஸ்வாபிமத, நித்ய, நிரவத்ய, அநுரூபஸ்வரூபாதிகளை உடையளாய், ஸ்வவைச்வரூப்யத்தாலே ஸதாநுபவம் பண்ணாநின்றாலும் இன்று அநுபவிக்கத் தொடங்கினாற்போலே ஆச்சர்யரஸாவஹை யாய், 'சாந்தாநந்த' இத்யாதிகளின் படியே ஸர்வப்ரகாரஸம்ச் லேஷத்தை உடையளாய், 'திருமார்வத்து மாலை நங்கை'யாய், 'அமுதில் வரும் பெண்ணமு'தாய், 'வேரிமாறாத பூமேலிருந்து வினைதீர்க்கு' மவளாய், தன் கடாக்ஷலேசத்தாலே கமலாஸநாதி வைபவத்தையும் கொடுக்குமவளாய், 'தேவதேவ திவ்யமஹிஷீ' என்னும் படியான மேன்மையும், கருணாஸ்ராநதமுகீ' என்னும் படியான நீர்மையும் உடையளான பெரிய பிராட்டியார் 'தாக்ஷிண்யஸீமா' என்று தோற்றும்படி தக்ஷிணபார்ச்வத்திலே நீலமேகத்தை அணைந்த நிலை மின்போலே ஸேவித்திருந்து, தன்னுடைய சேஷித்வ, போக்யத்வ, கைங்கர்யப்ரதி ஸம்பந்தித் வங்களைப் பூரித்துக்கொண்டு, அகிலபரிஜநங்களை அவஸரோசிதா சேஷவ்ருத்திகளிலும் ஆஜ்ஞாபிக்க, 'ஏவம் பூதபூமி நீளாநாயக' என்கிறபடியே பெரிய பிராட்டியாருடைய ரூபாந்தரம் என்னலாம் படி அநவரத பஹுமாந விஷயையாய், 'பச்சைமாமலை போல் மேனி'க்கும் படிமாவான நிறத்தை உடையளான 'பார் என்னும் மடந்தை'யும்; 'அல்லி மலர்மகள் போகமயக்குகள் அத்யல்பம் என்னும்படி நித்யப்ரபோதம் நின்றவிடம் தெரியாதே நீளாதுங்க ஸ்தநகிரிதடஸுப்தம் என்னப் பண்ணுமவளாய், நீலோத்பலச்யா மளையான ஸ்ரீநீளைப் பிராட்டியும்; அடியார் இடத்திலே ஸேவித்தி ருக்கும்படி தாங்களும் இடத்திலே ஸேவித்திருக்க; 'ஸேவ்ய: ஸ்ரீபூமி நீளாபி:' 'உடனமர் காதல்மகளிர் திருமகள் மண்மகள் ஆயர்மடமகள் என்றிவர் மூவர்' இத்யாதிகளில் சொன்ன சேர்த்தி யிலே அடிமை செய்யுமவர்களுக்கு 'ரஸம்' என்றும் 'ஆநந்தம்' என்றும் சொல்லும்படியான நிரதிசய போக்யதையுடையனை நிருபாதிகசேஷியை நிருபாதிகஜ்ஞாந விகாஸத்தாலே 'அவா வறச் சூழ்ந்தாய்' என்னும்படி அநுபவித்து;" [ஸ்ரீபரமபத ஸோபாநம். ப்ராப்திபர்வம்]

தேமா மலர்க்கயஞ்சூழ்
கோயின் மேவுந் திருவரங்கர்
தாமாத ரித்ததிருத்
தேவிமாரிற் றரங்கவுடைப்

பூமாது நாளும்
புரத்தே சுமந்து புரக்குமலர்
மாமாது செல்வங்
கொடுத்தே யுயிர்களை வாழ்விக்குமே.
—(திருவரங்கத்துமாலை. 80)

[தேனையுடைய பெரிய பூக்கள் நிறைந்த தடாகங்கள் சூழ்ந்த திருவரங்கம் பெரிய கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற திரு அரங்கர் தாம் அன்புவைத்த திருமகள் நிலமகள் என்னும் உபயதேவியர்களுள் கடலை உடுக்கும் ஆடையாக உடைய நிலமகள் எந்நாளும் உயிர்களைத் தனது உடம்பின்மேலே தாங்கிக் காப்பாற்றுவாள்; தாமரையில் தோன்றிய திருமகள் அவ்வுயிர்கட்குச் செல்வத்தைக் கொடுத்துக் காப்பாற்றுவாள். எம்பெருமானது வலப்பக்கத்திலே ஸ்ரீதேவியும் இடப்பக்கத்தில் பூதேவியும் எப்பொழுதும் விட்டுப் பிரியாமல் உடன் உறைவர்.]

பூஷணஹேத்யாதி—ஸ்ரீவத்ஸ கௌஸ்துப கிரீட வநமால நூபுரஹாராதிகள், ஸ்ரீ சங்கு சக்ராதிகள், அநந்தகருட விஷ்வக்ஸாநாதிகள், திருவணுக்கன் முதலானவைகள்.

"அங்கே குமுதாதிகளான திவ்ய பார்ஷதேச்வரர்களும், சண்டாதிகளான திவ்யத்வாரபாலர்களும் ஸஸ்நேக பஹுமாந அவலோக நம்பண்ண அநீகேச்வர நியுக்தரான ஆஸ்தான நிர்வாஹகர் அருளப்பாடிட, அடிக்கடியும் தொழுவ தெழுவதாய்க்கொண்டு திருமாமணிமண்டபத்தின் முகப்பிலே சென்றேறி; அங்கே சிறகுடைய மஹாமேருவைப்போலே சிறந்த திருமேனியுடையனாய், த்ரயீமயனாய் 'திருமகள்சேர்மார்ப'னுக்குத் திருக்கண்ணாடி போலே அபிமுகனாய் நிற்கிற 'காலார்ந்தகதிக்கருட'னைக்கண்டு கழல்பணிந்து; 'பிணங்கி அமரர் பிதற்றும் குணம்' என்கிற படியே ஒரொரு ஸ்வாமி குணத்தைப்பற்றி வாதி ப்ரதிவாதிகளைப் போலே வாசி வகுப்பதும், அதிஸ்நேஹத்தாலே அஸ்தானேபய சங்கையுடையாரைப்போலே ஸம்ப்ரமம் பண்ணுவதுமாய்க் கொண்டு ரஸிக்கிற நித்ய ஸூரிகள் நிரையாக இருக்கின்ற அழகோலக்கத்தின் நடுவே சென்று; அடியார்கள் குழாங்களை உடன் கூடுவது என்றுகொலோ' என்கிற ஆசை நிறைந்து, திவ்யபரிஜந பரிச்சத ஆயுத ஆபரணாழ்வார்கள் ஸ்வாஸாதாரண

லக்ஷண விசிஷ்ட விக்ரஹங்களோடே யதாஸ்தாநம் ஸேவித்து நிற்கிற நிலைகளைக்கண்டு, ஸர்வவிதகைங்கர்ய மநோரதாதி ரூடனாய்க்கொண்டு கிட்டச்சென்று; பர்யங்க பரிஸரத்திலே முன்பு தங்களைக்கொண்டு எம்பெருமான் நடத்தின க்ருஷிபலித்தது என்று பூர்ண மநோரதரான பூர்வாசார்யர்களைக்கண்டு; 'அறியாதன அறிவித்து' 'என்னைத்தீமனம் கெடுத்து' 'நும் கால்கள் என் தலைமேல் கெழுமீர்' என்று க்ருதஜ்ஞதை தோற்றப் பணிந்து; உபய விபூதியும் 'தனிக்கோல் செல்ல' 'வானிளவரசு' மன்னிவீற்றிருக்கிற 'அமிதௌஜஸ்' ஸான திவ்ய ஸிம்ஹாஸந ரூபதிவ்ய பர்யங்கத்தை அணுகி; விபூதித்வயாநுபந்திகளான ஆதாரதத்வங்களும் பர்யங்க வித்தையில் 'பூதபவிஷ்யத் தத்வங்கள்' என்றாற்போலவும், பகவச்சாஸ்திரங்களில் 'தர்மா தர்மாதிகள்' என்றாற்போலவும், பரக்கவும் சுருங்கவும் பலவகை யாகச் சொல்லுகிற பாதம் முதலான அவயவங்களுமெல்லாம் அவ்வவ்வபிமாநிதேவதா விசேஷங்களாய் இருக்கும்படியைத் தெளியக்காணும். * * * 'சென்றால் குடையாம் இருந்தால் சிங்காசனமாம்', 'நிவாஸஸய்யாஸந' என்கிறபடியே அவஸ ரோசித ரூபங்களைக் கொண்டு அசேஷ சேஷ வ்ருத்திகளைப் பண்ணுகையாலே 'சேஷன்' என்றும், த்ரிவித பரிச்சேத ரஹிதனையும் தன் மடியில் ஏகதேசத்தில் வைக்கும்படியான வைபவத்தையுடையானுகையாலே 'அநந்தன்' என்றும் திரு நாமத்தையுடையவனாய், ஸர்வகந்த வஸ்துவுக்கும் வாஸனை யுண்டாம்படியான திவ்யபரிமளத்தையுடையவனாய், 'வேரிமாறாத பூமேலிருப்பா'ளுடனே புஷ்பஹாஸ ஸுகுமாரனானவன் மூவுல கும் தொழ வீற்றிருக்கும்படி ஸுகுமாரதமனாய், அம்ருத ப்ரவாஹம் சுழியாறு பட்டாற்போலே அவதாதசீதலமான போக வேஷ்டனத்தையுடையனாய், சேதசத்ர பரம்பரை போலவும், பூர்ணேந்து மண்டல ஸஹஸ்ரங்களை நிரைத்தாற் போலவும் பரந்து உயர்ந்த பணாஸஹஸ்ரத்தின் மணிகிரண மண்டல பாலாதபத்தாலே 'புண்டரீகம்' என்னும் பேரையுடைத்தான பரமபதமெல்லாம் உல்லஸிதமாம்பாடி பண்ணக்கடவனான திருவநந்தாழ்வானைக்கண்டு; அவனோடொக்க ஒருமிடறாய் அநேக முகமாக போக ஸாம்யத்தை ஆசைப்பட்டு, அவனுடைய அம்ருதவர்ஷிகளான இரண்டாயிரம் திருக்கண்களுக்கும் தான் ஏகலக்ஷ்யமாய், அவன் மேலே அமர்ந்திருக்கிற 'மேலாத்தேவர்

கள் மேவித்தொழும் மாலாரை'க் கண்டு, தானும் அநந்த த்ருஷ்டியாய் அத்யந்த ஸாமீப்யம் பெறும்.'' [ஸ்ரீபரமபத ஸோபாநம். திவ்யதேசப்ராப்திபர்வம்.]

"ஸ்ரீய: பதியான ஸர்வேச்வரனுக்கு ஸ்ரீ கௌஸ்துபஸ்தாநீ யனுய்க்கொண்டு ஹ்ருதயங்கமனுய், குமாரன் என்றும், புத்ரன் என்றும், சிஷ்யன் என்றும், ப்ரேஷ்யன் என்றும், சேஷபூதன் என்றும், தாசபூதன் என்றும் அவ்வோசாஸ்த்ரங்களிலே ப்ரதி பந்நனு யிருக்கும் ஜீவாத்மா, இவன் தனக்கு வகுத்த சேஷியாய், அயர்வறுமமரர்களதி பதியாய், உயர்வற வுயர்நலமுடையனுய், நமக்கும் பூவின்மிசை நங்கைக்கு மின்பினுய், ஞாலத்தார் தமக்கும் வானத்தவர்க்கும் பெருமானுன ஸர்வேச்வரன் 'வைகுண்டேது பரேலோகேச்ரியா ஸார்த்தம் ஜகத்பதி:, ஆஸ்த்தே' என்றும், 'ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலாநிற்ப' என்றும் சொல்லுகிறபடியே பெரிய பிராட்டியாரோடே கூடத் தெளிவிசும்பிலே 'யாயோத்யேத்ய பராஜிதேதி விதிதா நாகம்பரேண ஸ்திதா' என்கிறபடியே அயோத்யாதி சப்த வாச்யமான கலங்காப் பெருநகரிலே ஸஹஸ்ரஸ் தூணுதி வாக்யங்களாலே யோதப்படுகிற திருமாமணி மண்டபத்திலே கௌஷீதகீப்ராஹ்ம ணுதிகளிலே யோதப்படுகிற பரியங்க விசேஷத்திலே 'சென்ருற் குடையா மிருந்தாற் சிங்காதனமாம்' என்றும், 'நிவாஸசய்யாஸந' என்றும் சொல்லுகிறபடியே ஸர்வ தேச ஸர்வகால ஸர்வாவஸ்தோசித ஸர்வவித கைங்கர்யங்களையும் ஸர்வவித சரீரங்களாலே அநுபவித்து, சேஷத்வமே தனக்கு நிரூபகமாகையாலே சேஷன் என்றே திருநாமமாம்படியான திருவனந்தாழ்வானுகிற திருப்பள்ளி மெத்தையிலே வானிளவர சாய்க் கொண்டுதான் வாழ்கிற வாழ்வை.'' [ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரம். உபோத்காதாதிகாரம்.]

இவற்றில் த்ரிகுணத்ரவ்யத்துக்கு ஸ்வரூபபேதம் குணத்ர யாச்ரயத்வம். ஸததபரிணும சீலமான இத்த்ரவ்யத்துக்கு ஸத்வரஜ ஸ்தமஸ்ஸுக்கள் அந்யோந்யம் ஸமமானபோது மஹாப்ரளயம். விஷமமானபோது ஸ்ருஷ்டிஸ்திதிகள். குணவைஷம்யம் உள்ள ப்ரதேசத்திலே மஹதாதி விகாரங்கள். இதில் விக்ருத மல்லாத ப்ரதேசத்தையும் விக்ருதமான ப்ரதேசத்தையுங்கூட ப்ரக்ருதி மஹதஹங்கார தந்மாத்ர பூதேந்த்ரியங்கள் என்று இருபத்திநலு

தத்துவங்களாக சாஸ்த்ரங்கள் வகுத்துச் சொல்லும். சில விவக்ஷா விசேஷங்களாலேயோ ரொருவிடங்களிலே தத்வங்களே யேறவுஞ் சுருங்கவுஞ் சொல்லாநிற்கும். இத்தத்வங்களிலவாந்தர வகுப்புக் களுமவற்றி லபிமாநி தேவதைகளுமவ்வோ வுபாஸநாதிகாரி களுக்கு அறியவேணும். ஆத்மாவுக்கு அவற்றிற் காட்டில் வ்யாவ்ருத்தியறிகை இங்கு நமக்கு ப்ரதாநம். இவையெல்லாம் ஸர்வேச்வரனுக்கு அஸ்த்ரபூஷணுதி ரூபங்களாய் நிற்கும் நிலையை

புருடன்மணி வரமாகப் பொன்ரு மூலப்
பிரகிருதி மறுவாக மான்றண் டாகத்
தெருள்மருள்வா ளுறையாக வாங்கா ரங்கள்
சார்ங்கஞ்சங் காகமனந் திகிரி யாக
விருடிகங்க ளீரைந்துஞ் சரங்க ளாக
விருபூத மாலேவன மாலே யாகக்
கருடனுரு வாமறையின் பொருளாங் கண்ணன்
கரிகிரிமே னின்றனேத்துங் காக்கின் ருனே.

என்கிற கட்டளேயிலே யறிகை உசிதம்." [ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரம், தத்வத்ரயசிந்தநாதிகாரம்.]

"நாராயண னென்றது - நாரங்களுக்கு அயநம் என்றபடி. (95) நாரங்களாவன - நித்ய வஸ்துக்களினுடைய திரள். (96) அவையாவன :—ஜ்ஞாநா நந்தாமலத்வாதிகளும், ஜ்ஞாநசக்த்யாதிகளும், வாத்ஸல்ய ஸௌசீல்யாதிகளும், திருமேனியும், காந்தி ஸௌகுமார்யாதிகளும், திவ்யபூஷணங்களும், திவ்யாயுதங்களும், பெரியபிராட்டியார் தொடக்கமான நாச்சிமார்களும், நித்யஸூரிகளும், சத்ரசாமராதிகளும், திருவாசல்காக்கும் முதலிகளும், கணுதிபரும், முக்தரும், பரமாகாசமும், ப்ரக்ருதியும், பத்தாத்மாக்களும், காலமும், மஹதாதி விகாரங்களும், அண்டங்களும், அண்டத்துக்கு உட்பட்ட தேவாதிபதார்த்தங்களும், (97) அயநம் என்றது - இவற்றுக்கு ஆச்ரயம் என்றபடி. (98) அங்ஙனன்றிக்கே, இவைதன்னே ஆச்ரயமாகவுடையவன் என்னவுமாம். (99) [பிள்ளே லோகாசார்யர் அருளிச்செய்த முமுக்ஷுப்படி.]

நித்யம் நிரபராதேஷு கைங்கர்யேஷு - எக்காலத்தும் எவ்விதக் குற்றமும் இல்லாத கைங்கர்யங்களே.

ஒழிவில்காலமெல்லாம் உடனுய்மன்னி
வழுவிலாவடிமை செய்யவேண்டும்நாம்
—(திருவாய்மொழி. 3–3–1.)

[ஈடு - முதற்பாட்டில் 'திருவேங்கடமுடையான் திருவடிகளிலே ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் எல்லாவடிமைகளும் செய்யவேணும்'] என்கிருர்.

(ஒழிவில் காலமெல்லாம்) - முடிவில்லாத காலமெல்லாம்; அநந்தமான காலமெல்லாம் என்றபடி, 'ஒழிவில் காலமெல்லாமென்று - கீழே கழிந்த காலத்தையுங் கூட்டி அடிமை செய்யப்பாரிக்கிருர்' என்று இங்ஙனே அதிப்ரஸங்கம் சொல்லுவாருமுண்டு. 'அதாகிறது - கீழ்கழிந்த காலத்தை மீட்கை' என்று ஒரு பொருளில்லையிறே. 'நோபஜநம் ஸ்மரந்' என்கிறபடியே கீழ்கழிந்த காலத்தில் இழவு நெஞ்சிற் படாதபடி மறப்பிக்கையேயிறே உள்ளது; 'நமேது: கம்' இத்யாதி; ஆகையாலே, இனிமேலுள்ள காலமெல்லாம் என்றபடி.

(உடனுய்) - காலமெல்லாம் வேண்டினவோபாதி தேசாநுபந்தமும் அபேக்ஷிதமாயிருக்கிறது காணும், இவர்க்கு. இளையபெருமாள் படைவீட்டிலும் அடிமை செய்து, வநவாஸத்திலும் அடிமை செய்தாற்போலே.

(மன்னி) - ஸர்வேச்வரனும் பிராட்டியுமாய்த் திரையைவளைத்துக் கொண்டிருந்தாலும், படிக்கம் குத்துவிளக்குப் போலே அவ்வளவிலும் நின்று அந்தரங்கமான வ்ருத்திகளைப் பண்ணவேணும். இத்தால், ஸர்வாவஸ்த்தைகளையும் நினைக்கிறது. 'ரமமாணாவநேத்ரய:' என்னக் கடவதிறே. இருவருக்குஉண்டான அநுபவத்திலே மூவரைச் சொல்லுகிறதிறே, அவ்விருவருக்கும் பரஸ்பர ஸம்ச்லேஷத்தால் பிறக்கும் ரஸம் அச்சேர்த்தியைக் கண்டவனுக்கும் பிறக்கையாலே.

(ஒழிவில் காலம் இத்யாதி) - ஸர்வ காலத்தையும் ஸர்வதேசத்தையும் ஸர்வாவஸ்த்தையையும் நினைக்கிறது. ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையர் இத்திருவாய் மொழிபாடப் புக்கால் 'ஒழிவில்காலமெல்லாம், காலமெல்லாம், காலமெல்லாம்' என்று இங்ஙனே நெடும்போதெல்லாம் பாடி, மேல் போகமாட்டாதே அவ்வளவிலே தலைக்கட்டிப் போவராம்.

(வழுவிலா அடிமை செய்யவேண்டும்.) - அடிமையி லொன்றும் ஒருவர்க்கும் கூறு கொடுக்க வொண்ணுதாயிற்று. எல்லா வடிமையும் நான் செய்யவேணும்: இளைய பெருமாள் பிரியாதே காட்டிலேயுங்கூடப் போந்துசெய்த அடிமைகளும் செய்யவேணும்; ஸ்ரீ பரதாழ்வான், படைவீட்டிலே பிரிந்திருந்து செய்த அடிமைகளும் செய்யவேணும். ஸ்ரீ பரதாழ்வானைக் கைகேயி, 'ராஜந்' என்ன, அப்போது அந்த ஸ்வாதந்த்ர்யம் பொறுக்கமாட்டாமே படுகுலைப் பட்டாற்போலே 'விலலாப' என்று கூப்பிட்டானிறே; பாரதந்த்ர்யரஸம் அறிவார்க்கு ஸ்வாதந்த்ர்யம் 'அநர்த்தம்' என்று தோற்றுமிறே. 'ஏபிச்ச ஸசி வைஸ்ஸார்த்தம்'. தன்னிற்காட்டிலும் கண்குழிவுடையார் இத்தனை பேருண்டாயிற்று. தன்னேடொத்த ஆற்ருமையுடை யார் அநேகரைக் கூட்டிக்கொண்டு போந்தான். எனக்கன்ருே, 'இவன் தம்பி' என்று ஸ்வாதந்த்ர்யம் பண்ணி அவர்க்குக் கண்ணழிக்கலாவது; இவர்களுக்குச் சொல்லிற்றுச் செய்ய வேணுமே; இவர்கள் தாங்களே கார்யத்தை விசாரித்து அறுதி யிட்டு, 'நீர் இப்படி செய்யும்' என்று அவர்கள் ஏவினல் அப்படி செய்யவேண்டிவருமிறே அவர்க்கு. அவருடைய வ்யதிரேகத்தில் தனக்கு உண்டான ஆற்ருமையை அறிவிக்கப் போகிருனுகில், தனியே போய் அறிவிக்கவுமாமிறே; இவர்களையெல்லாம்திரட்டிக்-கொண்டு போனதுக்குக் கருத்தென்? என்னில், நம் ஒருவர் முகத்துக் கண்ணீர் கண்டால் பொறுக்கமாட்டாதவர், தம்மைப் பிரிந்த பிரிவு பொறுக்கமாட்டாதே கண்ணும் கண்ணீருமா யிருப்பார் இத்தனை பேரைக் கண்டால் மீளாரோ? என்னுங் கருத்தாலே. பூசலுக்குப் போவாரைப்போலே யானை குதிரை யகப்படக்கொண்டு போகிருனிறே; அவற்றுக்கும் அவ்வாற்ருமை யுண்டாகையாலே. 'சிரஸாயாசித:'—என்பேற்றுக்குத் தாம் அபேக்ஷித்துத்தருமவர், நான் என் தலையாலே யிரந்தால் மறுப்பரோ? 'மயா' - அத்தலை யித்தலையானல் செய்யா தொழிவரோ? 'ப்ராது:' - 'பஸ்மஸாத் குருதாம்சிகீ' என்னும் படி, தம் பின் பிறந்தவனல்லனே நான்? என் தம்பிமார்க்கு உதவாத என்னுடைமையை அக்நிக்கு விருந்திட்டேனென்ருரிறே. 'யத்விநா' இத்யாதி. 'சிஷ்யஸ்ய' - ப்ராதாவாகக் கூறு கொண்டு முடி சூடியிருக்குமவனே நான்? அசேஷரஹஸ்யமும் நம்மோடேயன்ருே அதிகரித்தது. 'தாஸஸ்ய' - சிஷ்யனுய்க்ரய

விக்ரயார்ஹனன்றிக்கே யிருந்தேனே? ஆனபின்பு, நான் அபேக்ஷித்தகாரியத்தை மறுப்பரோ? இதிறேகைங்கர்யத்தில் சாபல முடையார் இருக்கும்படி.

(வழுவிலா அடிமை) - ஓரடிமை குறையிலும் உண்டது உருக்காட்டாதாயிற்று இவர்க்கு.

(செய்ய) - முன்பும் உண்டிறே இக்கைங்கர்யமநோரதம்; இப்போது இவ்வளவால் போராது, அநுஷ்டாந பர்யந்தமாக வேணும்.

(அடிமை செய்யவேண்டும்) - கைங்கர்ய மநோரதமே பிடித்து உத்தேச்யமாயிருக்கிறதாயிற்று இவர்க்கு. 'க்ஷேத்ர விஷயாநுபவம் பண்ணவேணும்' என்று புக்கால், இரண்டு தலைக்கு மொக்கரஸமான போகத்துக்கு ஒரு தலையிலே த்ரவ்யத்தை நியமித்து, போககாலம் வருமளவும் லீலையாலே போது போக்கி போககாலம் வந்தவாறே புறப்படத் தள்ளி விடுவார்கள்; இனி, 'ஸ்வர்க்காநுபவம் பண்ணவேணும்' என்று புக்கால், 'ஸ்வர்க்கே பிபாத பீதஸ்ய க்ஷயிஸ்ணோர் நாஸ்தி நிர்வ்ருதி:' என்கிறபடியே அருகே சிலர் நரகாநுபவம் பண்ணக்காண்கையாலே இருந்து அநுபவிக்கிற இதுதானும் உண்டது. உருக்காட்டாதபடியாயிருக்கும்; இனித்தான் அவ்விருப்புக்கு அடியான புண்யமானது சாலிலெடுத்த நீர்போலே க்ஷயித்தவாறே 'த்வம்ஸ' என்று முகம் கீழ்ப்படத் தள்ளுவார்கள்; இப்படி ஸ்வரூபத்துக்கு அநநுரூபமாய் அஹங்காரமமகாரங்களடியாக வரும் இவ்வநுபவங்கள் போலன்றிக்கே ஸ்வரூபத்தோடே சேர்ந்ததுமாய், அடிமை கொள்ளுகிறவனும் நித்யனாய், அடிமை செய்கிறவனும் நித்யனாய், காலமும் நித்யமாய், தேசமும் நித்யமாய், ஒரு காலமும் மீளவேண்டாதபடி அபுநராவ்ருத்திலக்ஷண மோக்ஷமாய், க்ஷேத்ரவிஷயாநுபவம்போலேது:கமிச்ரமாயிருக்கையன்றிக்கே நிரதிசய ஸுகமாயிருப்பதொன்றிறே இது,

(நாம்) - தம் திருவுள்ளத்தையுங் கூட்டி 'நாம்' என்கிறாராதல்; அன்றிக்கே, கேசவன் தமர்க்குப் பின்பு இவர் தாம் தனியரல்லாமையாலே, திருவுள்ளம்போலே யிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்களையும் கூட்டிக்கொண்டு 'நாம்' என்கிறாராதல், * * *

[இப்பாட்டால் - ப்ராய்யப்ரதாநமான திருமந்த்ரத்திலர்த்தத்தை அருளிச் செய்கிறார். ஒழிவில் காலமெல்லா முடனாய்மன்னி

வழுவிலாவடிமை செய்யவேண்டுமென்கிற இத்தால் - சதுர்த்தியில் ப்ரார்த்தநையைச் சொல்லுகிறது ; நாம் என்கிற இடம் - ப்ரணவ ப்ரதிபாத்யனுன இவனுடைய ஸ்வரூபத்தைச் சொல்லுகிறது ; சப்த ஸ்வபாவத்தைக் கொண்டு சொன்னேும்' என்று அருளிச் செய்தருளின வார்த்தை ; 'தெழிகுரல்' இத்யாதியால் - நாராயண சப்தார்த்தத்தை அருளிச் செய்கிருர் ; ப்ராப்தவிஷயத்தில் பண்ணும் கைங்கர்யமிறே ப்ராப்யமாவது ; இனி, ஸௌலப்யமும் வடிவழகும் ஸ்வாமித்வமும் எல்லாம் - நாராயணசப்தத்துக்கு அர்த்தமிறே.]

["இவனுக்கு பகவான் போக்யமாகலாம். மற்றுமுள்ளவர்களுடைய கைங்கர்யம் போக்கியமாமோவென்ன கர்மபலமன்றிக்கே வருகையால் எல்லாம் போக்கியமாகக் குறையில்லே. பூஷணுதிகள் அசேதனங்களாகிலும் அதின் அதிஷ்டாந தேவதைகளேச் சொல்லும். நிரபராத என்றதால் அபராதங்கலசில், ரஸ்யமாகாதென்கை. நித்யம் என்றத்தால் ஒழிவில் காலத்திற்படியே ப்ரார்த்திக்கப்படுகிறது."]

மாம் மதீயம் ச நிகிலம்
சேதநா சேதநாத்மகம்,
ஸ்வகைங்கர்யோபகரணம்
வரத ஸ்வீகுரு ஸ்வயம். (7)

[வரத ! - வேண்டுவதெல்லாம் தருபவனே ! வேண்டுவார்களுக்கு வேண்டும் வரங்களே அளிப்பதால் வரதன் என்னும் திருநாமம் உடைய ஸ்வாமியே !; **மாம்** - அடியேனேயும் ; **மதீயம்** - என்னுடையது என்று பேர்பெற்ற, என்னுடையவை யென்னும் படியான ; **தேசந அசேதந ஆத்மிகம்** - உயிருள்ளதும் உயிரில்லாதனவுமான, அறிவுள்ளதும் அறிவில்லாததுமான ; **நிகிலம்ச** - எல்லாவற்றையும்; **ஸ்வ கைங்கர்ய உபகரணம்**- தன்னுடைய கைங்கரியத்துக்கு உரிய ஸாமக்ரியாக, தேவரீருடைய பணிவிடை தொண்டு ஊழியங்களுக்குக் கருவியாக ; **ஸ்வயம்** - தானுகவே ; **ஸ்வீகுரு** - அங்கீகரித்தருளுக, ஸ்வீகரித்தருளவேண்டும்.

அடியேனேயும் அடியேனேச் சேர்ந்த ஸகல வஸ்துக்களேயும்

தேவரீருடைய கைங்கர்யத்துக்கு உபயோகமாகும்படி செய்தருள வேண்டும் என்று பிரார்த்திக்கிறுர் இதில்.

ஹே ! வரத ! என்னையும், என்னைச் சேர்ந்த சேதநாசேதனங் களாகிய அனைத்தையும் தனது கைங்கர்யத்துக்கு உபகரணமாகத் தானே எடுத்துக்கொள்ளும்.

இச்சுலோகத்தில் இவர் பிரார்த்தித்தபடியே பகவான் இவரை அடிமை கொள்ளுகிறேம் என்ன அதற்கு அமையாது ததிபாண் டாதிகளுக்குப் போல அநுபந்திகளையும் அடிமைகொள்ள வேண்டும் என்கிறுர்.

அடியேனையும் அடியேனுடைய பசுபுத்திராதிகளையும் தேவரீ ருடைய ஊழியத்துக்குத் தக்கபடி உபயோகித்துக் கொள்க.

ஏ வரதனே ! தேவரீரிடத்தில் சரணுகதி பண்ணின அடியே னையும், அடியேனுக்குச் சேஷம் என்னும்படி யிருந்துள்ள சேதநர்களையும் அசேதநங்களையும் தேவரீருடைய கைங்கரியத் துக்கு உபயோகமாகும்படி செய்தருள வேண்டும்.

சேதந அசேதந ஆத்மகம் - தத்துவங்கள் மூன்று. அவையாவன :—சேதநம், அசேதநம், ஈசுவரன் : என்பவை. அறி வுள்ள ஜீவாத்மா சேதநன் எனப்படுவான். இவனுக்கு ஜ்ஞாநம் ஒரு குணமாய் நிற்கும். இந்த ஜ்ஞாநம் தர்ம பூத ஜ்ஞாநம் எனப் பெறும். ஜீவனுடைய ஸ்வரூபமும் ஜ்ஞாந மயமாகவே நிற்கும். ஆதலின் ஜீவன் தர்மபூதஜ் ஞாநம் என்னப் பெறுவான். இந்த ஜீவாத்மா தனக்கு எப்பொழுதும் தோன்றிக் கொண்டே யிருப்பான். தன்னை நான் என்று அறியும் போது தர்ம பூதஜ் ஞாநம் உதவவேண்டும் என்பதில்லை. ஆனல் ஜீவன் தன்னைத் தவிர வேறு எந்தப் பொருளையும் தன் தர்மபூதஜ் ஞாநத்தால் மட்டுமே அறிய முடியும். தன் ஸ்வரூபத்தைத் தர்ம பூத ஜ்ஞாநத் தைக் கொண்டும் அறியலாம். ஜீவன் அணுவாகவும் ஆநந்த ஸ்வரூபமாகவும் நிற்பவன் ; சரீரத்திற் காட்டிலும் வேறுபட்டவன். அழிவற்றவன் ; எம்பெருமானுக்கு அடியனுகவே நிற்பவன்; இத்தகைய ஜீவாத்மாக்கள் எண்ணற்றவர் ; அவர்கள் பத்தர், முக்தர், நித்யர் என மூவகைப்படும்.

அறிவில்லாத வஸ்து அசேதநம் என்னப்படும். அசேதநத் தால் கிடைக்கக் கூடிய பலனை அநுபவிப்பவன் சேதநனே. இந்த அசேதநம் திரிகுணம், காலம், சுத்த ஸத்துவம் என மூன்று

வகைப்படும். தீரிகுணம் என்பதுவே மூல ப்ரக்ருதி. இது ஸத்துவம் ரஜஸ் தமஸ் என்னும் மூன்று குணங்களே உடைய தாதலின் தீரிகுணம் எனப்பெறும். காலம் என்பது எங்கும் பரந்து நிற்கும் ஒரே த்ரவ்யம். இதில் ஸத்துவம் முதலிய குணங்களில் சுத்த ஸத்துவம் என்பது ரஜோகுணம் தமோகுணம் ஆகிய இரண்டும் இன்றி ஸத்துவ குணத்திற்கு மாத்திரம் ஆதார மான ஒரு த்ரவ்யம்.

முத்திக் கருள்சூட மூன்றைத் தெளிமுன்ன
மித்திக்கா லேற்கு மிதம்.

—(தேசிகமாலே. அமிருத ரஞ்சனி. 3)

[மோக்ஷத்திற்குக் காரணமான பகவானுடைய க்ருபையைப் பெறுவதற்கு சேதநம், அசேதநம், ஈசுவரன் என்னும் மூன்று தத்துவங்களே முதலில் தெரிந்துகொள். இந்த வழியால் உபாயம் பொருந்தும்.]

ஸ்வ கைங்கர்ய - இங்குள்ள 'ஸ்வ' என்ற பதம் தன்னே யும், தன்னேச் சேர்ந்தவர்களேயும் சொல்லும். அடியேனேயும், அடியேனேச் சேர்ந்தவர்களேயும் உனக்கும் உன்னடியார்களுக்கும் கைங் கர்யத்துக்கு உரிய ஸாமக்ரிகளாக அங்கீகரித்தருள வேண்டும்.

"இப்படி அருளிச் செய்தவாறே முன்பு "கூழாள் பட்டு நின்றீர்களே எங்கள் குழுவினில் புகுதலொட்டோம், என்று நின்ற மஹாராஜர் தெளிந்து, தாம் பண்ணின அபராதத்திற்கு பெரு மாளே க்ஷமை கொண்டு, தாமே புருஷகாரமாய் 'வந்து மண்ணும் மணமும் கொண்மின்,' 'எமதிடம் புகுதுக' இத்யாதிகளில் ப்ரக்ரியையாலே 'நாங்களும் ஸ்ரீ விபீஷணுழ்வானும் ஒரு வாசியற அடிமை செய்யப் பெற வேண்டும்; நாங்களும் இவனுக்கு 'ஸகா தாஸோஸ்மி' என்னும்படி அடியோமாக வேண்டும்' என்று விண்ணப்பம் செய்ய; இப்படி ப்ரதி பந்தகம் கழிந்து அநந்தரம் பெருமாளுக்கு சரணுகத லாபமாகிற புருஷார்த்தம் பிறந்த படியையும், 'தத்தமஸ்யா பயம் மயா' என்கையாலே அபயம் பெற்ற சரணுகதனுக்கும், இப்படி விசேஷித்துப் பெருமாள் பாசுர மின்றிக்கே தங்களுக்கு வேறொரு உபாயமின்றிக்கே சரணுகத னுடைய அபிமாநத்திலே அடங்கிக் கூடவந்த ராக்ஷஸர்களுக்கும்

பெருமாள் திருவடிகளைப் பெறுமையாகிற பரம புருஷார்த்தம் பிறந்தபடியையும், பர்யங்க வித்யாதிகளில் படியே பரஸ்பர ஸம்ச்லேஷத்தாலே பிறந்த ப்ரீதிபரீவாஹமான ஸம்வாத விசேஷங்களையும் எல்லாம் இந்த ஸர்க்கத்தின் சேஷத்தாலும் மேலில் ஸர்க்கத்தின் முகப்பாலுமாகச் சொல்லி, சரணுகதி வேதமான ப்ரபந்தத்திலே உபநிஷத் பாகமான அபய ப்ரதாந ப்ரகரணத்தைத் தலைக்கட்டுகிருன் ஸ்ரீ வால்மீகி பகவான்.'' [அபய ப்ரதாந ஸாரம். 9. சரண்ய சரணுகத சங்கலாப:]

"தனக்கு சேஷபூதருமாய் பரதந்த்ரருமாய் இருக்கையாலே தன் கைகளும் கால்களும் போலே தன்னிலே சொருகி, தனித்து ஓர் உபாய பலங்கள் இல்லாதநாலு ராக்ஷஸரோடே கூட உத்தேச்யமான திருவடிகளளவும் செல்ல வொண்ணுதபடி ஹர்ஷ பாரவச்யம் தள்ள, திருவடிகளோடே பிற வித்துவக் குடைத்தான பூமியிலே விழுந்தான். * * * இப்படி ஒருவன் சரணுகதனுய் திருவடிகளைப் பெறும் போது, அவனைப் பற்றினுர்க்கும் அவனுடைய ஆத்மாத்மீய பரஸமர்ப்பணத்திலே துவக்குண்டானபடியாலே, தனித்து பரீக்ஷிப்பாரு மின்றிக்கே, ராஜ ஸேவகருடைய ஸ்தநந்தயருக்குப் போலே புருஷார்த்தலாபம் துல்யமாம் என்று 'பசுர் மநுஷ்ய : பக்ஷீ வா யே ச வைஷ்ணவ ஸம்ஶ்ரயா:, தேநைவ தே ப்ரயாஸ்யந்தி தத்விஷ்ணோ: பரமம் பதம்' இத்யாதிகளில் சொல்லுகிற சாஸ்த்ரார்த்தத்தை வெளியிடுகிருன்: (சதுர்பி: ஸஹராக்ஷஸை:'') [அபய ப்ரதாந ஸாரம். 10. ப்ராப்திப்ரகார ப்ரபஞ்ச:] என்பன இவண் அநுஸந்தேயங்கள்.]

த்வதேக ரக்ஷ்யஸ்ய மம
த்வமேவ கருணுகர,
ந ப்ரவர்த்தய பாபாநி
ப்ரவ்ருத்தாநி நிவ்ருத்தய:. (8)

[ஹே கருணுகர! - அருள்மாகடலே! கருணைக்கடலே!; த்வத் ஏக ரக்ஷ்யஸ்ய - தேவரீர் ஒருவராலேயே காக்கப்படவேண்டிய; மம - அடியேனுக்கு; த்வம் ஏவ - தேவரீரே; பாபாநி - பாபங்களை; ந ப்ரவர்த்தய - நேராமலிருக்கும்படி செய்தருள வேண்டும்; ப்ரவ்ருத்தாநி - நேர்ந்தவைகளை; நிவர்த்தய - நீக்கிவிடவேண்டும்.

பேரருளாளனே! தேவரீராலேயே ரக்ஷிக்கப்படவேண்டிய அடியேனுக்கு தேவரீரே பாபங்களேச் சேரவிடக்கூடாது; முன்பே சேர்ந்திருப்பவைகளே விலக்கிவிடவேண்டும்.

கருணேவள்ளலாகிய வரதனே! தேவரீரை அன்றி வேறு ரக்ஷகன் இல்லாத அடியேனுக்குச் சரணுகதி செய்வதற்கு முன்பு செய்த பாபங்களே ஒழித்து விடும்படியும் சரணுகதிக்குப் பிறகு பாபங்களேச் செய்யாமலிருக்கும்படிக்கும் செய்தருளவேண்டும்.

த்வம் ஏவ - தேவரீரே அடியேன் தலேயில் வேருெரு சுமையைச் சுமத்தாமலும் தேவரீருக்கு அதீநமல்லாத வேருெரு ஸஹகாரியைத் தேடாமலும் செய்தருளவேண்டும்.

"இப்படி ஸபரிகரமான பக்தி யோகத்தில் அதிகரிக்கைக் கீடான விளம்பக்ஷமத்வ ஜ்ஞாந சக்த்யாதிகளின்றிக்கே 'நின்னருளே புரிந்திருந்தேன்,' 'துணியேன் இனி நின்னருளல்லது எனக்கு,' 'உன் திருவருளன்றிக் காப்பரிதால்' என்றிருக்கும் அதிகாரிக்கு அநுஷ்டேயமான சரணவரணம் ஆநுகூல்ய ஸங்கல் பாதிபரிகரயுக்தமாய், 'அநந்ய ஸாத்யே ஸ்வாபீஷ்டே' இத்யாதிகள் படியே ப்ரார்த்த நாந்வித ஸக்ருத் பரந்யாஸ ரூபமாய் இருக்கும். அத்யந்தாகிஞ்சநனுடைய பரந்யாஸத்திற்கு அவ் விஷயத்தில் கர்த்தவ்ய சேஷம் இல்லே; ஸர்வ சக்தியினுடைய ஸங்கல்பத்திற்கு அவாந்தர வ்யாபரராபேக்ஷா நியமம் இல்லே; இரண்டும் இப்படி ஸக்ருத்தாயிருக்கும். ஆசார்யனுலே தன்னே ந்யஸ்த பரனுக அறிந்த சிஷ்யன்தான் பரந்யாஸம் பண்ணுன். இவனுக்குப் பலத்தில் சங்காதிகள் வந்தாலும், ஆசார்யனுடைய பரந்யாஸம் பலாவிநா பூதம். அவன் தனக்காகப் பண்ணின பரந்யாஸம் தனக்குப் ப்ரமிதம் அல்லாதபோது பரந்யாஸம் பண்ணினல் பூர்வ பரந்யாஸம் பலித்தேவிடும்; பின்பிலது மிகுதியான ஸுக்ருதத்தின்படியாம்.

உயர்ந்த திடர்க்கு அடைத்து ஏற்றலாம்படி, தாழ்ச்சியுடைய விஷயத்தில்தானே ப்ரவஹிக்கும்படியான க்ருபாகுணத்தாலே ஸ்வதந்த்ர சேஷிதன் கூருகவும் பேருகவும் மேலுள்ள நன்மைகளே எல்லாம் விளேக்கும். இந்தப்ரபத்தி 'தாவதார்த்தி:' இத்யாதிகள் படியே அங்கமாயும் ஸ்வதந்த்ரமாயும் நின்று ஸகல பல ஸாதநமாகையாலும், அபேக்ஷித ஸித்திக்குக் கைமுதல் அற்று சரண்ய ஸ்வபாவாதி பரிஜ்ஞாநம் உடையார் எல்லார்க்கும் அதிகரிக்கலாம்.

ஆகையாலும், தன்பலம் போலே தேசகாலாதி நியமமில்லாமை யாலும் ஸபரிகரமாக ஸக்ருத் கர்த்தவ்யம் ஆகையாலும், ஸுகர மாகையாலும், 'உபாயஸ்ஸுக்ரச்சாயம் துஷ்கரச்ச மதோ மம' என்னும்படியான வ்யவஸாய கௌரவத்தை உடைத்தாகையாலும், ப்ரஹ்மாஸ்த்ர துல்யை யாகையாலும், யஜ்ஞாதி ஸுக்ருதங்களைப் போலே நாச ப்ரதிபந்தார் ஹ மல்லாமையாலும், சரண்யோப நிஷத்துக்களுக் கெல்லாம் சிரோ பூஷணம் என்னும்படி மேலாய் நிற்கையாலும், இதன் ப்ரபாவம் 'ஸத்கர்மநிரதா:' இத்யாதி களாலே பரக்கப் பேசப்பட்டது.

மற்றுள்ள சாஸ்த்ரார்த்தங்கள் போலே அதிகாரிக் ருத்யமான ப்ரபதநத்தில் சிலருடைய அதிகாரி விசேஷணத்வாதி வ்யபதேசம் ஸித்தோபாய ப்ராதாந்ய பரம். ஶ்ருதியில் ந்யாஸ ப்ரஹ்ம சப்த ஸாமாநாதி கரண்யம் அந்யபரம். 'பகவதநந் யார்ஹ சேஷ பூதனுக்கு பகவதபி மதமில்லாத விஷயத்தில் பக்தியும் ப்ரபத்தியும் கைங்கர்யமும் ஸ்வரூப விருத்தம்' என்னலாயிருக்க, பத்தி யோகத்தை விசேஷித்து ஸ்வரூப விருத்தம் என்றவர்களுக்கு அதிகாரி விசேஷ ஸ்வரூப விரோதத்திலே தாத்பர்யம். தேசகால, அதிகார்யாதி பேதத்தாலே குருலகுவிகல்பம் ப்ராயச்சித்தாதிகள் எல்லாவற்றிலும் ப்ரஸித்தம்.

இப்படி யதாதிகாரம் ஸர்வ கர்ம ப்ராயச்சித்தமாக விதித்த பக்தி ப்ரபத்திகளில் ஒரு வழியிலே இழிந்தவனுக்கு அப்போதே உத்தரபூர்வா காச்லேஷம் ப்ராமாதிக விஷயம். விவேகாதி பூர்த்தி யுடையாருக்கு புத்தி பூர்வோத்தராகம் அநாபத்தில் புகாது ; மந்த விவேகருக்கு மின்னொளிபோலே தோற்றிப் ப்ராயச்சித்தா ந்தமாய் மறையும். ராகாதி காடிந்யம் உடையாருக்கு சிக்ஷா விசேஷங் களாலே பிரிதலுண்டாம். பூர்வாக விநாசம் ப்ராரப்த வ்யதிரிக்த விஷயம். ஸ்வதந்த்ர ப்ரபத்தி நிஷ்டனை செய்த வேள்வியனுக்குப் ப்ராரப்தகார்யமான கர்ம வர்க்கத்தியிலும் ஆர்த்தியின் அளவுக் கீடாக தேஹாந்தராதி ஹேதுவான அம்சம் கழியும். 'யஸ்ய ப்ரஸாதே ஸகலா:,' 'ப்ரஸந்நமபவத் தஸ்மை' இத்யாதிகளின் படியே இவனளவில் ஸத்வஸ்த்தரானவர்கள் எல்லாரும் ஸுப்ர ஸந்நராவார்கள். 'பகவத் பரிக்ரு ஹீதனுக்கு யமவச்யத்வாதிகள் இல்லை' என்னுமிடம் 'பரிஹர மதுஸூதநப்ரபந்நாந்', 'தேவம் சார்ங்கதரம் விஷ்ணும்,' 'நலியும் நரகமும் நைந்த நமனுக்கிங்கு

யாதொன்றுமில்லே,' 'நமன்கூறு செய்துகொண்டிறந்த குற்ற மெண்ணவல்லனே,' 'நாவலிட்டுழி தருகின்ருேம் நமன் தமர் தலேகள் மீதே,' 'நரகமே சுவர்க்கமாகும் நாமங்களுடைய நம்பி' இத்யாதிகளாலே அறியலாம். ஆகையால் இப்படி நிஸ்ஸம்சயனுன இவன் 'ஆள்கின்ருன் ஆழியான் ஆரால் குறைவுடையம்,' 'எத்திஞல் இடர்க்கடல் கிடத்தி ஏழைநெஞ்சமே,' 'திருமால் தலேக்கொண்ட நங்கட் கெங்கே வரும் தீவினேயே' இத்யாதிகளின் படியே நிரபேக்ஷனுய், நிர்பரனுய், நிர்பயனும். மங்கும் அவஸ்தை யில்லாதபோது மடலூரும் அவஸ்தையாய் மாக வைகுந்தம் காண் பதற்கு மனம் ஏகம் எண்ணியிருக்கும்.

முன்செய்த வினேத்திரளின் முளேத்த தன்றி
முற்றுள்ள முதலரிந்து முளேத்த கூற்றிற்
றன்செய்ய திருவருளா லிசைவு பார்த்துத்
தழல்சேர்ந்த தூலமெனத் தானே தீர்த்துப்
பின்செய்த வினேயினினே வொன்ரு தொன்றும்
பிழைபொறுத்து வேறுளது விரகான் மாற்று
மென்செய்ய தாமரைக்கட் பெருமா னெண்ண
மெண்ணுதா ரெட்டிரண்டு மெண்ணு தாரே.
—(ஸ்ரீபரம பதஸோபாநம். 5. ப்ரஸாதநபர்வம்.)

[முன்பு செய்த பாபக்கூட்டத்தில் பலன் கொடுக்கத் தொடங் கிய பாபம் தவிர கைம்முதலாக உள்ள பாபங்களே முழுதும் போக்கி, பயன்கொடுக்கத் தொடங்கிய பாகத்தில் ப்ரபந்நனுடைய அங்கீகாரத்தை எதிர்பார்த்து அவன் விரும்பிய காலத்தில் தன் னுடைய ருஜுவான கிருபையால் அக்நியில் சேர்ந்த பஞ்சு என் னும்படி தானே போக்கி ப்ரபத்திக்குப் பிறகு செய்யும் பாபங்களில் அறிவு இல்லாமல், தெரியாமல், நேர்கின்ற பாபங்களேப் பொறுத்து, தெரிந்து செய்யவேண்டியதாய்த் தீர்ந்த குற்றத்தை பிராயச்சித்தம் முதலியவற்றில் மூட்டிப் போக்குபவனுன சிவந்த தாமரைபோன்ற கண்களேயுடைய எனக்கு நாதனுன ஸர்வேசுவர னுடைய திருவுள்ளத்தின் போக்கை அறியாத மானிடர் திருமந்தி ரம், துவயம், சரமசுலோகம் என்னும் இரகஸியத் திரயத்தை அறி யாதவர்களே.] என்பன இங்கு அநுஸந்திக்கத்தக்கன.

ப்ராரப்தேதர பூர்வபாபமகிலம்
ப்ராமாதிகம் சோத்தரம்
ந்யாஸேந க்ஷபயந்நநப்யுபகத
ப்ராரப்த கண்டஞ்சந:,
தீபூர்வோத்தர பாப்மநா மஜநநா
ஜ்ஞாதேபிதந்நிஷ்க்ருதே:
கௌடில்யேஸதி சிக்ஷயாப்யநகயந்
க்ரோடீகரோதி ப்ரபு:.

—[ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம். அபராத பரிஹாராதிகாரம்.]

[சேதநனுடைய கர்மங்கள் ப்ராரப்தம், ஸஞ்சிதம் என இரு வகைப்படும். பலன் கொடுக்கத் தொடங்கிய கர்மம் ப்ராரப்தம் எனப்பெறும். பின் ஒரு காலத்தில் பலன் அளிப்பதற்காகத் தனியாய்க் குவிந்து மூட்டையாய் இருப்பது ஸஞ்சிதம் எனப்படும். பக்தியோகம் ஸஞ்சித கர்மங்களை மாத்திரம் போக்கும். ப்ரபத்தி, ஸஞ்சித கர்மங்களைப் போக்கி, ப்ராரப்தத்தில் நாம் இந்தச் சரீரம் உள்ளவரை பலனை அநுபவிக்க வேண்டிய கர்மங்களைத் தவிர மீதியுள்ளவற்றையும் போக்கிவிடுகின்றது; ப்ரபத்திக்குப் பிறகு அறியாமல் செய்யும் பாபங்களை இவனிடம் சேராதபடி நீக்கிவிடுகின்றது; கால தேசங்களைக் கொண்டு மனப்பூர்வமாகச் செய்யும்படி நேர்ந்த பாபங்களையும் ப்ராயச்சித்தாதிகளைக் கொண்டு ஒழித்துவிடுகின்றது. மனப்பூர்வமாய்ச் செய்யும் பாபங்கள் நீங்கும் வகை பின்வருமாறு:—பாபம் செய்ய நேரிட்டதற்கு வருந்திப் பச்சாத்தாபம் அடைவதால் கால்பங்கும், பிறகு பாபம் செய்யாது நிறுத்திவிடுவதால் கால்பங்கும், ப்ராயச்சித்தம் செய்ய முயல்வதால் கால்பங்கும், ப்ராயச்சித்தம் செய்து முடிப்பதால் கால்பங்கும் ஆக, பாபம் முழுவதும் தீர்கிறது. ப்ராயச்சித்தங்களில் சிறந்தது மறுபடியும் ப்ரபத்தி செய்வதே; இதுவே ப்ராயச்சித்த ப்ரபத்தி யெனப்படும். ப்ராயச்சித்தம் செய்யாத புருடர் இவ்வுலகிலேயே சில தண்டனையைப் பெறுவர். ஆக, எவ்வகையிலும் ப்ரபந்நனுக்கு நரகமோ மறு பிறவியோ கிடையாது. இச்சரீரம் உள்ள வரையிலும் உள்ள விளம்பத்தைக் கூடப் பொறுக்காது உடனே முக்தி வேண்டும் என்பவனுக்கு உடனேயே

ஸகல கர்மங்களையும் போக்கிப் பலனை நல்குகின்றது. இத்தகைய பெருமை பக்தி யோகத்திற்கு இல்லை. என்பதுங் காண்க.]

அக்ருத்யாநாஞ்ச கரணம்
க்ருத்யாநாம் வர்ஜநம் ச மே,
க்ஷமஸ்வ நிகிலம் தேவ
ப்ரணதார்த்திஹர ப்ரபோ (9)

[ப்ரணத ஆர்த்தி ஹர !—சரணுகதர்களுடைய ஆர்த்தியைப் போக்குபவனே !' ஆச்ரிதர்களுடைய அகில துக்கங்களையும் அறவே போக்குபவனே !; ப்ரபோ !—ஸர்வஸ்வாமியே !, ஸமர்த்தனுய் ஸ்வாமியானவனே !; தேவ - தேவனே !, லீலாரஸப்ரவ்ருத்தனே !, ஜகத் ஸ்ருஷ்டி முதலிய வியாபாரங்களை லீலையாகவுடையவனே !; மே - அடியேனுடைய ; அக்ருத்யாநாம் - செய்யத்தகாதவைகளுடைய ; கரணம் ச - செய்தலையும் ; க்ருத்யாநாம் - செய்யத்தக்கவைகளின், செய்யவேண்டுமவற்றினுடைய ; வர்ஜநம் ச - விடுதலையும் ; நிகிலம் - இந்த அனைத்தையும், எல்லாவற்றையும் ; க்ஷமஸ்வ - பொறுத்தருளவேண்டும்.

அடைந்தவர்களுடைய வருத்தங்கள் அகற்றுபவனே ! ஸர்வவிதமான சக்தி உடையவனே ! தேவப்பெருமாளே ! அடியேனது செய்யாதன செய்கை, செய்யவேண்டியதை விடுகையாகிய அனைத்தையும் பொறுத்து அருளவேண்டும்.

சரணுகதர்களுடைய துன்பம் அனைத்தையும் தொலைக்கும் ஸர்வ ஸ்வாமியான தேவாதி தேவனே ! அடியேனுடைய அக்ருத்யம் செய்தலையும், செய்யத்தக்க க்ருத்யங்களைச் செய்யாது விடுதலையும் க்ஷமித்தருளவேண்டும்.

பாபங்கள் இரண்டுவகைப்படும். அவையாவன : அக்ருத்ய கரணம், க்ருத்யாகரணம் என்பன. சாஸ்த்ரங்களில் செய்யக் கூடாதன என்று விலக்கப் பட்டவைகளைச் செய்வது அக்ருத்ய கரணம். சாஸ்த்ரங்களில் அவசியம் செய்யவேண்டியன என்று விதிக்கப் பெற்ற காரியங்களைச் செய்யாமல் இருப்பது க்ருத்யாகரணம். இவையனைத்தையும் ஸர்வ ஸ்வாமியாய் ப்ரணதார்த்திஹரனுன தேவரீர் க்ஷமித்தருளவேண்டும் என்று பிரார்த்தித்தபடி. தேவ !—“பொன்னகில் சேர்ந்தலைக் கும்புனல் வேகை வட

கரையிற், றென்ன னுகந்து தொழுந்தேன வேதியர் தெய்வ மொன்றே.'' —(தேசிகமாலை, பன்னிருநாமம். 10)

ஜகத்ஸ்ருஷ்டி முதலிய வியாபாரங்களை லீலையாகவுடையவன். "லோகவத்துலீலா கைவல்யம்'' என்பது ப்ரஹ்மஸூத்ரம் மன்னர்கள் பந்தாடுவதை விளையாட்டாகக் கொண்டிருப்பதுபோல் பரமாத்மாவும் ஜகத் ஸ்ருஷ்டி முதலியவற்றை விளையாட்டாகக் கொண்டிருக்கிறுர். அதனுலேயே இந்த உலகத்திற்கு 'லீலாவிபூதி' என்று பெயர். ஸ்ரீ பாஷ்யகாரரும் "அகில புவந ஜந்ம ஸ்தேம பங்காதி லீலே'' என்று அகில உலகங்களையும் உண்டாக்கி, அளித்து, அழிப்பதையே லீலையாக உடையவன் பகவான் என்று அருளிச் செய்திருக்கிறுர். பிள்ளை லோகாசாரியரும் "இதற்கு ப்ரயோஜநம் கேவலலீலை'' என்றுர். லீலை என்றல் விளையாட்டு. அஃதாவது—அப்பொழுது உண்டாகிற ஆனந்தத்தையொழியப் பின்வரும் பலனை எதிர்பாராமல் செய்யப்படும் செய்கையே விளையாட்டு.

"துன்பமும் இன்பமு மாகிய
செய்வினை யாய்உல கங்களுமாய்
மன்பல் லுயிர்களு மாகிப்
பலபல மாய மயக்குக்களால்
இன்புறு மிவ்விளை யாட்டுடை
யானைப்பெற் றேதுமல் லலிலனே.''

—(திருவாய்மொழி. 3-10-7)

என்பர் நம்மாழ்வார்.

"உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட் டுடையா ரவர்
தலைவர் அன்னவர்க் கேசரண் நாங்களே.''

—(இராமாவதாரம். பாலகாண்டம்.
கடவுள் வாழ்த்து. 1.)

என்பர் கம்பநாட்டாழ்வான்.

"மநோ வாக்காயை ரநாதிகால ப்ரவ்ருத்த அநந்த அக்ருத்ய கரண க்ருத்யாகரண பகவதபசார பாகவத அபசார அஸஹ்யாப சாரரூப நாநாவிதா நந்தாபசாராந் ஆரப்தகார்யாந் அநாரப்த கார்யாந் க்ருதாந் கரிஷ்யமாணாஞ்ச ஸர்வாநசேஷத: க்ஷமஸ்வ."
—(சரணுகதிகத்யம்.)

[மனம், வாக்கு, சரீரம் என்கிற மூன்று உறுப்புகளினுலும், அடி தெரியாத நெடுநாளாக விளைந்த அளவில்லாத செய்யத் தகாத காரியங்களைச் செய்தலும், செய்யவேண்டியதைச் செய்யா தொழிவதும், எம்பெருமான் திறத்தில் அபசாரப்படுவதும், அவன் அடியார் திறத்தில் அபசாரப்படுகையும், பொறுக்க வொண்ணுதபடி அபசாரப்படுகையும் ஆக இவ்வாறுள்ள பலவகைப்பட்ட கணக்கற்ற குற்றங்களை பலன் கொடுக்க ஆரம்பித்தவைகளையும், பலன் அளிக்க ஆரம்பியாமல் இருப்பவை களையும், முன்பு செய்யப்பட்டவைகளையும், செய்யப்படுகிறவை களையும், செய்யப்போகிறவைகளையும் இந்த அனைத்தையும் அணுவளவும் மிஞ்சாதபடி பொறுத்தருளவேண்டும் என்று அருளிச் செய்திருப்பது இவண் அநுஸந்தேயம்.]

ஸ்ரீமந் நியத பஞ்சாங்கம்
மத்ரக்ஷண பரார்ப்பணம்,
அசீகர: ஸ்வயம் ஸ்வஸ்மிந்
அதோஹ மிஹ நிர்ப்பர:. (10)

[**ஸ்ரீமந்** - திருமாமகள்கேள்வனுன நாராயணனே!; **நியத பஞ்ச அங்கம்** - நீங்காத ஐந்து அங்கங்களை உடையதான; **மத் ரக்ஷண பர அர்ப்பணம்** - அடியேனுடைய ரக்ஷாபர ஸமர்ப்பணத்தை; **ஸ்வயம்** - தானுகவே; **ஸ்வஸ்மிந்** - தன் னிடத்தில்; **அசீகர:** - செய்தீர்; **அத:** - ஆகையால்; **அஹம்** - அடியேன்; **இஹ** - அடியேனுடைய ரக்ஷணவிஷயத்தில்; **நிர்ப்பர:** - பொறுப்பில்லாதவனுனேன். 'ஸ்ரீமாந்', 'அசீகரத்' என்பன பாடபேதங்கள். அப்பொழுது ஸ்ரீவிசிஷ்டனுன நாராயணன் செய்து கொண்டான் என்பது பொருள்.

ஐந்து அங்கங்களோடு கூடின அடியேன் ரக்ஷிப்பதாகிற பரஸமர்ப்பணத்தைத்தானே தன்னிடத்திலேயே பெருந்தேவீ நாயிகாஸமேத தேவராஜன் செய்து கொண்டான். ஆகையினுல்

6A/2-71